
தர்மசக்கரம்



துந்துபி ௵ வைகாசி ௴ சக்கரம் 31 ஆரம் 5

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன்; திருச்சி ஜில்லா.

குற்ருலத்தில் பருவ அந்தர்யோகம்

15—6—82 முதல் 15—8—82 முடிய

திருக்குற்ருலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் 1982ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 15ஆம்தேதி முடிய இரண்டுமாதங்களுக்குக் கீழ்க்கண்ட சாதனை முறைப்படி அந்தர்யோகம்நடைபெறும். கடிதம் மூலம் குற்ருலத்துக்கு எழுதி முற்கூட்டி அனுமதி பெற்று ஒருவர் மூன்று தினங்களுக்குக் குறையாமலும், பத்துத் தினங்களுக்கு மேற்படாமலும், இந்த இரண்டு மாதங்களுக்கு நடைபெறும் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்பது வீதம் ஆச்ரமத்துக்கு வந்தபின் நேரில் செலுத்திஞல் போதுமானது. படுக்கை வசதிக்குத் தேவையானதை உடன் கொண்டுவரவேண்டும். தாய்மார்களும் பருவ அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் தங்குவதற்குத் தனி இடவசதி இருக்கிறது. நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும், 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளும் அந்தர்யோகத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
திருப்பள்ளியெழுச்சி, தியானம், நாமஜபம்	4-30	5-00
ஐந்தருவி ஸ்நானம்	5-00	6-30
தியானம்	7-00	7-30
சிற்றுண்டி	7-30	
பஜனை	10-00	10-30
உபந்யாசம்	10-30	11-00
தியானம்	11-00	11-15
அர்ச்சனை, தீபாராதனை	11-15	11-30
உணவு	12-00	

மாலை

	மணிமுதல்	மணிவரை
பஜனை	3-00	3-30
உபந்யாசம்	3-30	4-00
தியானம்	4-00	4-15
சிற்றுண்டி	4-15	
நாமபஜனை, ஆரத்ரிகம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-30	
சத் சம்பாஷணை	8-00	8-30

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
குற்ருலம்-627 802, (வழி) தென்காசி

சுவாமி குஹானந்த

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை — 639 115, திருச்சி ஜில்லா.

இக்குருகுல உயர்நிலைப்பள்ளியில் 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களில் மட்டும் புதிய மாணவர்களுக்கு, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றை நேரில் பரிசோதித்த பின் இடமளிக்கப்படும். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30ஆம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். நுழைவு தேர்வுகள் அன்று நடத்தப்பெற்று தேர்வு முடிவுகள் அன்றிரவே அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்ப வேண்டியதில்லை. மற்றநாட்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. இலவசமாகவோ, குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. போதனுமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர் 75 பை. தபால் தலை அனுப்பி "வித்யாவன குருகுல சட்ட திட்டங்கள்" என்ற புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளுங்கள்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31 | **துந்துபி ௵ வைகாசி ௴** | *ஆரம் 5*

பொருளடக்கம்

பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. *100* அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. *12* செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. *200* அல்லது ஆண்டு வருவாய் ரூ. *2400*க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூபாய் *12-00* செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

திருச்சி ஜில்லா—துறையூரில் 23—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெரியார் மாவட்டம்—சிவன்மலையில் 23—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சஷ்டி விழா சங்க மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

தென்ஆற்காடு ஜில்லா—கண்டாச்சிபுரத்தில் 30—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 30—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு அகஸ்தியர் திருக்கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 6—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 2-00ம மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சையில் 13—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: மேலராஜவீதி ஸ்ரீகொங்கணேஸ்வரர் ஆலயம்.
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4 30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

பாண்டிச்சேரியில் 13—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சொசியெத்தே ப்ரோக் ரேஸிஸ்த் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—ராசிபுரத்தில் 13—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஆத்தூரில் 13—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சுந்தரேஸ்வரி திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31 | துந்துபி ௵ வைகாசி ௴ | ஆரம் 5

பிரார்த்தனை

त्वां योगिनश्चिन्तयन्ति त्वां यजन्ते च यज्विनः ।
हव्यकव्यभुगेकस्त्वं पितृदेवस्वरूपधृक् ॥

— विष्णुपुराणम्

த்வாம் யோகினச்சின்தயந்தி த்வாம் யஜந்தே ச யஜ்வின: ।
ஹவ்ய கவ்ய புகேகஸ்த்வம் பித்ருதேவஸ்வரூபத்ருக் ॥

— விஷ்ணுபுராணம்

இறைவா, நீயே விண்ணவர்களும் தென்புலத்தாரும் ஆகி, அன்னவர்களுக்கு மாந்தர் படைக்கும் வேள்வி நிவேதனத்தை ஏற்றுக்கொள்ளுகிறாய்.

அனைத்துமாய் நின்றாயே யான்வேறே நின்னை
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே

— தாயுமானவர்

அருள் விருந்து

நல்லார் எதைக் குறித்தும் முணுமுணுப்பதில்லை.

தன்னைத்தானே கட்டியாள்பவன் நல்ல அறிஞன் ஆகிறான்.

சோதனை என்னும் புயல்காற்று என்னை அசைக்கமாட்டாது.

பாரமார்த்திகப் பெருவாழ்வு பிறர் யாரையும் துன்புறுத்த மாட்டாது.

மேலான எண்ணங்களில் திளைத்திருப்பது மேலான சத்சங்கத்துக்கு நிகர்.

ஒழுக்கம் என்னும் வாளுக்குப் பிந்தியவைகள் அரசர்கள் ஏந்திய வாள்கள்.

தீங்குக்குக் கைம்மாருகப் பிறர்க்கு நலனையே எடுத்து வழங்குபவன் அழகன் ஆகிறான்.

பிறருக்கு நலனை வழங்குவதற்கேற்ப நமக்கு நலன் விரைவில் வந்து அமைகிறது.

தளர்வைத் தகர்க்கவும், உறுதிப்பாட்டை வளர்க்கவும், மானுட வாழ்வு அமைந்துள்ளது.

வாய்க்கிற கஷ்டதசையைச் சரியாகப் பயன்படுத்துவதன் வாயிலாக மனிதன் ஆத்ம பரிபாகம் அடைகிறான்.

எனக்கு நான் கட்டியுள்ள கோட்டை நம்பிக்கை, உறுதிப்பாடு, அன்பு, ஆர்வம் ஆகியவற்றைச் சுவர்களாகக் கொண்டுள்ளது.

அல்பமான இந்திரிய சுகத்துக்காக மனிதன் படாதபாடுபடுகிறான். ஆனால் ஆத்ம சாதனையை முன்னிட்டுச் சிரமப்பட அவன் தயங்குகிறான்.

மனிதன் தனக்குத்தானே பிடித்து வைத்திருக்கும் கீழ்மைகள் அனைத்தையும் ஒதுக்கித்தள்ளுவது புத்தர் புகட்டியுள்ள நிர்வாண நிலையாம்.

கனவில் துன்புறுபவனுக்கு அதினின்று விழித்தெழுவதே மருந்தாம். அங்ஙனம் பிரபஞ்ச வாழ்வு என்னும் அல்லலுக்கு ஆத்மபோதம் ஒன்றே மருந்தாம்.

சுக்கான் இல்லாது ஓடும் படகு எதிரில் இருக்கும் முதற் பாறையிலேயே மோதி உடைந்துபட்டுப்போம். தன்னடக்கமில்லாத மானுடன் ஒருவனின் கதியும் அத்தகையதேயாம்.

செயல் ஒன்று தன்னளவில் பாபமோ, புண்ணியமோ ஆகாது. அதை நிகழ்த்துபவனுடைய நோக்கத்தையும் சூழ்நிலையையும் முன்னிட்டு அது பாபமாகவோ புண்ணியமாகவோ வடிவெடுக்கிறது.

பரமஹம்சர் புகட்டிய
பெருநெறி விளக்கம்

குருவுக்குப் பக்தியுடன் பணிவிடை பண்ணுவதன் வாயிலாகச் சிஷ்யன் பண்பாடுகளனைத்தையும் அடையப் பெறுபவன் ஆகின்றான். அத்தகைய வாய்ப்பு இப்பொழுது மகேந்திரருக்குத் தற்செயலாக வந்து வாய்ப்பதாயிற்று. பரமஹம்சதேவரின் ஈரவஸ்திரங்களைக் காயப்போடுதல், அவருடைய பாதங்களை வருடிக் கொடுத்தல் ஆகிய குற்றேவல்களை மகேந்திரர் மகிழ்வுடன் நிறைவேற்றினார். அத்தகைய வாய்ப்புத் தமக்குக் கிடைத்தது ஈசுவர அனுக்ரஹத்தாலேயே என அவர் உணர்ந்தார்.

பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் மொழிந்ததாவது: "இந்நாட்களில் இத்தகைய உணர்வு எனக்கு ஏன் வந்துள்ளது என்பதை நீ இயம்பக் கூடுமா? தாமிரம், பித்தளை போன்ற உலோகங்களால் செய்யப்பட்டுள்ள பாத்திரம் எதையும் தீண்ட எனக்கு இயலாது போயிருக்கிறது. பித்தளைப் பாண்டம் ஒன்றை நான் தொட்டபொழுது கைவிரலைக் குளவி தீண்டியது போன்று வலி உண்டாயிற்று. அவ்வலியோ தாங்கமுடியாத பாங்கில் கை முழுவதும் பரவியது. ஆயினும் பித்தளைஜாடி ஒன்றை நான் கையாளவேண்டிய நெருக்கடியிலிருக்கிறேன். அதைக்கொண்டு நான் நீர் எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் ஒரு துணியைக்கொண்டு அப்பாண்டத்தைச் சுற்றிலும் மூடி அது என் கையில் படாதவண்ணம் எடுத்துச் செல்கிறேன். தப்பித் தவறி கை அப்பாத்திரத்தின்மீது பட்டால் உடனே வலி உண்டாகிறது. அவ்வலியோ மிகக் கொடியது. அதைத் தாங்க முடியவில்லை. அந்நிலையில் அம்பிகையிடம் நான் செய்த பிரார்த்தனையாவது: 'ஓ தாயே இத்தகைய செயலை நான் மறுபடியும் செய்ய மாட்டேன். இப்பொழுது நான் செய்த குற்றத்தை மன்னித்தருள்வாயாக.'

"இளைய நரேந்திரன் இடையிடையே என்னைப் பார்க்க வருகிறான். அவனுடைய உற்றார் உறவினர் அவன் இங்கு வருவதை ஆட்சேபிக்க மாட்டார்களா? அவன் தூய்மையே வடிவெடுத்தவன். காமம் இன்னதென்று அறியாத குற்றமற்ற இளைஞன் ஆவான் அவன்."

மகேந்திரர்: "அவ்விளைஞன் தங்கள் அருளுக்குப் பாத்திரமாயிருக்கின்றான்."

பரமஹம்சதேவர்: "அது உண்மையே. மேலும் அவன் கேட்கின்ற பாரமார்த்திக உண்மைகளை மறைந்துபட்டுப் போகாதபடி தன் உள்ளத்தில் வைத்திருப்பதாக அவன் இயம்புகிறான். அவன் என்னிடம் சொன்னதாவது, 'நான் சிறுவனாயிருந்தபொழுது கடவுளைக் காணவில்லையே' என்று இடையிடையே கண்ணீர் சிந்திப் பலநாட்கள் அழுதேன்."

இங்ஙனம் பரமஹம்சதேவரும் மகேந்திரரும் இந்த இளைய பக்தனைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தபொழுது மகேந்திரர் பள்ளிக்குத் திரும்பிச் சென்று தம் கடமையை ஆற்ற மறந்துவிட்டாரோ என்று பக்தர் ஒருவர் அவருக்கு ஞாபகமூட்டினார்.

பரமஹம்சதேவர்: "இப்பொழுது மணி என்ன?"

பக்தர் ஒருவர்: "ஒன்று அடிக்கப் பத்து நிமிஷம் பாக்கி."

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): "நீ இப்பொழுது போகலாம். உனக்கு நேரம் ஆயிற்று. உன்னுடைய கடமைகளை அப்படியே விட்டபடி நீ இங்கு வந்துள்ளாய். (லாட்டுவைப் பார்த்து) ராக்கால் எங்கே?"

லாட்டு: "ஐயனே, அவன் தன் வீட்டுக்குத் திரும்பிப் போயிருக்கிறான்."

பரமஹம்சதேவர்: "என்ன என்னைப் பாராது அவன் திரும்பிப் போய்விட்டானா?"

அன்று பிற்பகலிலே பள்ளிக்கூட அலுவல்கள் முற்றுப் பெற்றன பிறகு மகேந்திரர் மீண்டும் ஒருமுறை பலராமருடைய வீட்டுக்குப் போனார்.

பரமஹம்சதேவர் பக்தர்களும், சிஷ்யர்களும் புடைசூழ அவ்வீட்டின் முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தார். அங்ஙனம் கூடியிருந்தவர்களுள் கிரீஷ்சந்திரகோஷ், சுரேஷ், பலராம்,

லாட்டு, கனிலால் ஆகியவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பரமஹம்சதேவர் முகவிலாசத்தில் இனிய புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. அதன் விளைவாக அம்மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்கள் அனைவருடைய முகங்களிலும் ஆனந்தம் ததும்பிக்கொண்டிருந்தது. அவ்வேளையிலே ஆங்கு வந்து சேர்ந்த மகேந்திரருக்குப் பரமஹம்சரின் அருகில் அமருவதற்கு அனுமதி கிடைத்தது.

பரமஹம்சதேவர் (கிரீஷரைப் பார்த்து): "இவ்விஷயத்தை நீ நரேந்திரனோடு உரையாடுவாயாக. அவன் என்ன சொல்லுகின்றான் என்று பார்ப்போம்?"

கிரிஷ்: "பரவஸ்து அகண்டம் என்று நரேந்திரன் சொல்லுகின்றான். கட்புலனாகின்ற பொருள்களுக்கும், மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்டது பரவஸ்து. அப்பரவஸ்துவின் ஓர் அம்சமாகக் கூடத் தோன்றியுள்ளவைகள் இடம்பெறமாட்டா. அகண்டத்திற்கு அம்சங்கள் எங்கே? அகண்ட வஸ்துவுக்கும் பிரபஞ்சத்தில் தோன்றியிருப்பவைகளுக்கும் பொதுநிலை ஏதுமில்லை."

பரமஹம்சதேவர்: "பரவஸ்து அகண்டம் என்பது உண்மை. ஆயினும் அப்பெரிய வஸ்துவின் சாரம் மானுடவடிவத்தில் ஒரு சிறிதளவாவது தன்னை விளக்கிக்காட்ட வல்லதாயிருக்கிறது. அங்ஙனம் தன்னை விளக்குவது அப்பரவஸ்துவின் திருவுளப்பாங்கேயாம். பரவஸ்துவானது தன்னை மானுட வடிவத்தில் விளக்க வல்லதேயாம். ஆயினும் எந்த உபமானத்தைக்கொண்டும் அச்செயலை விளக்கிக்காட்ட நமக்கு இயலாது. சாக்ஷாத்காரத்தின் வாயிலாகவே ஆத்மசாதகன் ஒருவன் அக்கோட்பாட்டைத் தனக்குத்தானே அறிந்துகொள்ள வல்லவனாகிறான். உபமானத்தின் வாயிலாக ஏதோ ஒரு சிறிதளவுதான் இக்கோட்பாட்டை நாம் அறிந்துகொள்ள வல்லவராகிறோம். பசு ஒன்றன் கொம்பையோ, வாலையோ, காலையோ தொடுவதால் நாம் பசுவைத்தான் தொடுகிறோம். ஆனால் பசு ஒன்று தன் மடியின் வாயிலாக நமக்குத் தந்துதவுகின்ற பால் ஒன்றுதான் நமக்கு முக்கியமானது. பரம்பொருள் அவதார மூர்த்தியாக வருவதைப் பசுவின் மடியோடு ஒப்பிடலாம். மக்களுக்குப் பக்தியையும் பேரன்பையும் புகட்டுதல் பொருட்டே பரவஸ்து யுகந்தோறும் மானுட வடிவத்தில் அவதரிக்கிறது."

கிரீஷ்: "பரவஸ்துவைப்பற்றி மானுடன் ஒருவன் ஒன்றையுமே அறிந்துகொள்ள முடியாது. பரம்பொருள் அகண்ட வஸ்து. 'அந்த அகண்ட வஸ்துவை அல்ப மானுடன் எங்ஙனம் கிரஹிக்க வல்லவனாவான்?' என்று நரேந்திரன் இயம்புகிறான்."

பரமஹம்சதேவர் (கிரீஷரிடம் இயம்பியதாவது): "கடவுளின் தத்துவத்தைப் பற்றி மக்களுள் யார்தான் உள்ளபடி அறிந்துகொள்ள வல்லவனாகின்றான்? ஈசனுடைய விபூதி பெரியதாயிருக்கலாம், சிறியதாயிருக்கலாம். அதை உள்ளபடி அறிந்துகொள்ள மக்களுள் யாருக்குமே இயலாது. மேலும் கடவுளின் மகிமைகள் அனைத்தையும் அறிந்துகொள்ள மனிதனுக்கு அவசியம் யாது உள்ளது? சுவானுபூதியில் தனக்கு எட்டியவளவில் அவனுடைய மகிமையை மனிதன் அறிந்துகொண்டால் போதுமானது. கடவுளை நேரே அனுபூதியில் காண முடியாவிட்டால் அவருடைய அவதாரத்தை நாம் காண்போமாகில் அது கடவுளைக் கண்டதற்கு நிகராகிறது. மானுடன் ஒருவன் கங்காநதிக்குச் சென்று அதில் பாய்கிற ஜலத்தைத் தொடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். பிறகு அவன், 'நான் கங்கையைப் பார்க்கவும், அதைத் தொட்டு உணரவும் செய்திருக்கிறேன்' என்று இயம்புவான். அம்மனிதன் இங்ஙனம் இயம்புதற்குக் கங்காநதியை ஹரித்துவாரத்திலிருந்து கங்காசாகரம் வரையில் சென்று பார்க்கவோ, தொட்டுப்பார்க்கவோ அவசியமில்லை.

"நான் உன் கையைத் தொட்டால், அது உன்னைத் தொடுவதற்கு நிகராகிறது அல்லவா? மானுடன் ஒருவன் கடலுக்குச்சென்று அதில் அலை வீசிக்கொண்டு உருண்டு ஓடி வருகிற ஜலத்தின் ஒரு பகுதியைத் தொட்டால் அது கடலைத் தொட்டதற்கு நிகராகிறது. நெருப்பானது எல்லாப் பொருட்களிலும் தோன்றாநிலையில் இடம் பெற்று இருக்கிறது. ஆயினும் அதனமைப்பு மிகைபட்ட பாங்கில் விறகுக்கட்டையில் அமைந்திருப்பது உண்மை."

கிரீஷ் (புன்னகை பூத்தவராகப் பகருகிறார்):

" எனக்குத் தீ தேவை. அது அகப்படக்கூடிய இடம் இன்னதென்று கண்டு பிடித்து ஆங்கு நான் செல்வேன்."

பரமஹம்சதேவர் (புன்னகையுடன்): "ஆம். ஐம்பூதங்களில் ஒன்ருகிய நெருப்பு, சிறப்பாக விறகுக் கட்டையில் அமைந்திருப்பது தேற்றம். கடவுளைக் காண நீ விரும்புவாயாகில் அவருடைய சாந்நித்தியத்தை மனிதனிடத்துக் கண்டு பழகுவாயாக. மற்ற உயிர்களிடத்தில் அவருடைய சாந்நித்தியத்தைக் காண்பதை விட அதிகமாக மனிதனிடத்து அதைக் காண்கிருேம். மானுடன் ஒருவனிடத்துப் பராபக்தியைக் காண்பாயாகில், பிரேமை அவனிடத்துப் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்குமாகில், பக்தியின் வேகத்தால் பைத்தியம் பிடித்தவனுக அவன் தென்படுவானுகில், அன்பின் வேகம் வெறிபிடித்த பாங்கில் அவனிடத்துத் தென்படுமாகில், அத்தகைய மூர்த்தியின் வடிவத்தில் இறைவன் தாமே எழுந்தருளியிருக்கின்ருர் என்று அறிந்து கொள்வாயாக."

(மகேந்திரரைப்பார்த்து) "ஈசனே அனைத்துமாய் இலங்குகின்ருர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் வெவ்வேறு உயிர்களிடத்து அவருடைய சாந்நித்தியம் தாரதம்மியத்தோடு இலங்குவதை நீ காண்பாயாக. அவதார மூர்த்தி ஒருவரின் வாயிலாக அவருடைய மகிமைகள் அனைத்தும் உச்சநிலையில் ஒளிர்கின்றன. இன்னும் சில அவதார மூர்த்திகளிடத்து ஈசனுடைய விபூதிகள் முழுவதும் வெளிப்படுகின்றன. ஈசன் அருள் மானுட வடிவத்தில் அவதார மூர்த்தியாக மிளிர்கிறது."

கிரீஷ் சந்திரகோஷ் கூறியது: " கடவுள் சொல்லுக்கும், சிந்தைக்கும் அப்பாற்பட்டவர் என்று நரேந்திரன் நவிலுகிருன்."

பரமஹம்சதேவர்: "அவன் இயம்புவது முற்றிலும் மெய்யாகாது. பண்படாத மனதுக்குக் கடவுள் எட்டாதவர் என்பதில் ஐயமில்லை. ஆனல் சாதனத்தின் வாயிலாகச் சுத்தியடைந்து வருகிற மனதைக் கொண்டு நிச்சயமாகவே கடவுளை அறிந்து கொள்ளலாம். மனதும் புத்தியும், எப்பொழுது காமத்தினின்றும், காசு ஆசையினின்றும் விடுபடுகின்றனவோ அப்பொழுது அவைகள் பண்பட்டுத் தூயவைகளாகின்றன. தூய மனதும், தூய புத்தியும் ஒன்றேயாம். மலம் நீங்கப்பெற்றுத் தூயதான மனதைக் கொண்டு மனிதன் கடவுளை அறிந்துகொள்ளலாம். பண்டைக் காலத்து முனிவர்களும், ரிஷிகளும் கடவுள் தரிசனம் அடையப் பெற்ருர்கள் அல்லவா? சுத்தியடைந்த அந்தக்கரணத்தைக் கொண்டு எங்கும் நிறைபொருளாகிய பரம்பொருளைச் சுவானுபூதியில் அவர்கள் கண்டறிந்தார்கள்."

கிரீஷ்: (புன்னகை பூத்தவராக) " சம்வாதத்தில் நரேந்திரனை நான் தோற்கடித்தேன்."

பரமஹம்சதேவர்: "அப்படியன்று. 'கடவுள் தாமே மானுட வடிவத்தில் அவதரிக்கிருர் என்னும் கொள்கையில் கிரீஷ் சந்திரகோஷர் ஆழ்ந்து மூழ்கியிருக்கையில் நான் அவர்கொள்கைக்குத் தடைபண்ண யாது உளது? அத்தகைய தீவிர விசுவாசத்தைக் கலக்க முயலுவது முறையன்று.' இங்ஙனம் நரேந்திரன் என்னிடம் இயம்பினன்."

கிரீஷ் (புன்னகை பூத்தவராக): " ஐயனே, பதப்பிரயோகத்திலும், வாக்குவாதத்திலும் நாங்கள் நிபுணர்கள். ஆனல் மகேந்திரரோ ஒன்றும் அறிந்துகொள்ளாதவர் போன்று வாய் பொத்தி வெறுமனே இருக்கிருர். அவர் மனதிற்குள் என்னென்ன எண்ணங்கள்தாம் புதைந்திருக்கின்றனவோ அவைகளை யாரே அறியவல்லவர்? தாங்கள் அதைப்பற்றிப் பகர வேண்டும்." பரமஹம்சதேவர் பகரலாயினர்.

"கீழ்க்கண்ட பொருள்களைப்பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஓயாது உளறிக்கொண்டு இருப்பவன், எவ்வளவு தான் முயன்ருலும் பிறரால் அறிந்துகொள்ள முடியாதபடி தன் மனதை ஆழ்ந்து புதைத்து வைத்திருப்பவன், சமய அனுஷ்டானத்துக்குப் புறச் சின்னமாகத் தன்காதுகளுக்கு அருகில் துளசிப் பத்திரங்களை அணிந்திருக்கும் வேஷதாரி, கற்புக்கு அறிகுறியாக மிகை படத் தன் முகத்தை மேலாடையைக்கொண்டு மூடிக்கொண்டிருப்பவள், ஒரு தடவை நீராடினல் உடனே காய்ச்சலை உண்டு பண்ணக் கூடிய பாசி நிறைந்த தடாகம். மற்று, வாய் பொத்தியிருக்கும் மகேந்திரன் போக்கு இவைகளினின்று முற்றிலும் மாறுபட்டதாம். அவன் யாண்டும் மேலான விஷயங்களில் கண்ணுங் கருத்துமாயிருப்பவன்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-26. சன்னல்பின்ன லான சகலமெனும் குப்பை
[யிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநா ளெந்
[நாளோ.

இயற்கையை ஆராய்ந்தால் உண்மை ஒன்று வெளியாகிறது. பயன்படக்கூடிய பொருள் ஒன்றைப் பக்குவப்படுத்துதற்குப் பயன்படாத வேறு பல பொருள்கள் துணைபுரிகின்றன. இதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். பயன்படுகிற தேங்காயை உண்டுபண்ணும் தென்னைமரம் நிலம், நீர், காற்று, வெயில் இவைகளைப் பயன்படுத்தி வளர்கிறது. அத்தென்னை மரத்தைப் பாழ்படுத்துகிற வண்டு முதலிய எதிரிகளிடத்திருந்து அதைக் காப்பாற்றுவது மனிதர்களுடைய கடமை. உயர வளர்ந்தான பிறகு அத்தென்னையி லின்று குரும்பை தோன்றி வந்து முதிர்ந்து காயாகிறது. அக்காயோ, மட்டை, ஓடு முதலியவைகளைக் கொண்டு உள்ளே வடிவெடுக்கும் தேங்காய்ப் பருப்பைத் தான் காப்பாற்றுகின்றது. அத் தேங்காயைப் பயன்படுத்த விரும்புகின்றவன் அதன் பொருட்டுச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும். எவையெல்லாம் தேங்காய் உருவாவதற்குத் துணை புரிந்தனவோ அவையாவையும் பிறகு மனிதன் சன்னல் பின்னலாகக் கருதக் கடமைப்பட்டிருக்கிறான். ஈண்டு இதற்கு உபமானம் ஒன்று அவசியம். இதே தென்னம்பிள்ளையையோ, இதற்கு நிகராக மாஞ்செடி ஒன்றையோ வைத்து வளர்க்க முயலுபவன் அவைகளுக்கு வேலி கட்டுகிறான். வேலி கட்டாவிட்டால் ஆடு மாடுகள் மிதித்தும், இலைகளைக் கடித்தும் பாழ்படுத்திவிடும். அப்படிப் பாழாகாத வண்ணம் அவைகளைப் பாதுகாத்தல் பொருட்டு வேலிகட்டியே ஆகவேண்டும். கட்டி வைத்துள்ள வேலியை, செடியை வளர்ப்பதற்கு நிகராகப் பாதுகாத்து வைத்தாகவேண்டும். செடி நன்றாக வளர்ந்தான பிறகு வேலியை அகற்ற மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். அப்படி அகற்றவிட்டால் பாதுகாத்த வேலியே செடி மரமாக வளருவதற்குப் பேரிடைஞ்சலாக அமைகிறது. ஒரு தருணத்தில் தேவையாயிருப்பது மற்றொரு தருணத்தில் தடையாகிறது. இது இயற்கையின் கூறு. அத்தகைய சிக்கல்களிலிருந்து விடுவித்த பிறகே தேங்காய் தனக்குப் பயன்படுகிறது.

கிட்டத்தட்ட இதே பாங்கில் ஜீவாத்மன் பரமாத்மனோடு ஒன்றுபடுவதற்கான முறைகளை இயற்கைத் தாய் நல்கி வருகிறாள். சிற்றுயிராக வடிவெடுத்திருக்கும் ஜீவாத்மன் பேருயிராகப் பரிணமித்தல் பொருட்டு விதவிதமான பிறவிகளை எட்டுக்கிறது. ஒவ்வொரு பிறவியிலும் அதற்கேற்ற உதவியை இயற்கைத் தாய் புரிந்து வருகிறாள். இங்ஙனம் அனந்தங்கோடி பிறவிகள் வாயிலாக அந்த ஜீவாத்மன் மானுட நிலையை எட்டுகிறது. மானுட நிலையை எட்டிய பிறகு பலப்பல பிறவிகள் வாயிலாக அம்மனிதன் மனபரிபாகம் அடைகிறான். முற்றிலும் மனபரிபாகம் அடைந்திருப்பவனுக்கே இப்பிரபஞ்ச வாழ்வு யாண்டும் தனக்குச் சொந்தமானது அன்று என்னும் உண்மை விளங்குகிறது. வீடுபெற நில் என்னும் கோட்பாட்டின் உட்கருத்து அப்பொழுது அவனுக்கு விளங்குகிறது. மேற்கொண்டு எத்தனைதான் பிறவிகள் எடுத்தாலும் இப்பிரபஞ்ச வாழ்வு தனக்குச் சொந்தமானது அன்று என்னும் விவேகத்தில் அவன் உறுதி பெறுகிறான். பொம்மைகளை வைத்து விளையாடிய குழந்தைக்கு ஒரு படித்தரத்தில் அப்பொம்மைகளிடத்து விரக்தி தட்டுகிறது. அப்பொழுது அவைகளையெல்லாம் உதைத்துத் தள்ளிவிட்டு அது தன் தாயை அழைத்து அழுகிறது. அதே பாங்கில் விரக்தி புருஷனாகிய ஜீவாத்மன் பரமாத்மனிடத்து அதிவிரைவில் ஒன்றுபட வேண்டும் என்னும் அருள் நாட்டம் பூணுகிறான். விவேகம் என்னும் ஞானக்கினியைக் கொண்டு, இதுகாறும் அவன் வைத்திருந்த பிரபஞ்ச பற்றுதல்களனைத்தையும் கொளுத்தித் தள்ளுகிறான். தனக்கு யாண்டும் மூலப் பொருளாயிருப்பவன் சிவன். ஆதலால் அவன் முன்னவன் என மொழியப்படுகிறான். உலகப் பற்றை அறவே ஒதுக்கித் தள்ளுதல் ஒன்றே

முன்னவனுகிய முழுமுதல் பொருளை அடைதற்கு உற்ற உபாயம் என்னும் கருத்து இக் கண்ணியில் அடங்கியிருக்கிறது.

6-27. மாயா விகார மலமொழிசுத் தாவஸ்தை
தோயா வருளைத் தொடருநாள் எந்நாளோ.

மாயா என்னும் சொல்லைச் சரியாக அறிந்து கொள்ளுகின்ற ஆத்மசாதகர்கள் மிகச் சிலரே யாவர். இப்பிரபஞ்சத்துக்கு மாயை என்பது மற்றொரு பெயர். சதா மாறியமையும் பாங்குடையது எதுவோ அது மாயை. வானத்திலே சஞ்சரிக்கும் மேகம் ஒன்றைச் சான்ருக எடுத்துக்கொள்ளலாம். அம்மேகத்தின் வடிவம் சதா மாறியமைந்துகொண்டிருக்கிறது. அப்படி மாறியமைவதற்கிடையில் அதன் மூலப் பொருளுக்குப் பழுது ஏதுமில்லை. அது எடுக்கும் வடிவங்கள் நிலையற்றவை. மாறுபடும் தன்மையுடையவை. அந்த வடிவங்கள் மாயா காரியங்கள். ஆனல் அப்பு (நீர்) தானே மாயா காரியமன்று. அது யாண்டும் இருந்தது இருந்தபடி இருக்கிறது. பொருளாகிய அப்பு என்னும் பொருளுக்குப் பழுது ஏதுமில்லை.

யாண்டும் இருந்தது இருந்தபடியாயிருப்பது நிர்விகாரம் என்னும் பெயர் பெறுகிறது. ஐம் பூதங்களுள் யாண்டும் இருந்தது இருந்தபடியாயிருப்பது ஆகாசம். ஏனைய நான்கு பூதங்களும் காலமெல்லாம் விகாரப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதற்கு இக்காலத்திய திரைப்படத்தைச் சான்ருக எடுத்துக் கொள்ளலாம். திரை ஒன்று யாண்டும் இருந்தது இருந்தபடியிருக்கிறது. அந்த அளவில் அது நிர்விகாரம். அதன் மீது ஆரோபிக்கப்படுகின்ற வெளிச்சமும் நிழலும் சேர்ந்து வடிவங்கள் என்னும் விகாரத்தை உண்டுபண்ணுகின்றன. மனிதன் வாழ்ந்து வருகின்ற இவ்வையக வாழ்வில் விகாரங்கள் அல்லது வேறுபட்டுத் தோன்றும் காட்சிகள் சதா வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றன. குழந்தைப் பருவம் என்பது ஒரு விகாரம். சிறுவன் என்பது மற்றொரு விகாரம். யுவன் என்பது மற்றொரு விகாரம். காளைப்பருவம் என்பதும், வயோதிகம் என்பதும் விகாரங்கள். இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்ருகவரும் உடல் கூறுகளனைத்தின் விகாரங்களுக்கும் சாட்சியாய், நிர்விகாரியாய் உள்ளேயிருப்பது ஆத்ம சொரூபம். ஒரு விகாரம் மறைந்துபட்டுப்போய் மற்றொரு விகாரம் உருவெடுக்கிறது. இப்படி உருவெடுக்கும் செயல் மாயா காரியம். திரைப்படத்திற்கு ஆதாரமாயிருக்கும் திரை எங்ஙனம் விகார மற்றிருக்கிறதோ அங்ஙனம் வாலறிவாகிய ஆத்மா யாண்டும் நிர்விகாரியாம்.

மலம் என்னும் சொல்லுக்குப் பொருளை ஆத்ம சாதகன் அறிந்திருத்தல் வேண்டும். மானுடன் ஒருவன் அமிர்தமாகக் கருதிக் காலையில் அருந்துகிற உணவு மாலையில் மலமாக மாறுகிறது. அதன்பிறகு அது அப்புறப்படுத்தப்படுகிறது. அதனிடத்து இத்தகைய மாறுதல் முற்றிலும் அவசியம். இந்த மாறுதல் இல்லாவிட்டால் வாழ்க்கை நிறைவேருது. இதேவிதத்தில் குழந்தைப் பருவமும் சிறுவன் என்ற பருவமும் யுவன்,காளை,விருத்தன் என்ற பருவங்களும் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றியிருந்து மறைகின்றன. தோற்றத்திற்கு வருகிறபொழுது அவை யாவும் அமிர்த சொரூபம். பயன்பட்டான பிறகு ஒதுக்கித்தள்ளுதற் கேற்ற மலமாக அவைகள் அமைகின்றன. ஜீவாத்மன் தன்னை மாயா காரியங்களாகிய உடல் கூறுகளோடு இணைத்துக்கொள்ளுகின்றபொழுது அவைகள் அமிர்தமாகத் துவங்கி மலமாக முடிவுபெறுகின்றன. எனவே ஆத்ம சொரூபம் இவைகளில் தட்டுப்படாதிருக்கிறது. 'அது மனிதனுடைய நிஜநிலை. மாறியமையும் உடல் உணர்வினின்று ஆத்ம சாதகன் தன்னை விடுவித்துக்கொண்டு ஆத்ம போதத்தில் நிலைத்திருத்தல் வேண்டும். அந்நிலை சுத்த அவஸ்தை என்றும், சுத்த சைதன்யம் என்றும், நிர்விகாரம் என்றும் அழைக்கப்படுகின்றது. விகாரப்படுகின்ற படக்காட்சியில் திரை தன்மயமாயிருப்பதுபோன்று ஆத்ம சைதன்யம் யாண்டும் தன்மயமாயிருக்கிறது. அதுவே மனிதனுடைய நிஜநிலை. அறியாமையின் விளைவாகப் பிரபஞ்சத்தின் விகாரங்களோடு தன்னை இணைத்துக்கொள்ளுதல் மாசுபடிந்துள்ள கீழ்நிலையாம். ஆத்ம சொரூபம் யாண்டும் தன்மயமாயிருப்பது பிரபஞ்சத்தோடு தோயாத நிலையாம். அதில் நாட்டம் கொண்டு உறுதிபெறுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

பொதுமக்களும் வருணங்களும்

(சுவாமி விவேகானந்தர்)

நம் நாட்டுப் பொதுமக்கள் உலக விஷயங்களைப்பற்றி அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் ஏழ்மையை ஒருகுற்றமாகக் கருதுவதில்லை. நம் நாட்டுப் பொதுமக்கள் கொடூரம் வாய்ந்தவர்கள் அல்லர். மேனாடுகளில் என் உடையைப் பார்த்ததும் என்னை வந்து சூழ்ந்து கொண்டார்கள். இந்தியாவில் உடைக்காக மனிதனை வேடிக்கை பார்க்கிற கூட்டத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. மேனாட்டில் ஏழைகள் பேய்கள்போன்றுநடந்துகொள்கிறார்கள். அவர்களோடு ஒப்பிட்டால் நம் நாட்டுப் பொதுமக்களைத் தேவர்கள் என்றே சொல்லலாம். நம் நாட்டு ஏழை மக்களின் நிலையை உயர்த்துவது சுலபம். ஐரோப்பிய நாட்டுப் பொதுமக்களை விட நம் நாட்டுப் பொதுமக்கள் எல்லாவிதத்திலும் நாகரிகம் உடையவர்களென்றே சொல்லலாம். நம் நாட்டுப் பொதுமக்கள் கல்வி இல்லாதவர்களென்றும், கல்வியில் விருப்பம் இல்லாதவர்களென்றும், செய்திகளைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் இல்லாதவர்களென்றும் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன். ஒரு காலத்தில் அதை நான் நம்பி வந்தேன். ஆனால் நம் நாட்டுப் பொதுமக்கள் மற்ற நாட்டவர்களைப் போன்று விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை இப்பொழுது நான் என் அனுபவத்தின் மூலம் அறிகிறேன்.

பிராமணர்கள் சமய சாஸ்திரங்களைத் தங்களுக்கே உரிய தனி உரிமைகளாக ஆக்கிக் கொண்டார்கள். அச்சாஸ்திரங்களை யார் படிக்கலாம், யார் படிக்கக்கூடாது என்பன போன்ற விதி முறைகளையும் தங்கள் கைக்குள்ளேயே வைத்துக் கொண்டார்கள். மேலும் இந்தியாவிலுள்ள மற்ற ஜாதி மக்களைத் தாழ்ந்தவர்களென்றும், கீழானவர்களென்றும், தீயவர்களென்றும் அடிக்கடி கூறி அவர்களை அவ்விதமே நம்பும்படி செய்து விட்டார்கள். ஒரு மனிதனைப் பார்த்து 'நீ தாழ்ந்தவன், மோசமானவன்' என்று சொல்லிக்கொண்டே இருந்தால் அவன் நாளடைவில் தன்னை அத்தகையவனென்றே நினைத்துக்கொள்கின்றான். இதைத் தான் மனோவசியம் என்று சொல்லுகிறோம்.

ஜாதியை எடுத்துக்கொண்டால் அது இனம் என்னும் பொருளைக் குறிக்கும். பண்டைக் காலத்தில் ஜாதி என்ற சொல் தனி மனிதனுடைய இயல்பை வெளிப்படுத்துவது என்ற கருத்தில் வழங்கப்பட்டு வந்தது.

சத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் ஒவ்வொரு மனிதனிடமும் தாரதம்மியமாக அமைந்திருக்கின்றன. அங்ஙனமே பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணங்களும் ஒவ்வொரு மனிதனிடமும் வெவ்வேறு பாங்குகளில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு குணம் மேலோங்கும். மனிதனிடம் எந்தக் குணம் மேலோங்கி இருக்கிறதோ அதற்கேற்ப நடந்துகொள்வான். ஒரு மனிதன் சம்பளத்துக்காகப் பிறருக்கு வேலை செய்யும் பொழுது அவன் சூத்திரனாகின்றான். லாபம் கருதிப் பொருள் ஈட்ட வியாபாரம் செய்யும் காலத்து அவன் வைசியனாகின்றான். கேட்டை அழிப்பதற்காகப் போரில் ஈடுபடுகின்ற பொழுது அம்மனிதன் க்ஷத்திரியனாகின்றான். ஈசுவர தியானம் செய்யும் பொழுதும், சத் விஷயம் பேசும்பொழுதும் அவன் பிராமணன் ஆகின்றான். எனவே ஒரு மனிதன் தன்னை ஒரு வருணத்திலிருந்து மற்றொரு வருணத்துக்கு மாற்றிக்கொள்ளமுடியும். அப்படி வருணத்தில் தங்களை மாற்றிக்கொள்ளலாம் என்பதை விசுவாமித்திரர் பிராமணர் ஆனதும், பரசுராமர் க்ஷத்திரியர் ஆனதும் நிரூபிக்கின்கின்றன. ஒரு பிராமணனுடைய மகன் பிராமணனாகவே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவன் பிராமணன் ஆகலாம்; ஆகாமலும் போகலாம். ஆகவே பிறப்பை முன்னிட்டு வருணம் அமைவதில்லை. குணத்தை முன்னிட்டுத்தான் வருணம் அமைகின்றது. குணத்தை மாற்றியமைக்கும் பொழுது வருணமும் மாறி அமைகின்றது. சத்வகுணம் மேலோங்கப் பெற்றவன் பிராமணன் ஆகின்றான். சத்வகுணத்தை வளர்த்து ஒவ்வொருவனும் தன்னை மேலோன் ஆக்கிக்கொள்ளலாம்.

அம்பிகையின் மஹிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1981ல் நவராத்திரி விழாவில் சேலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

(136ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நாம் மானுடராகப் பிறந்திருப்பது கடவுள் வழிபாட்டுக்கேயாம். கடவுள் வழிபாட்டின் மூலம் சாதாரண மனிதனைத் தகைசான்ற பெருமகனாக ஆக்கலாம்"—இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ளார். கடவுள் வழிபாடு செய்தும் ஒருவன் மேன்மை அடையாவிட்டால் அவன் உண்மையான கடவுள் வழிபாடு செய்தவன் அல்லன். அவன் காலத்தை வீண் போக்கியவனாகின்றான். பள்ளியில் ஒரு வகுப்பில் படிக்கின்ற மாணாக்கன் ஓர் ஆண்டு படித்தபின் அதே வகுப்பில் இருப்பானாகில் அவன் கடை மாணாக்கனாகின்றான். மனிதன் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையாவிட்டால் அவன் கடைமனிதனாகக் கருதப்படுவான். மானுட நிலையைக் கடந்து தெய்வீக நிலையை அடைவதற்கே நாம் இவ்வுலகத்துக்கு வந்திருக்கின்றோம்.

உலகிலுள்ள உயிர்களிடத்தில் இறைவன் குடிகொண்டுள்ளார். இவ்வுண்மையை மனிதன் அறிந்துகொள்கின்றவளவு மற்ற உயிர்கள் அறிந்துகொள்ள முடியாது. 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்று மாணிக்கவாசகர் பகர்கிறார். இக் கோட்பாட்டை மனிதன் அறிந்துகொள்ள முடியுமேயன்றி மற்ற உயிர்கள் அறிந்துகொள்ள முடியாது. உள்ளத்தினுள் இறைவன் குடிகொண்டுள்ளான் என்று அறிந்த பிறகு அதற்கேற்ற பெருநிலையில் வாழ்வதற்கு நம் வாழ்க்கையைத் திருத்தி அமைக்க வேண்டும். மற்ற உயிர்களைப் பெருமைப்படுத்துமளவு நாம் பெருமை அடைகின்றோம். மற்ற உயிர்களைச் சிறுமைப்படுத்துமளவு நாம் சிறுமை அடைகின்றோம். உயிர் வகைகள் அனைத்தினிடத்தும் வைக்கின்ற இணக்கம் தெய்வீக இணக்கமாக இருக்குமாகில் அதன் மூலம் முன்னேற்றம் அடைகின்றோம். மக்களைத் தெய்வங்களாகப் பாவித்து அவர்களுக்குப் பணிவிடை செய்துவந்தால் அது நரயக்ஞம் எனப் பெயர் பெறுகின்றது. நரயக்ஞம் செய்வதற்கேற்ப நாம் வாழ்வில் மேன்மை அடைகின்றோம்.

வாழ்வில் எல்லாப் பயிற்சிகளும் பெற்றாக வேண்டும். உக்கிர மூர்த்தியாகவிருக்கின்ற மகாகாளியும், நரசிம்ம மூர்த்தியும் நமக்குப் பாடம் புகட்டுகின்றார்கள். வாழ்க்கை கொந்தளிப்பு உடையதாகவிருக்கும் பொழுது அதை நாம் சமாளித்துப் பழகவேண்டும். கடல் அமைதியாகவிருக்கும் பொழுது எந்த மாலுமியும் கப்பலை ஓட்டிச் செல்லுவான். ஆனால் கடல் கொந்தளிப்புடையதாகவிருக்கும் பொழுது அந்தக் கொந்தளிப்பைச் சமாளித்துக் கப்பலைச் செலுத்துபவன்தான் நன்றாகப் பயிற்சிபெற்ற மாலுமியாகின்றான். மேகம் மூடியிருக்கும்பொழுதும், புயல் காற்று அடிக்கும்பொழுதும், கீழே தரை தெரியாது மூடுபனி மறைத்திருக்கும் பொழுதும் விமானத்தைச் செலுத்துபவன்தான் விமானம் செலுத்துவதில் சிறந்த பயிற்சி பெற்றவனாகின்றான். வாழ்க்கையைக் குழப்ப நிலையிலும், நெருக்கடி நிலையிலும் திறமையுடன் வாழ்ந்து வருபவன்தான் சிறந்த வாழ்க்கைப் பயிற்சி பெற்றவனாகின்றான். இயற்கையின் கொந்தளிப்பையும், சண்டை சச்சரவுகளையும், பெரிய புரட்சிகளையும் சமாளிப்பவனே வாழ்க்கையில் முழுப் பயிற்சி பெற்றவனாகின்றான். பயங்கரமான சூழ்நிலையைச் சமாளித்துப் பழகும் பொழுதுதான் நம் வாழ்வு நிறைவாழ்வாக மாறி அமைகின்றது. மகாகாளியின் உருவத்தை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கால சொருபத்தின் தத்துவம் நமக்கு விளங்கும். காலத்தின் வடிவத்தில் அன்னை பராசக்தி இருப்பதால் அவள் காளி என்று அழைக்கப்படுகின்றாள். காலத்தையும் தாண்டிய பெருநிலையில் பரம்பொருள் இருக்கின்றார். உமாதேவியாக இருக்கின்ற பொழுது அன்னை பராசக்தி பொன்மேனியளாகப் பிரகாசித்துக்கொண்டு இருக்கின்றாள். மகாகாளியாக இருக்கின்றபொழுது கன்னங்கறேர் என்று இருக்கின்றாள். இறந்த காலம் நம்முடைய காட்சிக்கு அப்பாற்பட்டது. எதிர்காலம் எப்படி அமையும் என்

பது நமக்குத் தெரியாது. நிகழ்காலத்தை ஓர் அளவு அறிகின்றோம். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களுள் இறந்தகாலம் மனதைவிட்டுப் போய்விட்டது; எதிர்காலம் மனதில் கற்பனையாக இருக்கிறது. நிகழ்காலம்தான் யாண்டும் இருக்கிறது. நிகழ்காலத்திலும் சிறு பகுதிதான் விளங்குகின்றது. பெரும்பகுதி நமக்கு விளங்குவதில்லை. மனிதனுக்கு இறப்பு நொடிப்பொழுதில் வந்தமையலாம். ஆனால் மனிதன் சாசுவதமாக இருப்பதாக மனக்கோட்டை கட்டுகின்றான். காலம் மனிதனுடைய அறிவுக்கு எட்டாதது. விஞ்ஞானம் பிரபஞ்ச சம்பந்தமான பல உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறது. ஆனால் மரணத்தைப் பற்றி அதனால் அறிந்துகொள்ள முடியவில்லை. காலம் மர்மமாக இருப்பதால்,கால சொரூபிணியாக இருக்கின்ற அன்னை 'பராசக்தி' கருத்துமயமாக இருக்கின்றாள்.

அன்னை பராசக்திக்குத் 'திகம்பரி என்ற பெயரும் உண்டு. திசையை ஆடையாக அணிந்திருக்கின்றாள் என்பது அதற்குப் பொருள். நம் உடல் எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கிறது. அதனால் அதற்கு ஆடை அணிவிக்க முடியும். வடிவில் பெரியதாக இருக்கின்ற இமயமலைக்கு ஆடை அணிவிக்க முடியாது. பராசக்தி எங்கும் வியாபகமாக இருக்கின்றாள். எனவே அவளுக்கு எந்த ஆடையும் அணிவிக்க முடியாது. திசைகளே அவளுக்கு ஆடைகளாக அமைந்திருக்கின்றன. இந்தக் கோட்பாட்டைத் திகம்பரியாக இருக்கின்ற அன்னை விளக்குகின்றாள்.

காளிகாதேவிக்கு ஸ்மசானம் இருப்பிடமாகின்றது. ஸ்மசானத்தில் ருத்ரமூர்த்திகளாக சிவனும் அம்பிகையும் இருக்கின்றார்கள். பிரபஞ்சத்துக்குச் சிருஷ்டியும், ஸ்திதியும், சம்ஹாரமும் உண்டு. ஒரு காலத்தில் தோன்றிய பிரபஞ்சம் மற்றொரு காலத்தில் அழியப் போகின்றது. அதை யாரும் தடுக்க முடியாது. துடைத்துத் தள்ளுகின்ற செயலைக் காளிகாதேவியும், ருத்ரனும் செய்கிறார்கள். சாதாரண காலங்களில் உயிர்கள் மடிவதைக் காண்கின்றோம். ஓர் உயிர் மடிந்து போனால் அதைக் குறித்துச் சிலகாலம் வருந்துகின்றோம். பிறகு அதை நாம் மறந்து விடுகின்றோம். சில சமயத்தில் பூகம்பம், புயல் காற்று, கடல் கொந்தளிப்பு, வெள்ளப்பெருக்குப் போன்ற அசாதாரணமான நிலைகளில் ஏராளமான மக்கள் மடிந்துபோகிறார்கள். இப்படிப் பெருவாரியான அழிவுக்கும் இயற்கையில் இடம் உண்டு. இவற்றிற்கெல்லாம் அப்பால் அன்னை பராசக்தி நொடிப்பொழுதில் அண்டங்களை அழித்துத்தள்ளிவிடுவாள். அண்டத்தில் உள்ள அனந்தங்கோடி சூரியர்களையும், சந்திரர்களையும் அன்னை பராசக்தி நொடிப்பொழுதில் துடைத்துத் தள்ளிவிடுவாள் என்றால் அவளுடைய பராக்கிரமம்தான் என்னே! அம்பிகையின் இந்தப் பராக்கிரமச் செயலைப்பற்றி நாம் தியானம் செய்தால் நமக்கு ஜீவிதத்திலுள்ள பற்று நீங்கும். ருத்ரமூர்த்தியை வழிபடும்பொழுது நாம் பயத்தை வென்றவர்களாகின்றோம். ஒரு புதிய பட்டணத்துக்கு வந்தவன் சிறிது அச்சப்படுவான். அப்பட்டணத்தின் சூழ்நிலையைப்பற்றி அவன் அறியாததால் அவன் பயத்துக்கு ஆளாகின்றான். பிரபஞ்சத்தினுடைய பாங்கை அறியாதவர்கள் பயத்துக்கு இடம் தருகிறார்கள். பிரபஞ்சத்தினுடைய பாங்கைச் சரியாக அறிந்துகொள்ளுதற்கேற்ப ஒருவன் பயத்தை வெல்லுகின்றான். அன்னை பராசக்தி காளி வடிவத்திலிருந்து பயத்தை வெல்லுவதற்குரிய பயிற்சியை நமக்கு அளிக்கின்றாள். காளி சொரூபத்தை எண்ணிப்பார்க்குமளவு நாம் பயத்தை வெல்லுகின்றோம். பலர் பகலில் சுடுகாட்டுக்குப் போவதற்கே பயந்துகொள்ளுவார்கள். அத்தகைய பயங்கொள்ளிகள் காளிகாதேவியை வழிபடமுடியாது.

பொதுவாகப் பிணத்தைப் பார்க்க மக்கள் பயப்படுவார்கள். வைத்தியராக வருவதற்குப் பயிற்சி பெறுகின்றவர்கள் பிணத்தை அறுத்துப் பழகுகின்றார்கள். பிணத்தை அறுத்துப் பழகப் பழக மரணத்தைக்கண்டு அஞ்சாத பயிற்சி பெறுகின்றார்கள். அஞ்சாதிருப்பதற்குக் காளிகாதேவி பிரபஞ்சத்தில் பயங்கரமான சூழ்நிலையை உண்டு பண்ணுகின்றாள். காற்றைச் சமாளிப்பதற்குப் புயற்காற்றின் மூலமாகவும், நெருப்பைச் சமாளிப்பதற்குப் பெரிய தீ விபத்தின் மூலமாகவும், உலகத்தில்

பயமின்றி வாழ்வதற்குப் பூகம்பம், எரிமலை மூலமாகவும் அன்னை பராசக்தி பயிற்சி அளிக்கின்றாள். பூகம்பத்தையும், எரிமலையையும் சமாளித்துப் பழகுவதற்கு ஜப்பான், அஸ்ஸாம் போன்ற இடங்களில் பெரிய பயிற்சி கிடைக்கின்றது. ஜப்பான், அஸ்ஸாம் போன்ற இடங்களில் வாழும் மக்கள் நாள்தோறும் இரண்டொருமுறை பூகம்பத்தை அனுபவிக்கின்றார்கள். ஆகையால் அவர்களுக்குப் பூகம்பத்தைப் பற்றிய அச்சம் வருவதில்லை. புதிதாக அவ்விடங்களுக்குப் போகின்றவர்கள் பயத்துக்கு ஆளாவார்கள். இயற்கையில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை ஏற்றுப் பழகப் பழகப் பயத்தை வென்று பழகுகின்றோம்.

காளிகாதேவி ஸ்மசானத்தில் தாண்டவமாடுகின்றாள். சிவன் சவமாகப் படுத்திருக்கச் சிவனார் நெஞ்சின் மீது உயிர்களைத் துடைத்துத் தள்ளுகின்ற சம்ஹார தாண்டவத்தை நிகழ்த்துகின்றாள். காளிகாதேவி சிவனார் நெஞ்சின்மீது நின்றுகொண்டு தாண்டவமாடுவதில் தத்துவம் ஒன்று விளக்கப்படுகிறது. அசைகின்ற ஒரு பொருளுக்கு அசையாத பொருள் ஆதாரமாக இருந்தாகவேண்டும். காலம் சதா மாறி அமைந்துகொண்டிருக்கிறது. கால சொரூபிணியாக இருக்கின்ற காளியும் அசைகின்றாள். இயற்கை மாறி அமைந்துகொண்டிருப்பதால் இயற்கை என்னும் பெயர் அதற்கு வந்துள்ளது. பூமியின் அமைப்புச் சதா மாறி அமைந்துகொண்டிருக்கிறது. அப்படி மாறி அமைந்துகொண்டிருப்பதற்கு மாறாத ஒருபொருள் ஆதாரமாக இருக்கிறது. அப்படி ஆதாரமாக இருக்கிற பொருள் அசைவதில்லை. அசைகின்ற பொருளாகிய சக்திக்கு அசையாத சிவன் ஆதாரமாய் இருக்கின்றார். இந்தத் தத்துவத்தைத்தான் அசையாது சவம் போன்று கிடக்கின்ற சிவன்மீது காளிகாதேவி தன் காலை வைத்திருக்கின்ற காட்சி விளக்குகின்றது.

நம் அமைப்பில் உடல், உள்ளம் சதா மாறி அமைந்துகொண்டிருக்கின்றன. அவை எல்லாம் சக்தியின் கூறுகளாகும். அவற்றிற்கு ஆதாரமாக உள்ள பிரக்ஞை அல்லது பேரறிவு மாறி அமைவதில்லை. சிறு குழந்தையாக இருந்தபொழுது இருந்த பிரக்ஞை அல்லது இருக்கிறேன் என்கின்ற உணர்வு யௌவனப்பருவத்திலும், காளைப்பருவத்திலும், விருத்தாப்பியப் பருவத்திலும் மாறாதிருக்கிறது. மரணத்தில் உடல் அழிகின்றது. பிரக்ஞை அழிவதில்லை. இதை உணர்கின்றவன்தான் மரணத்தை வென்றவனாகின்றான்.

பரம்பொருள் யாண்டும் பேருணர்வு மயமாக இருக்கின்றது. அதற்கு அழிவு இல்லை. பேருணர்வு மயமாக இருக்கின்ற சிவன் மீது நிலைமாறி அமையும் காளிகாதேவி நர்த்தனம் புரிந்துகொண்டிருக்கின்றாள். பராசக்தியின் பேரருள் துணைகொண்டுதான் மாறாத சிவபெருமானை நாம் அடையமுடியும்.

குழந்தை முதலில் தாயை அறிகின்றது. தாயின் துணைகொண்டு பின் தந்தையை அறிகின்றது. தாயாக இருக்கின்ற பராசக்தியை அறிந்துகொண்டால் பராசக்தியின் துணைகொண்டு தந்தையாக இருக்கின்ற சிவனை நாம் அறிந்துகொள்ளலாம். இகத்தை அறிந்துகொண்டால் பரத்தையும் அறிந்துகொள்ளலாம். இகத்தைச் சரியாக அறிந்துகொள்ளாவிட்டால் பரத்தை அறிந்துகொள்ள முடியாது. பிரபஞ்சத்தோடு நாம் சரியான இணக்கம் வைக்கத் தெரிந்துகொண்டால் பரத்தை அடைய நம்மைப் பக்குவப்படுத்துபவர்களாகின்றோம். இந்தக் கோட்பாட்டை விளக்குவதற்குக் காளிகாதேவி சிவனார்மீது நர்த்தனம் புரிந்துகொண்டு இருக்கிறாள். காளிகாதேவியைப் பயத்துடன் பார்ப்பவர்களுக்கு அவள் பயம் ஊட்டுபவளாக இருக்கின்றாள். அன்போடு பார்க்கின்றவர்களுக்கு அவள் அனுக்கிரஹ மூர்த்தியாக இருக்கின்றாள். இயற்கையில் வலிவு அற்றவனுக்கு இடம் இல்லை. வலிவுபடைத்தவனே வாழ்க்கைக்குத் தகுதியுடையவன் என்பது கோட்பாடு. வலிவைப் பெறுவதற்குத்தான் இப்பிரபஞ்சம் அமைந்திருக்கின்றது. தேகப்பயிற்சி செய்வது இன்றியமையாதது. கஷ்டமான சூழ்நிலை வருவது வாழ்க்கையில் இன்றியமையாதது. ஆராய்ச்சி செய்து பயத்துக்குரியதை ஒதுக்கித்தள்ளுவது வாழ்க்கையின் இன்றியமையாத பகுதியாகும். வாழ்க்கையின் குறிக்கோள் உறுதிபெறுவது ஆகும். அன்னை பராசக்தி பயங்கர மூர்த்தியாக இருந்து நமக்கு உறுதியளித்து வருகின்றாள்.

பொதுவாக மக்கள் சுடுகாட்டுக்குப் போக அஞ்சுகின்றார்கள். அடிக்கடி சுடுகாட்டுக்குச் செல்பவனுக்கும், அங்கேயே வாழ்ந்திருப்பவனுக்கும் சுடுகாட்டைப்பற்றிப் பயம் இல்லை. காளிகாதேவி உயிர்களைப் பயப்படும் தன்மையிலிருந்து விலக்கிப் பயத்தை வெல்லுவதற்குரிய உபாயத்தைக் காட்டுகின்றாள். காளிகாதேவிக்கு நான்கு கரங்கள் இருக்கின்றன. இடப்பக்கமுள்ள இரண்டு கரங்களுள் ஒன்றில் ஓங்கிய வாளைப் பிடித்திருக்கின்றாள். அந்த வாளில் இரத்தம் சொட்டிக்கொண்டிருக்கிறது. இடப்பக்கமுள்ள மற்றொரு கையில் வெட்டப்பட்ட தலையொன்றைப் பிடித்திருக்கின்றாள். அது அவளுடைய சொருபத்தில் ஒரு பகுதியாகும். வலக்கரங்களில் மேலேயுள்ள கரம் அபயமளிக்கின்றது. மற்றொரு கை சிவனுரை அடைவதற்கு வழிகாட்டுகின்றது. பிரபஞ்சத்தை முறை தவறிக் கையாண்டால் துயரத்துக்குள்ளாவோம். முறைதவறிக் கையாளுகின்றவர்களுக்கு மரணம்தான் தண்டனையாக வந்தமையும். இதைக் காளிகாதேவியின் இடக்கைகள் விளக்குகின்றன. பிரபஞ்சத்தைச் சரியாக அறிந்து கையாளத் தெரிந்துகொண்டால் என்றைக்கும் அஞ்சவேண்டியதில்லை. அம்பிகை அபயம் தந்து சிவனுரை அடைவதற்கு வழி காட்டுகின்றாள். இதனை அம்பிகையின் வலக் கரங்கள் நிரூபிக்கின்றன.

ஆராய்ந்து பார்த்தால் நம் சரீரம் ஒரு சுடுகாடாக இருப்பது விளங்கும். நாள்தோறும் உணவு உண்பதின் வாயிலாக உயிர்த்தத்துவத்தைச் சம்ஹாரம் செய்துகொண்டிருக்கிறோம். உடல் வாழ்வில் நலம் கேடு இரண்டும் சேர்ந்து அமைந்திருக்கின்றன. கேட்டில் ஈடுபடுகின்ற மனிதன் துக்கத்திற்கு ஆளாகி இறுதியில் மரணத்தை அடைகின்றான். மரணம் என்பது எல்லார்க்கும் பொது. ஞானிகளும் மரணத்தை அடைகின்றார்கள் என்று கூறுபவர்கள் இருக்கின்றார்கள். ஞானிகள் அடைவது மரணமன்று. அவர்கள் அன்னையின் அருளுக்குப் பாத்திரமாகி முக்திநிலையை அடைகிறார்கள். இதனைப் பராசக்தி தன் வலக் கைகள் இரண்டின் மூலம் விளக்குகின்றாள்.

இயற்கைத் தாயோடு சரியான இணக்கம் வைக்கத் தெரிந்துகொண்டால் அச்சத்திற்கு இடம் இல்லை. 'அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்'— என்பது ஞானிக்குரியது. அச்சத்துக்கு அடிப்படைக் காரணம் அக்ஞானம். அன்னை பராசக்தி தக்க சூழ்நிலையை அமைத்து அச்சத்தை வெல்லுமாறு செய்கின்றாள். உலக வாழ்வை ஒழுக்கத்தோடு வாழ்ந்து வருவோமானால் அச்சத்துக்கு இடமில்லை. பராசக்தி அச்சத்தைப் போக்குவதோடு, சிவனை அடைவதற்கும் வழிகாட்டுகின்றாள்.

நம்மிடத்தில் சிவபோதம் உணர்ச்சியற்ற சவமாகக் கிடக்கிறது. சிவபோதத்தைப் பெறுதல் வாழ்வின் குறிக்கோள். யார் ஒருவன் தான் ஆத்ம சொருபம் என்று அறிகின்றானோ அவன்தான் சரியான மனிதன். தன்னை உடலாகக் கருதுகின்றவன் அக்ஞானத்தில் உழல்கின்றவன் ஆவான். ஆத்ம சொருபத்தை அறிகின்றவன் ஞானி. தன்னை உடல் சொருபமாகக் கருதுகின்றவன் அச்ஞானி. உடல் என்றைக்கும் அழியக்கூடியது. அது சாசுவதமாக இருப்பதன்று. எது தகனம் ஆகிக் கொண்டிருக்கின்றதோ அது தேகம் எனப்படுகிறது. எது ஜீரணம் ஆய்க்கொண்டிருக்கிறதோ அது சரீரம் எனப்படுகிறது. சரீரத்தில் உணவு தகனம் ஆய்க்கொண்டிருப்பதால் சரீரம் சுடுகாடு எனப்படுகிறது. சரீரம் என்னும் சுடுகாட்டில் வாழ்ந்திருக்கும் நாம் பிரபஞ்ச வாழ்வைச் சரியாகப் பயன்படுத்துவோமானால், பஞ்சேந்திரியங்களைவென்று பழகுவோமானல், ஆசாபாசங்களைத் துடைத்துப் பழகுவோமானல், நிலையற்ற பொருளிலுள்ள பற்றுதலை நீக்குவோமானல் யாண்டும் அழியாது உள்ளத்தில் இலங்கும் பரவஸ்துவைத் தரிசிக்கும் தகுதி நமக்கு வருகிறது. பரமன் பிரக்ஞான சொரூபமாகப் பேரானந்தமாக உள்ளத்தில் யாண்டும் குடிகொண்டுள்ளார். இவ்வுண்மையைச் சுவானுபூதியில் அறிகின்றபொழுது நாம் மரணத்தை வென்றவர்களாகின்றோம். அப்பொழுது நம் வாழ்வு பெருவாழ்வாக நமக்குத் திருந்தி அமைகின்றது.

அன்னை பராசக்தி பயங்கர வடிவத்தில் காளிகாதேவியாக இருந்துகொண்டு பயத்தை ஊட்டி, பயத்தை வெல்லுவதற்கான வழியை

யும் சொல்லிக்கொடுத்து, நம்மை வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாக்குகின்ருள். மக்களாகப் பிறந்திருக்கின்ற நாம், பராசக்தியின் இரண்டு கூறுகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். அம்பிகை, தாயின் நிலையிலிருந்து நம்மைப் பரிபாலித்து வருகின்ருள். நல்ல குடிமகனைத் திருத்தி அமைகின்றவரையிலும் அவள் நம்மீது ஆணை செலுத்துகின்ருள். மனிதன் அமைத்துக்கொண்ட அரசாங்கச் சட்டத்துக்கு உட்பட்டு நடக்கவேண்டும். அதே போன்று அன்னை பராசக்தியின் சட்டத் திட்டங்களுக்கும் நாம் உட்பட்டு நடக்கவேண்டும். அப்படி உட்பட்டு நடப்போமானல் பரத்துக்குரியவர்களாக நாம் மாறி அமைகின்ருேம். மேலும் நம்மை உறுதிப்படுத்துவதற்காகக் கொள்ளை நோய், போர், மரணம் முதலான வைசூலைத் தோற்றுவிக்கின்ருள். இப்பயங்கரமான நிகழ்ச்சிகளைச் சாந்தமாக ஏற்றுப் பழக வேண்டும். அப்படிப் பழகுவது ஆத்மசாதனம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளிகாதேவியை வழிபடு தெய்வமாக எடுத்துக் கொண்டார். பயத்தை வெல்லுவதற்குக் காளிகாதேவியின் உபாசனை அவருக்குப் பயன்பட்டது. நாம் எதற்கு எடுத்தாலும் அஞ்சுபவர்களாக இருக்கின்ருேம். இது நம்மிடத்துள்ள ஒரு கேடு ஆகும். பயத்தை வென்று பழகவேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாவோம்.

மரணத்தோடு விளையாடுகின்றவன் மரணத்திற்கு அஞ்சமாட்டான். காளிகாதேவியையும், ருத்ர மூர்த்தியையும், நரசிம்ம மூர்த்தியையும் உபாசனை பண்ணுகின்றவன் பயத்தைவென்று பழகுகின்ருன். ஆகையால் சிவ சொரூபத்தை மட்டும் உபாசனை செய்தால் போதாது. சிவனை உபாசிக்கின்றவன், சிவனுடைய ருத்ர சொரூபத்தையும் உபாசனை செய்யவேண்டும். அதேபோன்று விஷ்ணுவை உபாசிக்கின்றவன், விஷ்ணுவினுடைய நரசிம்ம வடிவத்தையும் உபாசிக்கவேண்டும். இனி, சக்தியை உபாசிப்பவன் உமாதேவி, லட்சுமி, சரஸ்வதி ஆகியவர்களை உபாசிப்பதோடு, காளிகாதேவி சொருபத்தையும் உபாசிக்க வேண்டும். இப்படி உபாசகன் தெய்வத்தின் பயங்கர வடிவங்களை வழிபடும்பொழுது அவ்வழிபாடு பயத்தை வெல்லுவதற்கு உற்ற உபாயமாக வந்தமைகின்றது. ஆக, மனிதன் பெறவேண்டிய பயிற்சிகளுள் முக்கியமானது பயத்தை வெல்லுதலாகும். மரணத்தைக் கண்டு அஞ்சுதல் பயத்துள் பெரிய பயமாகிறது. மரணத்தின் தத்துவத்தை அறியாததனால் மரணத்தைக் கண்டு அஞ்சுகின்ருேம். நாம் அணிந்துள்ள சட்டையை மாற்றுவதற்கு நிகர் மரணத்தின் செயல். சட்டையை மாற்றுவதை எவ்வளவு விளையாட்டாகச் செய்கின்ருேமோ, அவ்வளவு விளையாட்டாக மரணத்தின் மூலம் உடலை மாற்றத் தெரிந்து கொண்டவன் மரணத்தின் தத்துவத்தை அறிந்தவனுகின்ருன். மரணத்துக்கு அஞ்சிக் கொண்டிருக்கும் பரியந்தம் மனிதன் மரண தத்துவத்தை அறிந்தவனல்லன். ஆத்ம சொருபமாகிய தன்னை மரணம் எப்படி வந்து அணுகும்? ஆத்ம சொரூபம் என்றைக்கும் அழியாதது. ஆயுதங்கள் அதை வெட்டமாட்டா. தீ அதை எரிக்காது. நீர் அதை நனைக்காது. காற்று அதை உலர்த்தாது. இவற்றையெல்லாம் தாண்டிய நிலையில் ஆத்மா உள்ளது. 'நான் அவ்வாத்ம சொரூபமாகையால் இவற்றையெல்லாம் தாண்டிய நிலையில் நானும் இருக்கின்றேன்'. இப்படி ஒருவன் தன்னைப் பற்றி உணரும் பொழுதுதான் அவன் ஞானி ஆகின்ருன். அத்தகைய நிறைஞானத்துக்கு நம்மைப் பக்குவப்படுத்துவதற்குத்தான் அன்னை பராசக்தி காளிகாதேவியாக இருந்துகொண்டு நம்மிடமுள்ள அச்சத்தை அகற்றிவைக்கின்ருள்.

ஞானி மரணத்துக்கு அஞ்சுவதில்லை. பேரரசன் ஒருவன் காட்டில் ஒரு ஞானியைச் சந்தித்தான். ஞானியின் ஆன்மீகக் கவர்ச்சிக்கு அரசன் வசப்பட்டான். அரசன் அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அவருக்கு உபசாரம் செய்யவேண்டுமென்று விரும்பினன். அரசன் தன் அரண்மனைக்கு வருமாறு பணிவோடு அழைத்தான். "இயற்கைத் தாய் வேண்டியதை வேண்டியவாறு எனக்கு அளித்துக் கொண்டிருக்கிருள். இயற்கைத் தாய் அளிக்கும் உபசாரத்திற்கு மேல் நீ உபசாரம் செய்துவிட முடியாது. ஆகையால் நான் இங்கிருந்து வரமுடியாது" என்ருர். அரசன் தன் அதிகாரத்தைச் செலுத்தி அவரைப் பய

முறுத்த முயன்றான். "நான் சக்ரவர்த்தி என் பதை அறிந்துகொள்ளுங்கள். என் ஆணைக்கு மறுத்தால் என் கையிலுள்ள வாளுக்கு இரை ஆவீர்கள்" என்றான் அரசன். ஞானி கொல் லென்று சிரித்தார். "உம்மால் என்னை அழிக்க வும் முடியுமோ? ஆத்மாவை அழிக்கும் சக்தி உன்னிடம் இருக்கிறதா? உன் சக்தியை நான் காண விரும்புகின்றேன்" என்றார் ஞானி. அரசன் செயலற்றவனாக அவர் திருவடிகளில் விழ்ந்தான். தாங்கள் ஆத்ம சொரூபம் என்று உணர்பவர்கள், மரணத்தை வென்றவர்கள் ஆவார்கள்.

மரணத்தை வெல்லும் பயிற்சியை ஊக்கத் தோடு நாம் பெறவேண்டும். மரணத்தைப் பற்றியும், ஆபத்துக்களைப் பற்றியும் சிந்தனை செய்து அவற்றை வெல்லுவதற்கு நம்மை உறுதி படைத்தவர்களாக்கும்பொழுது நம்மை நாம் வல்லவர்களாக்குகின்றோம். தீமையை எதிர்த்துப் போராடுவதற்கு நம்மை ஆயத் தப்படுத்திக்கொள்ள வேண்டும். தீமையைக் கண்டு அஞ்சுபவர்கள் வாழ்க்கையில் முழுமை யான பயிற்சி பெற்றவர்களல்லர். 'நமக்கு எதற்கு இந்தத் தொல்லை' என்று எண்ணுப வர்கள், வாழ்க்கையில் அரைகுறையான பயிற்சிபெற்றவர்களாவார்கள். சாந்த மூர்த்தி யாக இருப்பதற்கிடையில் தீமையை எதிர்த்து வெல்லவும் வேண்டும். ஈண்டு ஸ்ரீ சாரதா தேவியாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்கொள்வோம். ஸ்ரீ சாரதா தேவியார் சாந்தமே வடிவெடுத்தவர். கெட்ட நோக்கத்தோடு ஹரீசன் என்பவன் ஸ்ரீ சாரதா தேவியாரை அணுகினான். அவன் தன்னை ராமகிருஷ்ணருடைய பக்தன் என்று சொல் லிக்கொண்டான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தன்னி டத்து ஆவிர்பவித்துத் தன்னை ஆட்டுவிப்பதா கவும், தான் அவர் போன்று பரவசநிலையில் இருப்பதாகவும், அன்னையின் தலையில் கை வைத்து அவரை ஆசீர்வதிக்க வேண்டுமென்று பாசாங்கு செய்து கொண்டு அன்னையாரைத் தொடுவதற்கு வந்தான். அன்னையார் அவனிட மிருந்து தப்புவதற்காக ஓட முயன்றார். ஹரீசன் அவரைத் துரத்திக் கொண்டே ஓடினான். ஓடிச் சலித்துப்போன அன்னையார் மேலும் 'பொறுத் திருத்தல் தகாது' என்று எண்ணினார். திடீ ரென்று அவன் பக்கம் திரும்பி, தம் காலால் வலிந்து அவனை உதைத்தார். உதையை வாங்கிய அவன் திருகிக்கொண்டு கீழே விழுந் தான். வீராவேசத்துடன் அவன் நெஞ்சின் மீது ஒருகாலை நாட்டி நின்று கொண்டு அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் அவனை நையப்புடைத் தார். ஓயாது தன்மீது விரைந்து விழ்ந்த அடி யைப் பொறுக்க முடியாமல் அவன் நடுநடுங்கி னான். தப்பித்தால் போதுமென்று அவன் நினைக்கின்ற அளவு அன்னையார் அவனை அறைந்து கொண்டே இருந்தார். விட்டால் போதுமென்று அவன் உணர்ந்ததும் அன்னை சாரதாதேவியார் அவனைஎழுந்திருக்கச் சொன் னார். 'திரும்பிப்பார்க்காமல் ஓடிப்போ' என்றார். அவனும் அங்ஙனமே செய்தான். ஸ்ரீசாரதா தேவியார் சாந்தமூர்த்தியாக இருந்ததற்கிடை யில் ஆபத்துவேளையில் வீரலட்சுமியின் வடி வெடுக்க வல்லவராய் இருந்தார் என்பதை மேற்கூறிய நிகழ்ச்சி விளக்கிக் காட்டுகிறது. தீமையை எதிர்த்து வெல்லுவதற்கேற்ற உறு திப்பாடு நம்மிடத்தில் இருந்தால்தான் நம் வாழ்வு நிறைவாழ்வு ஆகும்.

பள்ளியில் படிக்கின்றவன் தேர்வில் வெற்றி பெறுதவரையிலும் எப்படிப் பட்டதாரி என்று அங்கீகரிக்கப்படமாட்டானோ அப்படி மரண பயத்தை வெல்லாதவரையிலும் ஒருவன் ஞானி என்று அங்கீகரிக்கப்படமாட்டான். அன்னை பராசக்தியாகிய காளிகாதேவி தருகின்ற பயிற்சியை முறையாகப் பெறுவோமானால் மரணத்தை வென்றுவிடலாம். வாழ்க்கையின் சொருப உணர்ச்சியைப் பெறலாம்.வாழ்க்கைத் குறிக்கோளாகிய ஆத்ம தத்துவத்தைச் சரியாக அறிந்து,அதை நடைமுறைக்குக்கொண்டு வந்து வீரம் படைத்தவர்களாக நம்மை ஆக்கிக்கொள் வதே அம்பிகையின் உபாசனையாகும். மானுட ஜன்மத்தை நன்குபயன்படுத்துகின்றவாழ்க்கை வாழ்ந்து, அம்பிகையைச் சரியான முறையில் உபாசித்து அம்பிகையின் அனுக்ரஹத்தைப் பெற்றுப் பிரபஞ்ச வாழ்வைப் பெருவாழ்வாக மாற்றி அமைப்போமாக. அப்பெருவாழ்வில் நிறைஞானம் நமக்கு வந்து வாய்க்கிறது. நிறைஞானம் பெறுதல் என்னும் லட்சியத்தை அடைவதற்கு அன்னை பராசக்தி சதா நமக்குத் துணைபுரிந்து வருவாளாக. (முற்றும்)

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

நண்பர்களே! சகோதரர்களே! சென்னையைச் சேர்ந்த சகோதர இந்துக்களே!

மேல் நாட்டில் நம் மதசம்பந்தமாக நான் செய்துள்ள பணி மிகச் சிறுபணியாகும். அப்பணியை நீங்கள் ஏற்றுக்கொண்டது எனக்கு மிக்க திருப்தியைத் தருகிறது. மிகத் தொலைவிலுள்ள அன்னிய நாட்டில் செய்யப்பட்ட என்னுடைய சிறிய வேலையையும், என்னையும் சிறப்பித்ததற்காக அன்று, நான் மகிழ்ச்சி அடைவது. அன்னியப் படையெடுப்புக்கள் புயலுக்குப்பின் புயலாக நம் புனித நாட்டின் மீது ஏற்பட்டுள்ளன. அத்தகைய படையெடுப்பாளர்களுடைய இகழ்ச்சியுரையாலும், நம்முடைய அசட்டுத்தனத்தாலும் நம்முடைய புராதன ஆரிய வர்த்தத்தின் மகிமை மங்கிக் கிடந்தது. ஆரியவர்த்தத்தின் பெருமை என்னும் கட்டடத்தைத் தாங்கியுள்ள கம்பீரமான தூண்களும், அவற்றின் மீதுள்ள அழகிய வளைவுகளும் பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட அன்னியப் படையெடுப்புக்கள் என்னும் வெள்ளங்களினால் அடித்துச் செல்லப்பட்டன. இந்நிலையிலும் நாட்டு மக்களுடைய உள்ளம் நல்ல நிலையிலிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இந்திய மாளிகையின் முக்கியமான கல் பழுதுபட்டுப்போகவில்லை. ஆன்மீக அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்பட்ட 'இறைவன் பெருமை' என்னும் நினைவுச் சின்னமும், உயிர்கள்பால் அவர் கொண்டுள்ள கருணையை விளக்கும் நினைவுச் சின்னங்களும் அசைக்க முடியாத உறுதி பெற்றிருப்பதைக் காண்கின்றேன். இந்தியாவுக்கும், உலகம் முழுவதற்கும் இறைவன் அளிக்கும் உபதேசத்தை அவருடைய அடியார்களுள் அற்பனை நான் எடுத்துச்சென்றேன். அவருடைய புகழை நீங்கள் சிறந்த மனப்பான்மையுடன் போற்றுகின்றீர்கள். உங்கள் உள்ளத்திலுள்ள ஆன்மீக இயல்பினால் இறைவனாலும், இறைவனுடைய உபதேசத்தாலும் வரப்போகும் ஆன்மீகப் பேரலையின் ஆரம்பத்தைக்கண்டுகொண்டீர்கள். அவ் ஆன்மீகப் பேரலை வெகு விரைவில் எதிர்க்க முடியாத சக்தியுடன் இந்தியா முழுவதும் பாயும். அது இந்தியாவிலுள்ள குறைகளையும், பலவீனங்களையும் தன்னுடைய சக்தியினால் அடித்துச் செல்லும்; இந்தியாவை அருள் துறையிலே இறைவன் அமைத்துள்ள உயர்ந்த பீடத்தில் ஏற்றி வைக்கும். இந்தியா இதுவரையிலும் அடைந்துள்ள பெருமையை விட உயர்ந்த பெருமையை அடையும். இந்தியா பல நூற்றாண்டுகளாக மௌனமாக அனுபவித்து வந்த துன்பத்துக்கு வெகுமதியை அடையும். இந்தியா உலகுக்குச் செய்யவேண்டிய ஆன்மீகப் பணியைச் செய்து ஆன்மபோதம் நிறைந்த மனித சமுதாயத்தை உருவாக்கும் பணியைப் பூர்த்திசெய்யும்.

வடஇந்தியாவிலுள்ள மக்கள் தென்னிந்தியர்களாகிய உங்களுக்கு விசேஷ நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தற்காலத்தில் இந்தியாவில் இயங்கிவரும் பெரும்பாலான இயக்க உணர்ச்சிகளுக்குத் தென்னிந்தியா உற்பத்தி இடமாக இருக்கிறது. பெருமைக்குரிய பாஷ்யக்காரர்களும், சங்கரர், ராமானுஜர், மத்வர் போன்ற சரித்திர காலங்களை உருவாக்கிய ஆசாரியர்களும் தென்னிந்தியாவில் தோன்றியுள்ளனர். உலகத்திலுள்ள அத்வைதிகள் யாவரும் சங்கரருக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சங்கரருடைய பெருமை அத்தகையது. தம்முடைய தெய்வீகப் பரிசத்தால் தாழ்த்தப்பட்ட பறையர்களையும் ஆழ்வார்களாக மாற்றிய பெருமை ராமானுஜருடையதாகும். வடநாட்டில் ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் என்னும் மகான் இருந்தார். அவருடைய பெருமை வடநாடு முழுவதும் பரவியிருந்தது. அந்த மகானுடைய அடியார்கள் மத்வரைத் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். அத்தகைய பெருமை மத்துவருக்கு இருந்தது. இன்றுமகூட வாரணாசியின் பெரும் சிறப்புக்களின் வெற்றிச் சின்னத்தை ஏந்தியிருப்பது தென்னாடேயாகும். இமய மலையிலுள்ள புனித ஆலயங்களை நிர்வகித்து வருபவர்கள் தென்னாட்டுத் துறவிகளாவார்

கள். இவற்றிற்கெல்லாம் மேலாகவும், ஆச்சரியப்படத்தக்கதாகவும் உள்ள விஷயம் என்னவென்ருல், தீர்க்கதரிசிகளின் வம்சத்தில் வந்த ஆசாரியர்களுடைய அனுக்ரஹத்தைப் பெற்றவர்களும், அவர்களுடைய ரத்தம் நாடி நரம்புகளிலே ஓடிக் கொண்டிருப்பவர்களுமாகிய நீங்கள் தாம் முதன் முதல் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசத்தைப் போற்றிப் புகழ்ந்து பின்பற்றி வருகிறீர்கள்.

நெடுநாட்டே வேத அறிவுக் களஞ்சியமாக இருந்திருக்கிறது. மூர்க்கத்தனமான அறியாமையினுல் சுருதிக்கு மாருன கருத்துக்களைத் திருப்பித் திருப்பி வலியுறுத்திச் சொன்னபோதிலும், சுருதி ஒன்றே இந்து மதத்தின் பல பிரிவுகளுக்கும் முதுகெலும்பு போன்று அமைந்திருக்கின்றது.

வேதங்களிலுள்ள சம்ஹிதைகளும், பிராமணங்களும் மனித இன சாஸ்திர வல்லுநர்களுக்கும் மொழி சாஸ்திர வல்லுநர்களுக்கும் மிகச் சிறப்புடையவைகளாக அமைந்திருக்கின்றன. வேள்விகள் மூலமாகவும், ஆஹுதிகள் மூலமாகவும், தேவதைகளைத் திருப்திப்படுத்துதல் மூலமாகவும் மனிதன் விரும்பிய பயனைப் பெறலாம். ஆனுல் இவை யாவும் போகத்தைத் தருபவைகளாகவே அமைந்திருக்கின்றன. அவைகள் முக்தியைத் தரும் என்று யாரும் சொன்னதில்லை. ஆகையால் ஞானகாண்டமும், ஆரண்யங்களும், சுருதிகளும் ஆன்மிகத்தைப் புகட்டுவதற்கும் மோட்ச மார்க்கத்துக்கும் பிரமாணங்களாக இருந்து வந்தன. இனியும் அவையே பிரமாணங்களாக அமைந்து இந்திய மக்களை நடாத்திச் செல்லும்.

சனுதனதர்மம் பல பிரிவுகளைக்கொண்டிருக்கிறது. அப்பிரிவுகளிலுள்ள சிக்கல்களில் மனதைப்பறிகொடுத்துச் சனுதன தர்மத்தைச் சரியாகப்புரிந்துகொள்ளாது, விருப்பு வெறுப்புக்களை மக்கள் வளர்த்துக்கொண்டிருக்கிருர்கள். பெரியதில் பெரியதாகவும் சிறியதில் சிறியதாகவும் இருக்கும் பரம்பொருளை உபதேசிக்கும் மதம் சனுதன தர்மமே ஆகும். உலகனைத்துக்கும் ஏற்புடையது சனுதன தர்மமேயாம். நவீன இந்து இளைஞன் சனுதன தர்மத்தைப் புரிந்துகொள்ளாது அக்ஞானத்தில் உழன்று உலகாயதத்தைத் தவிர வேருென்றையும் அறியாத பிற நாட்டினரிடமிருந்து இரண்டாம்தரமான ஆன்மீகத்தைக் கடன் வாங்குகின்ருன். அவன் தன் மூதாதையர்களுடைய மதத்தைப் புரிந்துகொள்ள முடியாதவனுக அதைக் கைவிட்டு'நாஸ்திகன்'என்னும் பயனற்ற இழிநிலையில் இருக்கின்ருன். சமய உணர்வு தூண்டப்பட்டு அதற்கேற்ற செயல்புரியாது மேனுட்டு லோகாயதங்களைக் கீழ்நாட்டு வாழ்க்கையுடன் புகுத்தி அவற்றைச் சுவைக்க விரும்புகின்ருன். "குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதுபோன்று நவீன மூடர்கள் வழி தெரியாது தடுமாறுகின்றனர்" என்ற சுருதியின் கோட்பாட்டை நவீன இளைஞன் மெய்ப்பிப்பது போன்று நடந்து கொள்கின்ருன். சத்குரு ஒருவரால் யாரொருவருக்கு ஆன்மீக எழுச்சி தூண்டப்படுகிறதோ அவரே பந்த பாசத்திலிருந்து விடுபட்டு முக்தியை அடைகின்ருர். பகவான் பாஷ்யக்காரர் அருளிய கருத்தொன்று வருமாறு: "இப்பூவுலகத்தில் கீழ்வரும் மூன்றைப் பெறுவது மிகவும் அரிது. மானுடப் பிறவி, முமுக்ஷுத்வம் அல்லது அருள்வேட்கை, சத்சங்கம் அல்லது மகான்களுடைய கூட்டுறவு ஆகியவை அம்மூன்ருகும். இம்மூன்றையும் பெறுவதற்கு ஈசனுடைய அருளைச்சார்ந்திருக்க வேண்டும். அவருடைய அருளால்தான் இம்மூன்றும் கிட்டும்."

வைசேஷிகம், நையாயிகம், சாங்கியம், யோகம் ஆகிய தரிசனங்களுக்கு அடிப்படையாக அமைந்திருப்பது சுருதிகளேயாகும். பரமாணு, திவ்யாணு, திரிசரேணு என்பவற்றைக் கூரிய மதியைக்கொண்டு ஆராய்வது வைசேஷிகம். ஜாதி, த்ரவ்ய, குணசமவாய என்னும் கொள்கைகளைப் பிரித்து உணர்வது நையாயிகம் எனப்படும். பரிணுமவாதக் கொள்கையை ஆராய்வது சாங்கியம் ஆகும். இவ்வாராய்ச்சிகளின் முடிவாகக் கனிந்த கனியாக அமைந்திருப்பது வியாச சூத்திரங்களாகும். மனுேதத்துவத்தை ஆராய்ச்சி செய்யும் இவ்வனைத்துக்கொள்கைகளுக்கும் அடிப்படையாகச் சுருதிகள் அமைந்திருக்கின்றன. புத்த சமண மதங்களும், தத்துவ நூல்களும் சுருதிகளின் துணைகொண்டே எழுதப்பட்டுள்ளன. ஆனுல் 'ஹிம்சக சுருதிகள்' என்பன பிராமணர்களால் ஏற்படுத்தப்பட்ட இடைச் செருகல்களாகும்.

(தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-165

932. महेशी மஹேசீ — மஹேச்வர னுடைய சொருபத்திலிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சிவமும் சக்தியும் அபின்னம். நெருப்பும் அதனுடைய வெப்பமும் எங்ஙனம் பிரிவு படாது இருக்கின்றனவோ அங்ஙனம் மஹேச் வரனும் மஹேச்வரியும் இணைபிரியாதிருக்கிறார் கள். போற்றுதற்குரிய பெரிய பொருளாக அன்னை பராசக்தி இருப்பதால் அவள் மஹேச் வரீ என இயம்பப் பெறுகிறாள். பிரபஞ்சம் முழுதும் அவளுடைய தோற்றம், அவளுடைய விளையாட்டு, அவளுடைய மஹிமை. உள் ளத்தைக் கவர்ந்து கொள்ளைகொண்டுபோகிற பாங்கில் இயற்கையின் மஹிமை எங்கெல்லாம் வெளியாகின்றதோ ஆங்கெல்லாம் அன்னையின் சாந்நித்தியம் சிறப்புற்று மிளிர்கிறது. வான வெளியிலே கன்னங்கறேரென்று படலம் படல மாக உருண்டு வருகிற மேகங்கள் கார் இருளை உண்டுபண்ணுகின்றன. கண்ணைப் பாழ்படுத் தும் பாங்கில் பளீர் என்று அம்மேகப்படலத் தில் மின்னல் கொடி ஒன்று, வெட்ட வெளியில் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குப் பாய்கிறது. அதைத் தொடர்ந்து காதைத் துளைக்கும் பாங்கில் இடி இடிக்கிறது. இங் ஙனம் கண்ணையும், காதையும் ஸ்தம்பித்துப் போகும்படி செய்வது அன்னை மஹேச்வரியின் விளையாட்டு. ஆத்ம சாதகனுடைய மனதை இவ்வைபவத்தின் வாயிலாக அன்னை தன்மய மாகத் திருத்தியமைக்கின்றாள். இந்த அரிய செயலுக்குத் தலைவணங்காத ஜீவன் யார்தான் ஜகத்தினுள் இருக்கிறான்?

இயற்கையின் மஹிமைகளத்தனையும் ஒன்று சேர்ந்து மலைவளம், நீர்வளம், நிலவளம், குடிவளம் என்ற நான்கின் வாயிலாகத் தோற் றத்துக்கு வருகின்றன. இந்தப்பாங்கில் இயற் கைத் தாயின் மஹிமை வெளியாகிறது. சுவர்க்க லோகத்திற்கு நிகராகப் பூலோகம் பிரதிபிம்பிக் கிறது. இதுவும் அன்னை மகேஸ்வரியின் மஹி மையாம். இங்ஙனம் தோற்றத்துக்கு வந்துள்ள பகுதிகள், வழிபடுபவனுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டுபோகும் பாங்கில்ஆங்காங்கு மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. 'அன்னையின் சாந்நித்தியம்' என்றே அத்தகைய காட்சிகளைப் பற்றிக் கூறவேண்டும். இவையாவுக்கும் மேலாகச் சுத்தசைதன்ய சொரூபிணியாகவே அன்னை பராசக்தி யாண்டும் மிளிர்ந்துகொண் டிருக்கிறாள் என்னும் சீரிய கோட்பாட்டைப் பிரபஞ்சத்தின் தோற்றம் ஆத்மசாதகனுடைய உள்ளத்தில் பதிவுபண்ணுகிறது. இங்ஙனம் ஐம்பொறிகளுக்கும் அறிவுக்கும் அருள்விருந் தாக அன்னை பராசக்தி இலங்குகின்றாள். ஆதலால் அவள் மஹேசீ என ஆராதிக்கப் பெறுகிறாள்.

933. मङ्गलाकृतिः மங்களாக்ருதி:— மங்கள கரமான வடிவங்களில் இலங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

வடிவங்களுள் சிலவற்றை நலன் செய்ய வல்லவைகள் என்று உலக மக்கள் பாராட்டு கின்றனர். வேறு சிலவற்றைக் கொடுமை செய்யும் கெட்டவைகள் என்று ஒதுக்கித்தள்ளு கின்றனர் அல்லது தாங்களே ஒதுங்கி ஓடு கின்றனர். உண்மையில் உலகங்கள் அனைத்து மாகவும் உயிர்கள் அனைத்துமாகவும் இலங்கு பவள் அன்னை பராசக்தியே. அவளுடைய சாந் நித்தியத்தை அகத்திலே காணவல்லார்க்குப் புறத்தில் யாண்டும், யாவும் அன்னையின் வடி வங்களாகவே காட்சி கொடுத்துக்கொண்டிருக் கின்றன. ஆதலால் ஆத்மசாதகனுக்கு அமங் களமானது எதுவும் எங்கும் இல்லவே இல்லை. யாவுமாயிலங்குபவள் அன்னை பராசக்தி. தங் கத்தில் செய்த நகைகளனைத்தும் தங்கமயமாய் இலங்குதற்கு நிகராகப் பிரபஞ்சம் முழுதுமே பக்தனுக்கு அன்னை பராசக்தியின் சொரூப மாம். அமங்களமென்பது பரிபாகம் அடையப் பெறாத பாமரனுடைய கற்பனையாம். ஆதலால் உலக வாழ்க்கையில் உழல்வதற்கிடையில் மங்களகரமான காட்சி எனவும், அமங்களகர மான காட்சி எனவும் ஒன்றோடொன்று முரண் படுகின்ற இரண்டுவிதக் காட்சிகளிருக்கின்றன. மற்று, அன்னையின் அருளுக்குப் பாத்திரமா யிருக்கும் செல்வனுக்கோ, செல்விக்கோ காட்சி கொடுக்கிற அனைத்தும் அன்னையின் சொரூ பங்களாம். அத்தகைய பாங்கில் மனம் திருந்தி யமையப் பெறுகிறவர்களே நல்ல ஆத்ம சாத

கர்களாம். எவ்வளவு விரைவில் சாதகன் ஒருவன் இந்தப் பாங்கில் தன் மனதைத் திருத்தியமைக்கின்ருனே அவ்வளவு விரைவில் அனைத்தையும் அவள் மயமாகக் கண்டு அவள் சொருபத்தில் மூழ்கியிருக்கும் பான்மையை அவன் பெறுகிருன்.

934. विश्वमाता விச்வமாதா—அண்டங்களனைத்துக்கும் தாய் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சிவனுர் விசுவநாதன் என அழைக்கப்பெறுகிருர். அதேபாங்கில் அன்னை பராசக்தி விசுவமாதா என அழைக்கப்பெறுகிருள். அம்மையாகவும் அப்பனுகவும் இலங்குகின்ற பொருள் ஒன்றே. அப்பொருள் உயிர்களனைத்துக்கும் தாயாகவிருந்து பெற்றெடுத்துப்பேணி வருவது பாராட்டுதற்குரிய பெரிய செயலாம். உயிர்கள் ஸ்தாவரஜங்கமங்களாக அமைந்திருக்கின்றன. ஸ்தாவரநிலையில் வைத்து ஆராய்ந்து பார்த்தால் அன்னையின் தாய்மை அற்புதமாக அமைந்திருப்பது விளங்கும். விதைகளை உற்பத்தி பண்ணி அவைகளைக் காப்பாற்றி வருவது தாயின் அரிய செயலாம். விதைகளுக்குக் கேடு வாராதவண்ணம் அவ்வளவு அற்புதமாக அவைகளை அவள்தோற்றுவித்துப்பாதுகாத்து வருவதற்கு ஏற்ற சான்றுகள் இயற்கையின் கண் ஏராளமாக அமைந்திருக்கின்றன. இனி, ஜங்கமமாயுள்ளவைகளை ஆராய்வோம். ஜங்கமத்தில் புழு, பூச்சி, வண்டு, ஈ, எறும்பு ஆகியவைகள் ஆரம்ப தசையிலிருக்கின்றன. ஆயினும் அந்நிலையிலும் அன்னையின் தாய்மைச் செயலை ஆராய்ந்து பார்க்கின் அதன் அற்புதம் வெளியாகிறது. அடுத்தபடி, பறவை இனத்தைக் கவனித்துப் பார்த்தால் பராசக்தியின் தாய்மை இன்னும் பல படிகள் மேலோங்குகிறது. முறையாகக் கூடுகட்டுதல், முட்டையிட்டு அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், அக்குஞ்சுகள் எதிரிகளுக்கு அகப்படாது பாதுகாத்தல், தாய்ப்பறவை தானே உணவு தேடிப் புசித்துப் பாதி செரித்திருக்கும் உணவைப் பாங்குடன் குஞ்சுகளுக்கு ஊட்டுவது ஆகிய இவை எல்லாம் தாய்மையின் செயலாம். இதே விதத்தில் விலங்குகளுள் கிடாரிகளாக இருப்பவைகள் கருவேற்று அதை நன்கு பாதுகாத்துக் குட்டியாக ஈன்றெடுத்துப் பாலூட்டி வளர்த்துவருவது அற்புதமான செயலாம். இவையாவுக்கும் மேலாக மானுட உலகில் அன்னை பராசக்தி வகித்துவரும் தாய்மையோ பாராட்டுதற்குரிய பெருமை வாய்ந்ததாம். ஆக, பிரபஞ்சத்தில் எங்குத் திரும்பி எவ்வுயிர்வகையை ஆராய்ந்து பார்த்தாலும் பராசக்தியானவள் விசுவமாதாவாக வடிவெடுத்து உயிர் வகைகளைப் பேணி வருவது போற்றுதற்குரிய பெரிய செயலாம். ஆகவே அவளை விசுவமாதாவாகப் பாவிப்பதே அவளுக்குரிய ஆராதனையாம்.

935. जगद्धात्री ஜகத்தாத்ரீ— உலகனைத்தையும் தாங்கியிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அண்டங்களின் அமைப்பே அற்புதமானது. வெட்ட வெளியில் எண்ணிக்கையிலடங்காத கோளங்கள் உலாவிக்கொண்டு இருக்கின்றன. அவைகளின் நடமாட்டத்தில் ஒழுங்குப்பாடு தென்படுகிறது. பூமியில் ஓடுகின்ற வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு உயிர்ச்சேதம் உண்டாவதை நாள்தோறும் பத்திரிகைகளின்வாயிலாக அறிய வருகிருேம். அத்தகைய விபத்து ஏதும் அண்டங்களின் ஓட்டத்தில் உண்டாவதில்லை. ஆகர்ஷண சக்தி அல்லது ஈர்ப்புச் சக்தி என்னும் இயற்கையின் கண் அமைந்துள்ள ஜட சக்தியானது அன்னையினுடைய அருளின் புறத்தோற்றமாம். கோளங்கள் இயங்குதலில் அமைந்துள்ள அற்புதம் வியப்புக்குரியது. சூரியனைச் சுற்றிக்கொண்டு நாம் வசித்திருக்கும் நிலவுலகம் இயங்குகிறது. அது தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிற செயலையும் அதே வேளையில் நிகழ்த்தி வருகிறது. தன்னைத் தானே சுற்றும் செயலை ஒரு தடவை பூர்த்தி பண்ணுவதற்கு இருபத்து நான்கு மணி நேரம் எடுத்துக்கொள்ளுகிறது. அக்காலத்தை இரவும் பகலும் கூடிய ஒருநாள் என்கின்ருேம். அங்ஙனம் முந்நூற்று அறுபத்தைந்தேகால் நாளில் நிலவுலகமானது சூரியனை ஒரு தடவை பிரதக்ஷிணம் பண்ணுகிறது. இதே முறையில் சந்திரன் பூமியைச் சுற்றி வருவதற்கு ஒரு மாதம் எடுத்துக்கொள்கிறது. இந்தப் பாங்கில் அண்டங்களனைத்தும் ஒழுங்காக இயங்குவது அன்னையின் அருளாலேயாம். இந்த அமைப்பைச் சரியாக எண்ணிப்

பார்த்தால், அன்னை பராசக்தியினிடம் நாம் வைத்திருக்கும் பக்தி மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகும். எனவே, அவளை ஜகத் தாத்ரீ—'ஜகத்தைத் தாங்குபவள்' என்று போற்றுவதில் பொருள் மிகப் புதைந்திருக் கிறது.

936. विशालाक्षी விசாலாக்ஷீ— அகன்ற கண்களை உடையவள் என்பது இந்த நாமத் தின் பொருள்.

காசி க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக் கும் அன்னை பராசக்திக்கு விசாலாக்ஷி என் னும் பெயர் வந்துள்ளது. இந்த நாமத்தின் மஹிமையை அறிந்து கொள்ளுதற்கு அவள் இன்னும் இரண்டு க்ஷேத்திரங்களில் என் னென்ன பெயர்களுடன் எழுந்தருளியிருக் கிருள் என்பதை இதனோடு இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். காசி விசாலாக்ஷி, காஞ்சி காமாக்ஷி, மதுரை மீனுக்ஷி என மூன்று தேவி க்ஷேத்திரங்களில் எழுந்தருளியுள்ள அன்னைக்கு அமைந்துள்ள கண்கள் மூன்று விதச் சிறப்புடையவைகளாக இருக்கின்றன.

அன்னையின் கண் பார்வைக்கு எட்டாதது அண்டங்களில் ஏதுமில்லை. ஓர் அணுவும் அவ ளுடைய பார்வைக்கு எட்டாததாக அமைய வில்லை. அனைத்தும் அவளுடைய கண்காணிப் பிலேயே இருந்து வருகின்றன. பிரளய காலத் தில் அண்டங்கள் எல்லாம் தோற்றத்தில் இல் லாது மறைந்துபட்டுப்போகின்றன. அங்ஙனம் அவையாவும் மறைந்திருப்பதற்கும் அன்னை யின் மேற்பார்வையே பிரமாணம். அன்னையின் பார்வை இன்ன இடத்தில் இருக்கிறது, இன்ன இடத்துக்கு அதுஎட்டாது இருக்கிறது என்று இயம்ப யாருக்குமே இயலாது. அணுமுதல் அண்டகோடிகளனைத்தும் ஜகத்தின் தோற் றம், இருப்பு, ஒடுக்கம் ஆகிய அனைத்தையும் அன்னை பார்த்துக் கொண்டேயிருக்கிருள். விசாலாக்ஷி என்பதன் பொருள் இதுவேயாம்.

விசாலமான கண்கள் படைத்திருந்தும் அவைகள் மற்றவர்களுக்குப் பயன்படாது போகலாம். அங்ஙனம கோள் இல்லாக் கண் இருந்தும் இல்லாததற்கு ஒப்பாம். அன்னை பராசக்தியின் கண்களோ கோள் யாவும் நிரம் பப் பெற்றுள்ள கண்களாம். அன்னையின் கோள் எத்தகையது என்னும் கேள்வி எழ லாம். காமாக்ஷி என்னும் பெயர் படைத்திருக் கின்ருள் அம்பிகை. அவளுடைய கடைக்கண் பார்வையிலேயே தன்னுடைய செல்வர்கள் செல்விகளாகிய ஜீவகோடிகளனைத்தினுடைய காமங்களை அல்லது இச்சைகளை நிறைவேற்றி வைக்கின்ருள். அன்னையின் அருளுக்குச் சான்ருகவிருப்பது உயிர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பதேயாம். அத்தனை கோடி உயிர்வகைகளும் சற்று ஏறத்தாழ தத்தம் ஆசைகள் நிறைவேறப் பெற்றவைகள் ஆகின் றன. ஆதலால்தான் அவை யாவுக்கும் வாழ்க் கையில் பற்றுமிக உண்டாகிறது. ஆசை ஒன்றுமே நிறைவேறப் பெருதவிடத்து வாழ்க் கையில் வெறுப்பு வந்துவிடும். ஆனல் அன்னை யின் ஆட்சியில் அத்தகைய குறைபாடு ஏது மில்லை. அவளுடைய அருளால் ஜீவகோடிகள் யாவும் ஆசைகள் நிறைவேறப் பெற்றவை களாக வாழ்ந்து வருகின்றன. இதுவே காமாக்ஷி என்பதன் உட்பொருளாம்.

இனி மதுரை மீனுக்ஷி என்று அம்பிகையைப் போற்றுமிடத்து, அதிலும் தத்துவத்தோடு கூடிய பொருள் நிறைந்திருக்கிறது. மீனுக்ஷி அல்லது மீனின் கண்களை உடையவள் என்று அம்பிகையை ஏன் இயம்பவேண்டும்? கண் படைத்திருக்கும் விஷயத்தில் மீனிடம் ஒரு சிறப்பு உண்டு. ஏனைய உயிர்கள் யாவும் இமைத்துக் கண் மூடுகின்றன. ஆனல் கண் மூடும் செயல் மீனுக்கு இல்லை. அது யாண்டும் விழித்துள்ள கண்களுடனேயே அமைந்திருக் கிறது. அந்தத் தத்துவம் அம்பிகைக்கு முற்றி லும் பொருத்தமானது. அம்பிகை எப்பொழுதா வது கண்மூடிக்கொண்டு பார்வையற்றவளாக இருக்கிருளா என்னும் கேள்வி எழுகிறது. அன்னை ஒரு பொழுதும் கண் உறங்குவது மில்லை; கண் மூடுவதுமில்லை. யாண்டும் கண்விழித்த பாங்கிலேயே அவள் இருந்து வரு கிருள். பிரளயகாலத்துக்கும் அவள் சாட்சி யாய் இருந்து வருகிருள். அன்னைமட்டும் கண் மூடுவாளாகில் அண்டங்களனைத்தும் சூன்ய மாய்ப் போய்விடும். ஆத்ம சொருபம் யாண்டும் கண்மூடாது நித்திய ஜாக்ரதாவஸ்தையில் இருந்து வருகிறது என்னும் கோட்பாட்டை அம்பிகை படைத்துள்ள மீனுக்ஷி என்னும் நாமம் நிரூபிக்கிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (311) *ஹிந்துக்களாகிய நம்மவர்களுக்கு ஹிந்து என்ற பெயரே புதியதாக வந்தது என்னும் குழப்பம் ஒன்று இப்பொழுது நாடெங்கும் பாவி வருகிறது. இப்பெயர் பொருத்தமானதா அல்லது பொருந்தாததா?*

நாம் வசித்து வரும் இந்த நாட்டுக்கு இப்பொழுது இந்தியா என்பது பெயர். இது பழைய பெயர் அன்று. ஆரிய வர்த்தம் என்பதும், பரத வர்த்தம் என்பதும் பழைய பெயர்கள். புதுப் பெயராகிய இந்தியா என்னும் நாமம் இக்காலத்திய மக்களாகிய நமக்கு விளங்குவது போன்று பழைய பெயர்கள் விளங்குவதில்லை.

அதே போன்று நம் நாட்டில் இப்பொழுது பழக்கத்திலிருந்து வரும் முக்கியமான மதத்துக்கு ஹிந்து மதம் என்பது பெயர். சனாதன தர்மம் என்பது பழைய பெயர். எப்பெயரை வைத்து மக்களையும் அவர்கள் அனுஷ்டிக்கும் மதத்தையும் கூறுவது என்பது இப்போது முக்கியமான பிரச்னை அன்று. இந்நாட்டு மக்களாகிய நமக்கு இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிவர்த்தி பண்ணுவது எங்ஙனம்? இதுவே முக்கியமான கேள்வியாக இருந்து வருகிறது.

நம் நாட்டை இன்றைக்கு இந்தியா என்று கூறினால் அதில் பிழை ஒன்றுமில்லை. நாட்டு மக்கள் எல்லாருமே இப்பெயரை அறிந்து கொள்கின்றனர். இந்த நாட்டில் வசித்துவரும் மக்கள் எல்லாரும் இந்தியர்கள்.

இந்த நாட்டிலே இன்றைக்குப் பழக்கத்தில் இருந்துவரும் மதங்கள் மூன்று உள. அவை ஹிந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் என்பனவாம். பிந்திய மதங்கள் இரண்டும் வெளி நாட்டிலிருந்து வந்தவைகள். என்றென்றும் இந்நாட்டு மக்களுக்குச் சொந்தமாயுள்ள மதம் ஹிந்து மதம் என்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தில் மக்களுக்குக் குழப்பம் ஏதுமில்லை.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியோ ஹிந்துக்களுக்கிடையிலும் அவர்களை எதிர்க்கும் ஏனைய இரண்டு மதஸ்தர்களுக்குமிடையிலேயாம். இந்தச் சூழ்நிலையில் நம்மவர்களை எப்பெயரிட்டு அழைப்பது என்னும் கேள்வியைக் கிளப்பி மனக்குழப்பத்தை உண்டு பண்ணலாகாது. பண்டைக்காலம் தொட்டு நாம் அனுஷ்டித்துவரும் மதம் ஹிந்துமதம். புறமதஸ்தர்களை ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களாக மாற்றியமைக்கிற திட்டம் நம்மிடத்திலில்லை. ஆனால் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள இஸ்லாமிய மதமும், கிறிஸ்தவமதமும் அவரவர் மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குதலில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றன. இதுகாறும் இவ்விஷயத்தில் நாம் கருத்தை அதிகம் செலுத்தவில்லை. ஒரு போக்கில் இந்தப் புறமதங்களுக்கு ஆமோதிப்பும் தந்து வந்திருக்கிறோம். இதன் விளைவாகத் தாய் மதமாகிய ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிவேகத்தில் குறைந்து வருகிறது. புற மதஸ்தர்களின் எண்ணிக்கை மேலோங்கி அதிகரித்து வருகிறது. இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹிந்துக்களின் எண்ணிக்கை குறைந்து போய் இருக்கிறது. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மேலோங்கி இருக்கிறது. இதன் விளைவாக ஹிந்துக்களை மடக்கித் தங்கள் மயமாக்க அவர்கள் துணிச்சலுடன் முயன்று வருகின்றனர். இதுவே ஆபத்தான சூழ்நிலை. தக்கதருணத்தில் நாம் விழிப்படைந்து தற்பாதுகாப்புக்காக முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் புறமதங்கள் நம் மதத்தை விழுங்கி விடும். ஆதலால் ஹிந்துக்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்திருந்து நம் மதத்தைத் தக்க முறையில் பாதுகாக்கவும், ஆக்ரமித்து வருகிற புறமதங்களைத் தோற்கடிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். மதத்தின் பண்பும் ஒரு நாட்டின் நாகரிகமும் ஒன்றேயாம். நம்முடைய பண்பையும் நாகரிகத்தையும் நாம் இழந்துவிட்டால் நம் சமுதாயமே அழிந்துபட்டுப் போன தற்கு நிகராகும். நாம் ஒன்றுபட்டால் இந்த நெருக்கடியைச் சமாளிக்கலாம். பராமுகமாகவோ, ஏனோ தானோ என்றோ இருந்தால் நம் தனி வியக்தியை இழந்து பிறர்க்கு நாம் அடிமைகளாவோம். இதுவே இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி. நமக்குரிய பெயர்

எது என்று விவகரித்து வீண்காலம் போக்க லாகாது. உடனடியாக எழுந்திருந்து நம்மை நாம் காப்பாற்றிக்கொள்வோமாக.

கேள்வி: (312) *ஞானபூமி என்ற மாதப் பத்திரிகையில் காயத்ரீ மந்திரத்தைப் பூணூல் போட்ட பிராமணன் மாத்திரம் சொல்லலாம் என்று காஞ்சி இளைய சங்கராச்சாரியர் சொல்லுகிறார். இது முறையா?*

சமுதாய அமைப்பில் நான்கு வருணங்கள் உள. அவைகள் முறையே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்ரன் எனப்பாகுபடுத்தப்படுகின்றன. இந்த நான்கு வருணங்களுள் முதல் மூன்று வருணங்களைச் சேர்ந்தவர்கள் துவிஜர் அல்லது இரு பிறப்பாளர் என இயம்பப் பெறுகின்றனர். அதற்கு அறிகுறியாக இந்த மூன்று வருணத்தாரும் பூணூல் அணிந்திருக்கின்றனர். இந்த மூன்று வருணத்தாரும் காயத்ரீ ஜபத்துக்குத் தகுதி வாய்ந்தவர்களே. மூன்று வருணத்தாரில் ஒரு வருணத்தார் மட்டும் இதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் எனப் பகருவது பிழை.

பழையன கழிதல் புதியன புகுதல் இயற்கையின் பாங்கு ஆகும். பழங்காலத்தில் பூணூல் அணிதல் பண்புக்கு அறிகுறியாயிருந்தது. இன்றைக்கோ பூணூல் அணியும் பண்பு மக்களுக்கிடையில் அதிவேகம் மறைந்து வருகிறது. காலப்போக்கையனுசரித்து ராமகிருஷ்ணபரமஹம்சதேவரே தம்முடைய சாதனத்தின் ஒரு படித்தரத்தில் பூணூலை நீக்கி விட்டார். அதற்குக் காரணம் யாது என்று மற்றவர்கள் கேட்டபொழுது 'நான் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்கிற அகங்காரம் எனக்கு வேண்டாம்' என்று பதில் விடுத்தார்.

சென்னையில் நிகழ்ந்த அந்தர்யோகம் ஒன்றில் "அருகதையில்லாதவர்கள் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கலாகாது" என்னும் ஆக்ஷேபம் ஒரு கேள்வியாக வடிவெடுத்து வந்தது. அதற்குக் கொடுத்த விடையாவது:'வைதிக சம்ஸ்காரம் பெறாத சூத்ரர்கள் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கலாகாது என்பது ஐதிகமாக வந்துள்ள தடை. இன்றைக்குச் சமுதாயம் படைத்துள்ள பண்பாட்டின்படி இந்தத் தடையே புதிய வடிவெடுத்தாக வேண்டும். இந்தப் புதிய வடிவமாவது காயத்ரீ மந்திரத்தை ஜபித்துச் சாமானிய நிலையிலுள்ள மக்கள் மேன்மக்களாகத் திருந்தியமைய வேண்டும். திருந்தியமையும் தகுதிவாய்ந்தவர்களைத் திருந்த வேண்டாம் என்று தடை பண்ணுபவன் தானே கீழோன் ஆகிறான். காயத்ரீ மந்திரத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் எல்லாரும் சூத்திரர்கள். நாளடைவில் பண்பட்டு மேல்நிலைக்கு வருகின்றபொழுது அவர்கள் தாமே காயத்ரீ மந்திரத்தை ஆர்வத்துடன் எடுத்துக்கொள்ளுவார்கள். மனிதனுக்குப் பண்பாடு முக்கியமானது. பிறப்பு முக்கியமானதன்று.

கேள்வி: (313) **அனைத்தையும் படைத்த இறைவனை நம்பாத நாஸ்திகர்களை இறைவன் ஏன் படைத்துள்ளார்?**

இயற்கைக்குப் புறம்பாகக் கடவுள் என்னும் பொருள் ஒன்று இல்லை என்பது ஒரு கொள்கை. இயற்கையும், கடவுளின் திட்டமும் ஒன்று என்பது மற்றொரு கொள்கை. இயற்கையே அனைத்துக்கும் விளக்கம் தருகிறது; கடவுள் என்னும் பொருள் தேவையில்லை என்பது மூன்றாவது கொள்கை. இங்ஙனம் கருத்து வேறுபாடு இருப்பதுவே மக்களின் பாங்காம். கிச்சலிப்பழம் ஒன்று நன்கு சுவைக்கின்றது. மற்றொன்று மிகக் கசப்புடையதாயிருக்கின்றது. இது இயற்கையின் பாங்கு. கடவுள் ஏன் இப்படிப் படைத்தார் என்று கேட்கலாகாது. பிறவிக் குருடனுக்குச் சூரியப் பிரகாசத்தைப்பற்றிய அனுபவமில்லை. ஆதலால் அதை மறுப்பதால் அவன் பிழை செய்தவன் ஆகமாட்டான். அதே பாங்கில் நாஸ்திகன் என்பான் மெய்ப்பொருளைப்பற்றிய தான் படைத்துள்ள அறிவைத் தன் போக்கில் வெளிப்படுத்துகின்றான். இங்ஙனம் ஆஸ்திகர்களும், நாஸ்திகர்களும் யாண்டுமே சமுதாயத்தில் இருந்து வருகிறார்கள். ஓர் உத்தியோகத்துக்குப் பொருந்தாதவனை அதில் எடுத்துக் கொள்ளுவதில்லை. கடவுள் நம்பிக்கை அத்தகையதன்று. அவரவர் அறிவுக்கேற்ப மெய்ப்பொருளுக்கு விளக்கம் கொள்ள எல்லார்க்கும் உரிமை உண்டு. அவ் உரிமை நாஸ்திகர்களுக்குமுண்டு. அறிவு வளர்ச்சியில் ஒருபடித்தரத்தில்இருப்பவனை நாஸ்திகன் என்கிறோம். உண்மையில் அவன் நாஸ்திகன் அல்லன்.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

நமக்குத் தற்போது அமைந்துள்ள சரீரம் பழைய கர்ம வினையின் தொகையாக வந்திருக்கிறது. கர்மங்கள் மூன்று வகைப்படும். 1) சஞ்சிதம் 2) ஆகாமியம் 3) பிராரப்தம். அம்பருத்தூணியில் உள்ள அம்புகளை ஒத்தது ஆகாமியம். தான் தொடுத்து எய்யப்பட்டு விரைந்து கொண்டிருக்கும் அம்பு பிராரப்தம் ஆகும். இதற்கு முன்பே எய்யப்பட்டுக் கழிந்த அம்புகளே சஞ்சித கர்மம் ஆகும். ஒரு குறிப்பிட்ட வினைப்பயனாக இந்தச் சரீரம் விளைகின்றது எனின் அதற்குக் கர்த்தா ஜீவனே. எனவே, இனிவரும் சரீரத்தை மாற்றி அமைக்கும் வலிமை அவனிடம் உள்ளது என்பதைத் தெரிவிப்பதே கர்மத்தைப் பற்றிய சிறப்பு அம்சம் ஆகும்.

पञ्चप्राण मनो बुद्धि दशेन्द्रिय समन्वितम् ।
अपञ्चीकृत भूतोत्थं सूक्ष्माङ्गं भोगसाधनम् ॥

पञ्चप्राण (பஞ்சப்ராண) ஐந்து வாயு, मनो बुद्धि (மனோ புத்தி) மனம், புத்தி दश इन्द्रिय (தச இந்திரிய) பத்து புலன்கள் समन्वितम् (சமந்விதம்) ஒன்று சேர்ந்ததும் अपञ्चीकृत भूतोत्थं (அபஞ்சீக்ருத பூதோத்தம்) பஞ்சீகரணம் செய்யப்படாத நிலையில் உள்ள பூதங்களால் தோற்றுவிக்கப்பட்டதும் सूक्ष्माङ्गं (சூக்ஷ்மாங்கம்) சூக்ஷ்ம சரீரம் भोगसाधनम् (போக சாதனம்) அனுபவத்துக்கு உரிய சாதனம் ஆகின்றது.

"ஐந்து பிராணன்கள், மனம், புத்தி, பத்துப் புலன்கள் ஆகியவை பஞ்சீகரண முறைக்கு முன்பு தோன்றியவைகளாக அமைந்து உண்டாக்கும் சூக்ஷ்ம சரீரம் போகத்தை அனுபவிக்கும் கருவிகளாகும்."

சூக்ஷ்ம சரீரம் பதினேழு பகுதிகளை உடையது. பிராண, அபான, வியான, உதான, சமான என்று உடலின் பல பகுதிகளில் சக்தியாக இலங்குபவை ஐந்து பிராணன்கள். சந்தேஹ நிலையில் சங்கல்ப, விகல்பங்கள் (உடன்பாடு, எதிர்மறை எண்ணங்கள்) உடைய அந்தக் கரணம் மனம் ஆகும். (சங்கல்ப, விகல்பாதிபி: மன:) நிச்சய நிலையில், உறுதியாகத் திகழ்வது புத்தி. (புத்தி: பதார்த்த அத்யவஸாய தர்மண:) மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐந்து ஞானேந்திரியங்கள். வாக், கை, கால், பாயுரு, உபஸ்தம் என்பன ஐந்தும் கர்மேந்திரியங்கள். இவை அனைத்தும் சூக்ஷ்ம பூதங்களிலிருந்து உண்டானவை.

நம் புலனறிவிற்குப் புலப்படக் கூடிய வகையில் அமைந்துள்ள கண், காது ஆகிய அவயவங்களை இந்தச் சுலோகம் குறிப்பிடவில்லை. இவைகளைக் கோளகம் என்று குறிப்பிடுவர். அந்த இடங்களில் உள்ள சூக்ஷ்மமான சக்தியை இந்திரியம் என்று குறிப்பிடுவார்கள்.

சுலோகத்தின் பொருள் எளிது. சாதகன் என்ன செய்யவேண்டும் என்பதை ஆராய்வோம். போக சாதனமாக அமையும் சரீரத்தை யோகத்திற்குப் பயன்படுத்தவேண்டும். வரம்பு கடந்து போகத்தில் ஈடுபடுபவன் ரோகி-வியாதி பிடித்தவன் ஆகின்றான். அதனைத் தவிர்த்துப் போகத்தைக் குறைத்து யோகியாக வாழவேண்டும். "விலங்கினங்கள் ஓர் இந்திரிய சுகத்தின் பின்சென்று மரணமடைகின்றன என்றால் ஐந்து இந்திரியங்களின் பிடியில் அகப்பட்டுள்ள மானுடனின் கதி என்ன ஆகும்?" என்று ஆசாரியர் கேட்கிறார்.

சப்தாதிபி: பஞ்சபிரேவ பஞ்ச
பஞ்சத்வம் ஆபு: ஸ்வகுணேன பத்தா:
குரங்க மாதங்க பதங்க மீனப்ருங்கா:
நர: பஞ்சபிரஞ்சித: கிம்?
(விவேக சூடாமணி)

பஞ்சத்வம் என்பது எமனது இருப்பிடம், மரணம். மான் (குரங்க) சப்தம் வரும் திசையில் சிந்தையைச் செலுத்தித் தன்வசமிழந்து பிடிபடும்; யானை (மாதங்க) ஸ்பர்சஉணர்வால் தூண்டப்பட்டு மறைக்கப்பட்டுள்ள பள்ளத்தில் விழுந்து பிறர்க்கு அடிமையாகும்; விட்டிற்பூச்சி (பதங்க) தேஜோ மயமாகத் திகழும் ஒளியைக் (ரூபத்தை) கண்டு மயங்கி அதில் விழுந்து கருகிவிடும்; நீரில் தன்னிச்சையாகத் திகழும் மீன் (மீன) 'ரசம்' என்ற சுவையால் தூண்டப்பட்டு தூண்டிற்புழுவைக் கவ்வி இறக்கும்; கவலையற்

றுப் பறந்து திரியும் வண்டு (ப்ருங்கா:) பூக்களின் நறுமணத்தால் (கந்தம்) கவரப்பெற்றுப் பூவின் இதழ்கள் குவிந்து தன்னைச் சிறையில் அடைப் பதையும் உணராது மயங்கி மாளும். எனவே ஐந்து இந்திரியங்களின் பின்னே ஒருசேர ஓடும் மனிதனின் கதி அதோகதிதானே என்று குறிப்பால் ஆசாரியர் உணர்த்துகிறார்.

இந்திரியங்களின் வசப்பட்டுக்கிடக்கும் மனிதனுக்கு நேரும் கதியை மாணிக்கவாசகரும் பின்வருமாறு பகர்கிறார்.

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வோர்க்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை
[கண்டேனே.

போகத்திற்காக அமைந்த புலன்களை யோகத்திற்காகப் பயன்படுத்துவதே இதனின்றும் தப்புவதற்கான நெறியாகும். 'மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்' என்பதே யோக நெறி. (Suppression of senses is full of reactions. Sublimation of the senses is the way of the wise.)

புலன்கள் வெளிச்சென்று அனுபவிக்கும் விஷயங்கள் போகப் பொருள்கள் (विषय्) எனப்படும். விஷயம் என்பது உண்மையில் விஷம் என்று யோகவாசிஷ்டம் குறிப்பிடும். ஒரு விஷயத்தில் விஷத்தைக் காட்டிலும் விஷயம் கொடுமையானது. விஷத்தை உண்டால் இந்த ஒரு பிறவி மட்டும்தான் அழிக்கப்படுகின்றது; விஷயத்தின் பின்னே செல்வதால், அஞ்ஞானம் மேலிட்டு, பல ஆழ்ந்த தீய வாசனைகள் தோன்றி, இந்தப் பிறவியோடு நில்லாது இனி வரும் பலப் பிறவிகளையும் அது நாசமாக்குகின்றது. எனவே 'விஷயம்' விஷத்தைக் காட்டிலும் கொடியது என்று ஒதுக்கி விடவேண்டும்.

'போகம், யோகம்' என்ற இரண்டு நெறிகளையும் தனக்கே உரிய எளிய மொழிகளில் கபீர்தாஸ் நயம்படச் சித்திரித்துக் காட்டுகின்றார். "அரிசியும் பருப்பும் அருகருகே சிதறிக் கிடப்பதை எறும்பு ஒன்று கண்டது. முதலில் அரிசித்துகளை எடுத்துச் சென்றது; அதன் பின்பு பருப்புத் துகளை எடுக்கலாம் என்று தீர்மானித்தது. இரண்டும் ஒருசேர எடுக்க இயலாது. ஒன்று வேண்டுமாயின் மற்றொன்றைத் துறக்கத்தானே வேண்டும்?" இதன் மூலம் குறிப்பாக அவர் உணர்த்துவது யாது? "மானுடா, யோகம் போகம் இரண்டும் உன் முன்பு உள்ளன. இரண்டையும் ஒருசேர அடைய இயலாது. யோக வாழ்வை நீ விரும்பினால், கட்டாயம் போகவாழ்வைத் துறக்க வேண்டும்."

"அன்னமும், நாரையும் ஒன்றாகப் பறந்து மானசரோவர் என்ற தடாகத்தை அடைந்தன. நாரை நீரில் திளைத்து மீன்களைத் தேடியது. அன்னமோ ஆழ்ந்து மூழ்கி நன் முத்துக்களைத் தேடியது." இக்கருத்துடன் மிளிரும் பாடலில் மானசரோவர் தடாகம் என்ற நமது மனதைக் கொண்டு நாரையைப் போல் விஷய சுகத்தில், போகத்தில் திளைக்கலாம்; அல்லது மனதின்கண் ஆழ்ந்து தியானம் செய்து அன்னத்தைப் போன்று நல்ல முத்துக்களாகிய யோக அனுபவத்தை அடையலாம். 'நாரையைப் போல் வாழாதே; அன்னம் போல் வாழ்' என்பார் கபீர்தாஸ்.

யோகமும், போகமும் எதிரிடையானவை. எங்கு ராமன் இருக்கின்றானோ, அங்குக் காமன் இல்லை. பிறவிகளில் பெரியது மானிடப்பிறவி. எனவே யோகத்திற்கு இதனைப் பயன்படுத்த வேண்டும். 'தஸ்மாத் யோகீ பவ – ஆகவே நீ யோகீ ஆவாயாக' என்று கீதையில் கண்ணன் அறிவுரை தருகின்றார். சாதகர்கள் இதனைத் தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும்.

अनाद्यविद्याऽनिर्वाच्या कारणोपाधिरुच्यते ।
उपाधित्रितयादन्यमात्मानमवधारयेत् ॥

अनादि (அநாதி) துவக்கம் அற்ற, अविद्या (அவித்யா) அஞ்ஞானம் अनिर्वाच्या (அநிர்வாச்யா) விளக்கத்திற்கு அப்பாற்பட்ட कारण उपाधि (காரண உபாதி) காரண சரீரம் என்ற உபாதியாக उच्यते (உச்யதே) கூறப்படும் उपाधि त्रितयं (உபாதி த்ரிதயம்) மூன்றுவித உபாதிகளுக்கும் अन्यत् (அந்யத்) வேறுபட்டதாக आत्मानं (ஆத்மானம்) தனது ஆன்ம சொரூபத்தை अवधारयेत् (அவதாரயேத்) அறிவாயாக.

"துவக்கம் அற்றதும், சொற்களால் விளக்க முடியாததும் ஆகிய அஞ்ஞானமே காரண சரீ

ரம் எனப்படும்; இந்த மூன்று உபாதிகளுக்கும் அப்பாற்பட்டதாகஆத்மாவை அறிந்துகொள்."

'காரண சரீரம்' அல்லது அஞ்ஞானம் மூன்ருவது உபாதி. இதற்கு 'அநாதி அநிர்வாச்யா' என்று இரண்டு அடைமொழிகள் தரப்படுகின்றன. எப்போது அக்ஞானம் தோன்றியது என்று உரைக்க முடியாது. அதற்குத் தோற்றம் இல்லை எனினும் முடிவு உண்டு. இதை 'ப்ராக் அபாவம்' ஆரம்பத்தில் இல்லாதது என்று குறிப்பார்கள். அக்ஞானம் பாரமார்த்திக சத் நிலையில் இல்லை; வ்யவஹார நிலையில் மட்டுமே உள்ளது. காலமும் தேசமும் அக்ஞானத்தின் பகுதிகளாகும். எனவே அஞ்ஞானம் தோன்றிய காலம் எது, தேசம் எது என்ற வினக்கள் பொருத்தமற்றவை. ஆகவே அக்ஞானம் அனுதி.

குறிப்பிட்ட இலக்கணத்திற்கு, வரையறைக்கு அஞ்ஞானம் உட்படாது. இதனை 'சத்' 'அசத்' 'பின்னம்' 'அபின்னம்' அல்லது 'சத் அசத்' 'பின்னுபின்னம்' என்று உறுதியான ஒரு இயல்பால் சுட்டிக்காட்ட இயலாது. எனவே 'மஹா அத்புத அநிர்வசநீயம்' என்று ஆசாரியர் குறிப்பிடுகின்ருர்.

ஆத்மாவின் சொருபத்தை மறைப்பது உபாதிகள். ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் உபாதிகள். இம் மூன்றிற்கும் அப்பாற்பட்டது ஆத்மா என்று அறியவேண்டும். சரீர அபிமானம் மேலிடும்போது, அந்த உபாதியைத்துறக்கச் சாதகன் பழகவேண்டும். அன்னமயமான ஸ்தூல சரீர அபிமானம் மட்டுமன்றி, நுட்பமான அபிமானங்களையும் களைய வேண்டும். பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் 'எவ்வெப்பொழுது மனம் நிலையற்று அலைகின்றதோ, அக்கணத்தில் அதனை ஆத்மாவின் வசத்தில் நிலை நிறுத்தவேண்டும்' என்று சாதனை முறையை விளக்குகின்ருர். 'சரீரத் த்ரயம்' நன்கு விளக்கப்பட்டிருப்பதின் அடிப்படைத் தத்துவமே இந்த அபிமானத்தை அகற்றப் பழகுவதே ஆகும்.

உபாதிகளை உண்டுபண்ணிக் கொள்வது எளிது. உபாதிகளைத் துடைத்துத் தள்ளுவதுதான் கடினம். சரீரத்தைத் தன்மயமாக எண்ணிக்கொள்வது ஓர் உபாதி. சரீரத்தைத் தான் அல்ல என்று உணர்வது அவ்வுபாதியைக் களைவதாகும். சரீரம் தான் அல்ல என்று சொல்லுவது சுலபம். ஆனுல் சரீர உணர்வைத் தாண்டிச் செல்லுவது கஷ்டம். சரீரத்தைத் தன்மயமாகக் கருதாது அதை இறைவனுடைய ஆலயமாகக் கருதுவது சரீர உபாதியைக் கடப்பதற்கு ஓர் உபாயமாகும். மனதைத் தன்மயமாகக் கருதுவது மற்றொரு உபாதியாகும். உலக சம்பந்தமான எண்ணங்களில் மனது ஓடிக்கொண்டிருக்குமானுல் மனதைத் தன்மயமாகக் கருதும் உபாதி தடித்ததாகிறது. மனதை ஆத்ம சிந்தனையில் செலுத்துவது மனதைத் தன்மயமாகக் கருதும் உபாதியை ஒழிப்பதற்கு உபாயமாகும். அக்ஞானத்தைத் தன்மயமாகக் கருதுவது காரண சரீர சம்பந்தமான உபாதியாகும். அதனைக் களைவதற்குச் சித்த சுத்தி பண்ணவேண்டும். தன்னலமற்ற சேவை, நாம உச்சாரணை, ஆத்ம தியானம் போன்றவைகளால் அக்ஞானம் என்ற உபாதியைத் துடைத்துத்தள்ளலாம். இங்ஙனம் மூன்றுவித உபாதிகளையும் துடைத்துத்தள்ளுவது சிறந்த சாதனமாகும்.

ஆத்மாவின் சுதந்தர, சாக்ஷி பாவ, பற்றற்ற நிலையை ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள் அழகாக விளக்குகின்ருர். ஸ்தூல சரீரம் அரசன் ஒருவனுடைய அவை ஆகின்றது. ஜீவனே அரசன்; மனம், முதன் மந்திரி; பிராணன், இந்திரியம், விஷயம் அரசனின் அதிகாரிகள், பணியாட்கள். அரசவையில் பிரகாசித்து எரியும் தீபமே ஆத்மா. ஸ்தூல, ஸூக்ஷ்ம, சரீரங்களைக் கனவிலும், நனவிலும் ஆத்மா பிரகாசப்படுத்துகின்றது. அதுபோல் அரசவையில் நடக்கும் நிகழ்ச்சிகளை விளக்கு பிரகாசப்படுத்துகின்றது. அரசனும், அவையோரும் வ்யவகாரமற்று ஓய்வு எடுக்கும்பொழுதும், அவையைத் தீபம் பிரகாசப்படுத்துகின்றது. அதுபோன்று ஆழ்ந்த கனவற்ற உறக்கத்தில் (சுஷுப்தி) ஆத்மா தான் பிரகாசிப்பதோடு அல்லாது 'கருவி, கரணங்களற்ற வியவகாரமற்ற' நிலையையும் பிரகாசப்படுத்துகின்றது. நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளை ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண என்ற மூன்று சரீரங்களைப் பிரகாசிக்கச் செய்வது ஆத்மா. அவற்றினின்று வேறுபட்டு, அவற்றின் சாக்ஷியாக உள்ளதே ஆத்மா."

சிறுமையைக் களைவோம்

(சுவாமி துருவானந்தர்)

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா

என்றான் பாரதி.

தாய் நாட்டைப் பெற்ற தாய்க்கு நிகராகக் கருதி வணங்க வேண்டும் என்று பாப்பாவுக்குப் பாடுவது போலப் பாரதநாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறான் பாரதி. தாய் எப்படி நம் பிறப்புக்குக் காரணமாயிருந்து நமக்கு வாழ்வளிக்கிறாளோ அங்ஙனம் தாய் நாடும் நம்மைப் பேணி வளர்த்து நமக்கு வாழ்வளிக்கின்றது. ஆகவே தாயை வணங்குவதைப் போலவே தாய் நாட்டையும் வணங்கச் சொன்னான். எத்தனை பேர் நம் பாரதத் தாயை வணங்குகிறார்கள்? தாய்மீது பாசமில்லாத சேய்போன்று, நமக்கு வாழ்வளித்த பாரத அன்னையிடம் விசுவாசம் காட்டாதவர்களும் உண்டு. ஒருவனைப் பெற்றெடுத்து வளர்க்கத் தாய் என்ன பாடுபடுகிறாள்? தாய் பட்டக் கஷ்டங்களை மறந்த கயவன் போன்றவன்தான் தாய்நாட்டின்மீது விசுவாசமில்லாதவன். பாரத நாட்டிலே பிறந்து, பாரதப் பண்பிலேவளர்ந்து, ஹிந்து கலாசாரத்தில் திளைத்து வாழுகிற ஹிந்துக்களிலே சிலர், சில ஈனத்தனமானச் செயல்களிலே ஈடுபட்டு வந்துள்ளனர். பெற்ற தாயை மறந்து, பிறிது ஒரு தாயிடம் போனதுபோன்று பிறந்துள்ள தாய் மதத்தை விட்டு வெளிநாட்டிலிருந்து புதிதாகப் புகுந்த இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களில் சேர்ந்துள்ளனர். எவ்வளவு வெட்ககரமான, வேதனையை உண்டுபண்ணும் செயலாக இது இருக்கிறது!

ஆதிகாலத்திலிருந்தே நாம் ஹிந்து மதப் பிரசாரத்தில் இறங்கியது இல்லை. இதன் பெருமையையும் உயர்ந்த தன்மையையும் அறிந்த மேல்நாட்டு கிறிஸ்தவர்கள் ஹிந்துமத ஆராய்ச்சியில் பல ஆண்டுகளைக் கழித்திருக்கிறார்கள். மாக்ஸ்முல்லர் இதற்கு சான்று ஆவார். வீண் ஆடம்பரமும், வெளிப் பகட்டும் கொண்டுதங்களுடைய சமயமேஉலகம்முழுதும் இருக்கவேண்டும், தாங்கள் வணங்கும் தெய்வத்தைத்தான் மற்றவர்களும் வணங்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் நாடு பிடிக்கும் ஆசையோடும் கிறிஸ்தவர்கள் நம் நாட்டிற்குள் வந்தனர். மதப்பிரசார வேலையை முடுக்கி விட்டனர். அப்போது ஆட்சி அவர்கள் கையில் இருந்தது. வேகமாக மதமாற்றம் நடந்தது. இப்போது ஆட்சி மாறிவிட்டது. நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்தால் எப்படியிருக்குமோ அப்படி நாலாபக்கமும் சிதறுண்டு கிடக்கிற ஹிந்துக்களுக்குக் கல்வி, மருத்துவ வசதி, பணம் கொடுத்தல் முதலியவைகளைச் செய்து சுலபமாக மதமாற்றம் செய்ய அவர்களுக்கு முடிகிறது. இந்தியா கிறிஸ்தவ நாடானால் மேல் நாட்டாருக்கும் மகிழ்ச்சி அன்றோ? ஆகவே இந்தியாவைக் கிறிஸ்தவ நாடாக்குவதற்காகவே மேல்நாட்டிலிருந்து ஏராளமான பணம் பாதிரியார்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றது. பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்கிற தைரியத்தில் பாதிரிமார்கள் பணத்தைத் தண்ணீராக இறைக்கின்றனர். எச்சில் இலையில் விழுந்த பிச்சைக்காரன் போன்று, பாமர ஹிந்துக்கள் சிலர் அறியாமையால் மதம் மாறி உள்ளனர். இப்போது இந்தியாவில் நாம் காணுகிற முஸ்லீமோ, கிறிஸ்தவரோ வெளி நாட்டிலிருந்துவந்தவர்களல்லர். பாதிரிகளின் பணத்துக்கும்,பசப்பு வார்த்தைக்கும் மயங்கி கிறிஸ்தவர்கள் ஆனவர்களே இவர்கள். வெறிபிடித்த முஸ்லீம்களின் வாளுக்குப் பயந்த ஹிந்துக்கள், தாங்கள் முஸ்லீம் ஆகிவிட்டதால் பழைய உருவோடு இருந்தால் தன் இனத்தவர்கள் இனங்கண்டு விடுவார்கள் என்று பயந்து, ஆண்கள் குல்லாய் போட்டும் பெண்கள் கோஷா போட்டும் உடம்பை மறைத்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள்வேறுயாருமல்லர்,இனம் பிரிந்த மான் போன்று ஹிந்து மதத்திலிருந்து, ஒரு சூழ்நிலையிலிருந்துத் தப்பிஓடி ஆங்கு அமைதியற்றுத் தவித்துக் கொண்டிருக்கிற ஹிந்துக்களே. அவர்களைக் கிறிஸ்தவ மதத்திலிருந்தும், முஸ்லீம் மதத்திலிருந்தும் மீட்டு, ஹிந்து மதமான தாய் மதத்தில் சேர்க்கும் பொறுப்பு ஒவ்வொரு

ஹிந்துவினுடையதும் ஆகும்.

மத மாற்றம் பண்ண முஸ்லீம்கள் ஏன் இவ்வளவு தீவிரமாகச் சமீபகாலத்தில் இறங்கினூர்கள் என்று அவர்களைக் கேட்டால் அவர்கள் கொடுக்கிற பதில், ஹிந்து ஹரிஜனங்கள் வறுமையில் வாடுகின்றனராம். அவர்களை வறுமையிலிருந்து விடுவிக்கவே இந்த மத மாற்றம் நடந்ததாம். ஹிந்து ஹரிஜனங்கள் வறுமையால் வாடுவது உண்மையிலேயே அவர்கள் நெஞ்சை நெகிழ்வித்தால், முஸ்லீம் மதத்திலேயே பூட்டு ரிப்பேர் பண்ணுகிற முஸ்லீம், குடை ரிப்பேர் செய்யும் முஸ்லீம், பிச்சை எடுத்து வீதி வீதியாக அலைகிற முஸ்லீம் ஆகிய முஸ்லீம் சகோதரர்களுக்குப் பண உதவி செய்து அவர்களை வறுமையிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வளமான வாழ்வு தரக்கூடாதா? உலகில் எல்லா நாட்டினரும் ஆச்சரியத்தோடு ஏன் இந்த மத மாற்றம் என்று கேள்விகேட்கத் தொடங்கிவிட்டனர். இதற்கு விடையளிப்பது போன்று 1981 டிசம்பர் மாதம் முதல் தேதி வெளியான **'On Looker'** என்ற பத்திரிக்கையில் அதிர்ச்சியளிக்கக்கூடிய கட்டுரைஒன்று பிரசுரமாகியுள்ளது. அமெரிக்க விண்வெளிக் கலங்கள் உலகை வட்டமிடுகின்றன. அவற்றில் பொருத்தி வைக்கப்பட்டுள்ள சக்தி வாய்ந்த காமிராக்கள் பூமியை மட்டுமல்ல, பூமிக்கு அடியில் உள்ள கனிப் பொருள்களையும் படம் பிடிக்கின்றன.

அந்தக் கலங்கள் திரட்டிய தகவலிலிருந்து அரபு நாடுகளில் உள்ள பெட்ரோல் முழுவதும் இன்னும் 10, 15 ஆண்டுகளில் வற்றிப்போகும். அங்கிருக்கும் பெட்ரோல் பாரதநாட்டையும், ஸ்ரீ லங்காவையும் நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அடுத்த பதினைந்து ஆண்டுகளில் பாரதமும் ஸ்ரீ லங்காவும்தான் உலகுக்கே பெட்ரோல் ஏற்றுமதி செய்யும்.

இத்தகவலை ஜனதா அரசு ஆட்சியில் இருந்த காலத்தில், அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு இஸ்ரேல் நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ரகசிய விஜயத்தின்போது தெரிவித்ததாகச் செய்திகள் அடிபடுகின்றன. இஸ்ரேல் தந்த தகவலையும் அவர்கள் அளிக்க முன்வந்த ஒத்துழைப்பையும் தமக்கே உரித்தான பாணியில் மொரார்ஜி மறுத்துவிட்டதாக 'ஆன் லுக்கர்' பத்திரிகை கூறுகிறது. இதற்காகத்தான் அரபு நாடுகள் இந்தியாவில் நிலத்தையும் சொத்துக்களையும் விலைக்கு வாங்குவதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றன என்று அந்த கட்டுரை மேலும் தெரிவிக்கிறது. கேரளத்தில் எவ்வவளவு நிலம் கிடைத்தாலும் 'பினமி' பெயரில் அராபியர்கள் விலைக்கு வாங்குகிறூர்களாம். ஏற்கனவே காஷ்மீரில் முஸ்லீம்கள் மெஜாரிட்டியாகவும், கன்னியாகுமரியில் கிறிஸ்தவர்கள் மெஜாரிட்டியாகவும், பெருகிக் கொண்டே போகின்றனர்.

இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் இந்நாட்டில் தங்களின் மதத்தை ஸ்தாபனம் பண்ணுவதற்கு எடுக்கிற முயற்சி போன்று, தமிழ் நாட்டில் நாத்திக வாதம் தோன்றிக் குழப்பத்தை உண்டு பண்ணிக்கொண்டே இருக்கின்றது. நம்மிடையே ஒன்றுமை இல்லாததால்தான் அன்னிய ஆட்சி நம்மை அடிமைப்படுத்தி வந்தது என்பதை இந்த நாத்திகவாதிகள் எண்ணிப் பார்க்கவேண்டும். பாமர மக்களிடம் கடவுள் இல்லை என்று கூறி மத நம்பிக்கையைக் குலைக்கக் கூடாது. பேச்சு சுதந்திரம் உண்டு, ஆனால் அதை நம்மைப் பலஹீனர்களாக்கப் பயன்படுத்தக் கூடாது. பிறர் நம்மைத் தாக்க வருகின்றபொழுது நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் அடிமைகளாகும் பழைய கதையே நேரிடும். மதத்தில் உள்ள குறைபாடுகளைத் தேடிப்பிடித்துப் பேசிக்கொண்டிருப்பதற்கு இது காலமன்று. மதத்தின் பெருமைகளை எடுத்துக் கூறி ஓர் ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். நாம் ஒன்றுபட்டால் மற்றவர்கள் நம்மைத் துன்புறுத்துவதை நிறுத்திவிடுவார்கள். ஹிந்துக் கோயில்சுவரில் எழுதுகிற 'கடவுள் இல்லை' 'கடவுளை மற' என்கிற வாசகத்தைச் சர்ச்சுச் சுவர்களிலும், மசூதிச்சுவர்களிலும் எழுதச் சுதந்திரம் உண்டா என்பதையும், மசூதிக்கு முன்னால் மேடை போட்டு அல்லாவை நம்புபவன் முட்டாள், கர்த்தரை நம்புகிறவன் காட்டுமிராண்டி, என்று எழுதச் சுதந்திரம் உண்டா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் பெருகி இந்துக்கள் எண்ணிக்கை குறைவார்

களானல் நாட்டுச் சுதந்திரம், மதச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் எல்லாம் பறிபோய்விடும் என்பதை இன்றைக்குச் சிந்தித்துப்பார்க்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். "ஹிந்துக் கோயில் களை இடித்துத் தொழில் நிறுவனங்களை அமைக்கவேண்டும். எல்லாரும் இஸ்லாம் மதத்தில் சேர்ந்தால் நான் மனமகிழ்ச்சி அடைவேன்" என்று எந்த ஒரு ஹிந்துவின் வாயிலிருந்தும் வரக்கூடாது, 'கடவுள் இல்லை' என்று கூறுகிறவர்கள், இந்துமதம் ஒழிந்தால் இந்துக்களாகிய நமக்குத்தான் பெரிய பாதிப்பு என்பதை அறிய வேண்டும். இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் தாங்கள் எண்ணிய எண்ணத்தை முடித்துக்கொள்வதற்கு வசதியாகப் போய்விடும். இந்து மதம் அழிந்து நாளை நம்நாடு முஸ்லீம் ஆதிக்கத்தின் கீழ் வந்தால் இந்த நாத்திக வாதம் பேசும் உரிமை போய்விடும். வாள்முனையில் பகுத்தறிவுவாதிகள் முஸ்லீம்களாக்கப்படுவார்கள். இந்தியக்கலாச்சாரம் அழிக்கப்படும் என்பதை மறந்துவிடக்கூடாது. மனம் தோன்றிய பிரகாரமெல்லாம் எதையாவது பேசிக் கொண்டே இருந்தால் அமைதியான வாழ்க்கைக்குச் சாவுமணி அடிக்கப்படும். தமிழகம் இஸ்லாமிய மயமாக்கப்பட்டால், பகுத்தறிவுக் கொள்கை பறந்துவிடும். சிந்தனை சுதந்திரம் போய்விடும். இஸ்லாம் மதத்தில் உருவ வழிபாடு கூடாது. ஆகவே இஸ்லாம் மதம் தலையெடுத்தால் சகிப்புத்தன்மை சிறிதும் அற்ற அக்கூட்டத்தார் முதல் முதலாக இப்போது ஊர் மத்தியில் கண்ணுக்குப் புலனாகிற சிலைகளைத்தான் தகர்த்து எறிவார்கள் என்பதை நாத்திகம் பேசும் ஹிந்து சகோதரர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சதா தமிழ் மொழியின் மேன்மைபற்றி பேசும் அரசியல்வாதிகளும், இலக்கிய வாதிகளும் சிந்தித்துப் பார்க்கவேண்டியது ஒன்று உள்ளது. தமிழ்நாடு இஸ்லாமிய நாடாக்கப்பட்டால் தமிழ் இருக்கும் இடத்தில் உருது ஊடுருவிவிடும் என்பதைத் தமிழ்ப் பற்றுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றெல்லாம் சதா வாயளவில் பேசிக்கொள்ளும் பகுத்தறிவு வீரர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பார்களாக. Duty for Duty sake என்கிறார் விவேகானந்தர். கடமையை கடமைக்காகவே செய்தல்; எந்தப் பிரதிபலனையும் கருதாது செய்யும் தொண்டு ஆகும். நம் நாடு சுதந்திரம் அடையவேண்டி தங்கள் குடும்பம், வீடு வாசல் அனைத்தையும் மறந்து அனைத்தையும் இழந்து நடுரோட்டிலே நின்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் எத்தனை பேர்? ஆனால் அந்தோ! நாடு சுதந்திரம் அடைந்தும் அந்த தேசிய தியாகச் செம்மல்களை நினைப்பவர் யார்? தமிழ் நாட்டின் வறுமையைப் போக்குவோம், ஏழை என்பவர்களே இல்லாத நிலையை உருவாக்குவோம் என்று வெறும் வாய்ப் பேச்சு பேசுவதால் ஆவதென்ன? சுதந்திர இந்தியாவில் ஊழல்களும், லஞ்சங்களும், பெருகி வருவதுதான் கைகண்ட பலனாக இருக்கிறது. லஞ்சங்களையும், ஊழல்களையும் ஒழிப்பதற்கு அரசாங்கம் முயலவேண்டும். ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டு வீண் காலம் போக்குவதற்கு இப்பொழுது அவகாசமில்லை. ஜாதிப் பூசல் நாட்டில் ஒழியவேண்டும் என்று சொல்லிக்கொண்டு ஜாதியை வளர்ப்பதற்கு இடம் தரக்கூடாது. கீழ்நிலையில் உள்ளவர்களை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்கு மேல்நிலையில் இருப்பவர்களுடைய உதவியை நாடவேண்டும். மேல்நிலையில் இருப்பவர்கள் கீழ்நிலையில் உள்ளவர்களைத் தங்கள் சகோதரர்கள் போல் எண்ணி அவர்களைக் கைதூக்கி விட வேண்டும். ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் உதவிசெய்வதற்குப் பதிலாக ஒருவர்க்கொருவர் திட்டிக்கொண்டும், பரிகாசம் செய்துகொண்டும் இருந்தால் நாம் முன்னேற்றம் அடைய முடியுமா என்பதை நன்கு சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

கட்டுப்பாட்டைப்பற்றி நமக்குப் பேசத் தெரியும். மக்களின் நலனுக்காக, மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அமையப் பெற்ற சட்டமன்றத்தில் அமர்ந்திருப்பவர்கள் நடந்துகொள்ளும் செயலை மக்கள் கண்டால் வேதனைப்படுவார்கள். எழுதத் தகுதியற்ற முறைகளில் பேசுவதும், நடந்துகொள்ளுவதும் கட்டுப்பாடு ஆகா. கடவுள் நம்பிக்கை ஒருவனிடம் இல்லையென்றாலும் கடமை, கண்

ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியன இருந்தால் ஒருவனைப் போற்றலாம். அதைவிட்டு விட்டு வெறுமனே மதத்தை இழிவுபடுத்தும் பேச்சில் ஈடுபட்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

'Strength is life; weakness is death' 'பலமே வாழ்வு, பலமின்மையே மரணம்' என்ருர் விவேகானந்தர். அந்தக் கருத்துக்கு விளக்கம் கொடுத்துப் பலம் என்ருல் எப்படி இருக்கவேண்டும் என்று பாடுகிருன் பாரதி:

"தோளை வலிவுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும்—கட்டு
மாரு வுடலுறுதி தந்து."

விவேகானந்தர் கூறுகிருர்: "ஒருவன் பொய் கூறுகிருன், திருடுகிருன், ஏமாற்றுகிருன், தகாத காரியங்களில் ஈடுபடுகிருன். இவற்றிற்கெல்லாம் உடல் பலஹீனமே காரணம். உடல் உறுதி உடையவன் தீர்மானம் பண்ணிஞல் இப்படிப்பட்ட இழி செயலிருந்து முற்றிலும் விலகி விடுவான்." இப்படிப்பட்ட உடல் உறுதியை ஊட்ட வல்ல உடற்பயிற்சியைப் பள்ளிகளில் போதிப்பது குறைந்து வருகிறது. அதைச் சில தேச பக்தியுள்ளவர்கள் சேர்ந்து சங்கமாக நடத்தி வருகின்றனர். அவர்களிடம் பயிற்சி பெற்று வருகின்றவன் தனக்கும் சமுதாயத்துக்கும் பெரிய அளவில் உதவுவான். நம் நாட்டில், தலைமை ஸ்தானத்திலிருந்து கீழ் மட்டம் வரை சுயநலமும், பேராசையும் ஊறிப்போயுள்ளது. இப்படிப்பட்ட சுயநலக் கும்பலோடு சேராது நாட்டுக்காக உழைக்கும் தீரர்களின் எண்ணிக்கை பெருகுவது மகிழ்ச்சிக்குரியது தானே! 'தீரர்களின் ஆதிக்கத்தை ஒடுக்கவேண்டும்' என்று பேசுவது பொறுப்பற்ற பேச்சு. நாட்டு நலனுக்காகப் பாடுபடும் எந்த இயக்கத்துக்கும் நாம் உதவக் கடமைப் பட்டிருக்கின்ருேம். குறிப்பாக ஹிந்து பண்புக் காகப் பாடுபடும் இயக்கத்தை வளர்க்க அதற்காக உயிரைக் கொடுக்கக்கூட ஆயத்தமாக உள்ள வீரஹிந்து இளைஞர்களே இப்போதைக்குத் தேவை. மத வெறியர்களுக்கு உதவியாக இருந்து ஹிந்து சமயத்தை அழிக்கலாம் என எவரேனும் நினைப்பார்களாஞல், அவர்களே அழிந்துபட்டுப் போவார்கள். பொறுமையாக அமைதியாக இருப்பதைக் கோழைத்தனம் என எண்ணிவிட வேண்டாம்.

யானை ஒன்று குளித்துச் சுத்தமாக ரோட்டில் போய்க்கொண்டிருந்தது. அப்போது அதன் எதிரே பன்றி ஒன்று ஓடிவந்தது. அது சாக்கடையிலிருந்து வந்தமையினுல் அதன் உடல் முழுதும் சேறு படிந்திருந்தது. தன் எதிரே வந்த பன்றியைப் பார்த்த யானை பன்றியின் சேறு தன் மீது படிந்துவிடுமோ என்று எண்ணிச் சற்று ஒதுங்கிக்கொள்ளலாம் என்று பின்வாங்க ஆரம்பித்தது. யானை ஒதுங்குவதைப் பார்த்த பன்றிக்கு ஒரே மகிழ்ச்சி. தன்னைப் பார்த்து ஒரு பெரிய யானை ஒதுங்கிப் பயபக்தியோடு பின்வாங்குகிறதென்ருல் தன் பெருமையை யாரே அறிய வல்லவர்! என்று நினைந்துக்கொண்டு மீண்டும் யானையை நோக்கி முன்னே சென்றது. யானைக்கு ஒரே எரிச்சலாக இருந்தது. இந்த அற்பப் பன்றி வந்து நம்மை மாசுபடுத்தி விட்டால் என்ன செய்வது! மறுபடியும் குளிக்கத்தானே போகவேண்டும்! இந்த நிலையில் யானை மீண்டும் பாதையை விட்டு ஒதுங்கி, பன்றி போக இடம் கொடுத்தது. திமிர் பிடித்த பன்றி யானையின் பொறுமையை, பரந்த மனதைப் புரிந்து கொள்ளாது யானையினிடம் திமிராகப் போகவே யானை காலைத் தூக்கியது. தன் எதிரே தன்னை அசுசிப் படுத்த வந்த பன்றியை ஒரே மிதியில் யானை நசுக்கிக் கொன்றது.

ஹிந்துக்கள் எதுவும் பேசாது, யானை போன்று தங்கள் போக்கில் இருப்பதைப் பார்த்து ஹிந்துக்களை நசுக்க முயன்ருல் அவர்கள் சீறி எழுவார்கள். அப்பொழுது நசுக்க முயலுபவர்கள் எளிதில் நசுக்கப்படுவார்கள். பொறுமை என்பது கோழைத்தனம் அன்று என்பதை ஹிந்துக்கள் நிரூபித்துக்காட்டிவிடுவார்கள்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை இல்லையெனில் அனைவருக்கும் தாழ்வே என்பதை ஹிந்துக்கள் அனைவரும் உணர வேண்டும். உணர்ந்து அதற்கேற்ப ஒற்றுமையுடன் விளங்குவார்களாஞல் உலகில் ஒரு சிறந்த, உயர்ந்த சமுதாயமாக ஹிந்துக்கள் திகழ்வார்கள் என்பது திண்ணம்.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

ஒரு குலம் சிறப்படைவது அக்குலத்துதித்த பெண்டிரால்தான். ஜனகர் குலத்தில் தோன் றியவர்களுள் சீதையைப் போன்றவர் யாரும் இல்லை என்ற பெருமையை ஏற்படுத்தியது சீதையின் சிறப்பு. சீதையை மனைவியாக அடைந்ததால் ரகு வம்சத்திலேயே ராமனைப் போன்றவரில்லை என்ற சிறப்பினை ராம னுக்கு ஏற்படுத்திக் கொடுத்தவள் சீதை. ஜனகன் குலத்தையே தன்னுடைய பண்பாட் டுச்சிறப்பினால் எல்லாரும் சீதையின் குலம் என்று பாராட்டுமளவு சீதையின் செயல் இருந்தது. அதைப்போன்று தன்னை மனைவி யாகப்பெற்ற ராமனுடைய குலமும் 'ராகவன் குலம்' என்று சிறப்படையும்படி சிறந்த பண்பாட்டுடன் நடந்துகொண்டாள் சீதை. தன்னை ராமனிடமிருந்து பிரித்த அரக்கர் குலத்தை அழித்து, தன்னைப்போன்று அரக் கரால் அவதியுற்ற வானவர் குலத்திற்கு மறு வாழ்வு அளித்துக் காப்பாற்றியவள் சீதை. இந்தச் சிறப்புக்களையெல்லாம் கண்டறியக் கூடிய வாய்ப்பினை மாருதிக்கு ஏற்படுத்திக் கொடுத்ததால் அவனுடைய குலமும் 'அனு மன் குலம்' என்று பெயர் பெறுமாறு செய் தவள் சீதை.

சீதை, தன்னுடைய பண்பாட்டுச் சிறப் பினால் தான் பிறந்த குலத்திற்குப் பெருமை யையும், தான் புகுந்த குலத்திற்குச் சிறப்பினை யும் ஏற்படுத்தியதோடன்றி, வானவர் குலம் துயரின்றி வாழுமாறு செய்யத் தானவர் குலத்தின் அழிவிற்கும் வழி தேடியவள் என் றும் இவற்றிற்கெல்லாம் மேலாக, அவளுடைய இந்தப் போராட்டத்தில் தனக்கும் பங்கு கிடைத்ததால் தன்னுடைய குலமும் பெருமை யடையும்படி சீதை செய்துவிட்டதாகவும் அனுமன் கருதுகின்றான்.

4. ஆனந்த நடனம் ஆடிய பண்புகள்

மகள், மணமகள், மருமகள் ஆகிய மூன்று நிலைகளிலும் சீதை தன்னிகரில்லாத் தனிச் சிறப்புடன் விளங்க அவளிடம் இருந்த சீரிய பண்புகள் யாவை? சீதை தான் பிறந்த, புகுந்த குலங்களுக்கும், அனுமன் குலத்திற் கும் வானவர் குலத்திற்கும் பெரும் புகழ் தேடித் தந்ததற்குக் காரணம் என்ன? தன்னை மனைவியாகப் பெற்ற ராமன் தனக்கு ஒப்பா ரும் மிக்காரும் இல்லாத ஒரு தனித் தலைவனாக விளங்கும்படி சீதை ஆற்றிய கற்பெருந்தவம் தான் எத்தகையது? இவற்றிற்கான விளக் கத்தை ஆராய்ந்து அற்புதமான முறையில் வெளியிடுகின்றான் சொல்லின் செல்வன். மூன்று பண்புகள் சீதையிடம் குடிகொண் டிருந்தன.

முதலாவதாக, சிறந்த உயர்ந்த 'குடிப் பிறப்பு'. எல்லா வகையிலும் உத்தமமானகுடிப் பிறப்பு என்ற பண்பு, தனக்கு ஏற்ற இருப் பிடம் எது என்று தேடிக்கொண்டிருந்தது. அப்படி அரும்பாடுபட்டுத் தேடி இறுதியில் தனக்கு மிகவும் பொருத்தமான இடம் சீதை தான் என்று தெளிந்து அவளிடம் வந்து சேர்ந்து கொண்டுவிட்டது. தக்க இடத்தில் சேர்ந்துவிட்ட மகிழ்ச்சியில் அப்பண்பு அவ ளிடமிருந்துகொண்டு ஆனந்தநடனம் ஆடியது.

இரண்டாவதாக 'பொறுமை' என்ற பண்பு மனிதரிடத்திலெல்லாம் இடம் தேடிச் சலித் துப்போய், எங்கும் இடம் காண முடியாத நிலையில், தனக்கேற்ற ஓர் இருப்பிடம் கிடைத்தபோது எல்லையற்ற மகிழ்ச்சியில் துள்ளிவிளையாடியது. அது கண்டுபிடித்த இடம், 'இரக்கமே பெண்ணுருவாய்வந்ததோ!' என்று யாவரும் வியக்கும் வண்ணம் அரக்கிய ரிடமே கருணைகாட்டிய சீதாப்பிராட்டிதான் என்று சொல்லவும் வேண்டுமோ?

மூன்றாவது, வானம் பொய்யாது, வளம் பிழைப்பு அறியாது, நீள் நில வேந்தர் கொற் றம் சிதையாது காக்கும் மகளிர் 'கற்பு' என் னும் பண்பு, எந்தச் சூழ்நிலையிலும் தன்னைக் கைவிடாத நிலைக்களனாகச் சீதையைக் கண்டு, சென்று, சேர்ந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் களித்தது.

இம் மூன்று பண்புகளும் — இற்பிறப்பு, இரும்பொறை, கற்பு—தங்களுக்கேற்ற நிலைக் களனாக, நிறை தவமன்னதோர் செயலுடைய வளான சீதாதேவியை அடைந்து, ஆனந்தமா

கக் கூத்தாடிக்கொண்டிருந்தன. சிறையிருந்த செல்வியைத் தேடிப்போன அனுமனுக்கு அமிழ்தின் வந்த தேவியும், ராகவனின் ஆவியு மான சீதாதேவியின் உருவம் கண்களில் பட வில்லை. அதற்கு மாருக, அவளிடம் குடி கொண்டிருந்த குடிப்பிறப்பும், பெரும் பொறு மையும், கற்பும் ஆகிய மூன்று பண்புகளும் களிப்புடன் நடனமாடிக்கொண்டிருந்த காட் சியே காற்றின் மைந்தனின் அகக் கண்களுக் குப் புலப்பட்டதாம். தன் அனுபவத்தை ராம னிடம் அனுமன் கூறும் அழகைப் பாருங்கள்:-

இலங்கையில்,

"நற்பெருந்தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன்
அல்லேன்;
இற்பிறப்பு என்பது ஒன்றும் இரும்பொறை
என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம்
புரியக் கண்டேன்,"

—திருவடி தொழுத படலம் 29.

என்பது அனுமன் வாக்கு.

அனுமன் குறிப்பிடும் மூன்று பண்புகளும் பெண்டிர்க்கு அணிகலன்களானவை யென்றும், அவை நிரம்பியவள் கோசலை என்றும் அயோத்யா காண்டத்தில் கம்பன் கூறுவதை இங்கு ஒப்பிட்டு மகிழலாம்:-

"குலம், பொறை, கற்பு, இவை சுமந்த கோசலை"

— பள்ளிபடைப் படலம் 95.

இம்மூன்று பண்புகளையும் கோசலை 'சுமந்து' கொண்டிருந்தாள் என்று அங்குக் கூறிய கம் பன், இங்கு அம் மூன்று பண்புகளும் சீதையி டம் தங்கி நடம் புரிந்தன என்று கூறுவதன் நயம் காண்க.

"சிங்காதனத்தில் அரசனும் அரசியும் அரசி ளங் குழந்தையும் ஒருங்கு விளங்கக் கண்டு, அந்தக்கம்பீரமான காட்சியில்முழுமனமும் முழு கிய ஒருவன் சிங்காதானத்தைக் காணுனன்றே! அவ்வாறே, சீதையிடத்தே குடிப்பிறப்பும் பொறுமையும் கற்பும் ஆகிய முக்குணங்கள் மூர்த்தன்னியமாய் முனைந்து நின்று முற்பட் டுத் தோன்றிச் ஜொலிக்கக் கண்டு, அந்தக் காட்சியில் மனம் அழுந்தி அவசனுன அனு மன், அந்தச் சமயத்தில் அக்குணங்களைக் கண்டதன்றி, அவைகளையுடைய அவளைக் காணவில்லை. இயல்பாக வடிவமும் தொழி லும் இல்லாத, கட்புலனுகாத இற்பிறப்பு முதலிய குணங்களின் சிறப்பு இனிதுபுலப்பட, அவைகளை காணப்படும் உருவமும் செயலும் உடையனவாகக் கூறிய அதிசயக் கவி சாதுரி யம் பாராட்டத்தக்கது."

—[கம்பராமாயண சாரம். வெ. ப. சுப்பிர மணிய முதலியார் சுந்தர. பாடல் 141]

"சீதையை 'தவத்தள்,' 'பெருந்தவத்தள்,' 'நற்பெருந்தவத்தள்' என்று அடைமொழி களாற் சிறப்பிக்கின்ருன் அனுமன்.

"தவம் என்பது ஈண்டு, தன்னைத்தான் கொண்டொழுகும் நெறி. இஃது ஒருமை மக ளிர் இல்லில் இருந்தே பெரும்பாலும் செய்து ஒழுகுவது;

"பெருந்தவமாவது கணவனது வாழ்விலும் தாழ்விலும் உடனிருந்து கற்புநெறி வழுவாது சோற்பது;

"நற்பெருந்தவமாவது பிறர் தன்னைக் கண வனிடமிருந்து பிரித்த நிலையிலும், துன்புறுத் திய நிலையிலும், தன்குடிமை, பொறை, கற்பு கட்குக் குறைவு நேராது ஒழுகுவது.

"இம் மூன்றும் நிலையையே பிராட்டி இப் போது மேற்கொண்டுள்ளாள் என்பது அனு மன் கருத்து. சாம்பவான் கூறியபடி 'நினை வாலும் மாதர் நலம் பேணுது வளர்ந்தவன்' மாருதியாதலின் பிராட்டியைத் தான் கண்ட தையும் பேசியதையும் மறந்தவன்போல், இலங்கையில் தான் கண்டனவெல்லாம், நற் பெருந்தவத்தின் மூன்று அம்சங்களான இற் பிறப்பும், இரும்பொறையும், கற்பும் ஆகிய குணங்களே என்றும், அவை மூன்றும் கூடிக் களிநடம் புரிந்துகொண்டிருந்ததனையே தான் பார்க்கலாயிற்று என்றும், அதனுல் தேவரீர் தேடச்சொன்ன நங்கையை, தான் பார்க்கக் கூடவில்லை என்றும் சாதுரியமாகக் கூற லாயினுன் மாருதி என்க."

—[கம்பராமாயணம் சுந்தரகாண்டம் vol II பக்கம் 429. அண்ணமலைப்பல்கலைக் கழகப் பதிப்பு]

5. சிறையிருந்தவள் சிறப்பு

சீதையின் தவத்தினுல் பெண்குலத்திற்கே பெருமை உண்டாயிற்று என்று சொன்ன மாருதி, இந்தப் பெருமை மண்ணுலகத்து

மகளிர்க்கு மாத்திரமன்றி விண்ணுலக நங்கையர்க்கும் கிடைத்தது என்கின்ருன். மண்ணுலகத்தோர் வணங்கித்தொழும் வானுலக நங்கையர்கள் பெருஞ்சிறப்படைந்தது அந்த மண்ணுலகில் பிறந்து வளர்ந்த சீதாதேவியினல் தான் என்று அறுதியிட்டுக் கூறுகின்ருன் அஞ்சனைச் செல்வன்.

வெள்ளெருக்கம் சடைமுடியனுகிய சிவ பெருமானின் இடப்பாகத்திலிருந்த பார்வதி தேவி, தற்போது சிவனின் தலையிலேயே வீற்றிருக்கும் தகுதி பெற்றுவிட்டாளாம்.

பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனின் பரந்த மார்பில் வீற்றிருந்த திருமகள் இப்போது அம் மாயவனின் ஆயிரம் திருமுடிகளின் மேல் வீற்றிருக்கும் தகுதி பெற்றுவிட்டாளாம்.

சிறையிலிருந்தவள் செய்த தவத்தின் சிறப்புத்தான் இதற்குக் காரணமாம். "தக்கவன் ஒருவன் வாழத் தன் குலமெல்லாம் வாழும் என்றபடி ஓரினத்தாரில் ஒருவர் நன்மை தீமைகளினல் அவ்வினத்தவர்களுக்கெல்லாம் பெருமை சிறுமைகளுண்டாதல் இயல்பு; அங்ஙனம், மகளிருள் சீதாபிராட்டியின் கற்பு நிலையினல் மண்ணுலகத்து மாதரே அன்றி இந்திராணி முதலிய வானர மாதரும் சிறப்பை அடைந்தனர் என்பார்."

—[சுந்தர. திருவடி 34. வை. மு. கோபால கிருஷ்ண மாச்சாரியார் உரை]

பெண் தெய்வங்களைக் குறிப்பிட்டதால் பெண் இனம் முழுவதையும் குறிப்பிட்டதாகவே எடுத்துக்கொள்ளலாம். அதனல் பிள்ளை லோகாச்சாரியார்: "சிறையிருந்தவள் ஏற்றத்தால் மாதர்குல ஏற்றம் சொல்கின்றது இச்செய்யுள்" என்று கூறுகின்ருர்.

சீதை ஆற்றும் தவத்திற்கு ஒரு குறிப்புக் காட்டுகிருன் அனுமன் ராமனுக்கு. உருவத்தால், உடலால் ராமனைவிட்டுச் சீதையைப் பிரித்தான் இரக்கம் என்று ஒரு பொருள் இல்லாத அரக்கர் கோமான். ஆனல் உண்மையில் நடந்தது என்ன?

கண்களால் காணும் காட்சியெல்லாம் சீதைக்கு ராமனுடைய உருவமாகவே தெரிந்தன. அசோக வனத்திலிருந்த பொய்கைகூட ராமனுடைய மேனியையே அவளுக்குக் காட்டியது; சீதையின் சிந்தையெல்லாம் ராமனே நிறைந்திருந்தான்; அவளுடைய வாய் மொழியாக வருபவையெல்லாம் ராமனுடையநாமமே; அவளுடைய மேனியின் ஒவ்வொரு பாகமும் ராமனையே நினைவூட்டிக் கொண்டிருந்தன; எனவே மனம், மெய், மொழிகளால் சீதை ராமனைப் பற்றியே நினைந்து, உணர்ந்து பேசியும் வந்தாள் என்பது தெளிவாகின்றது. இந்த நிலையில் ராமனைவிட்டுச் சீதையை ராவணன் பிரித்துவிட்டான் என்பதோ, சீதை ராமனை விட்டுப் பிரிந்திருந்தாள் என்பதோ எப்படிப் பொருத்தமாகும் என்று ராமனிடம் கேட்கின்ருன் அனுமன்.

"சீதை, எப்போதும் ராமனை உருவெளித் தோற்றமாகக் காணலால் அவன் அவள் கண்ணைவிட்டுப் பிரியாமையையும், அவனை அவள் சதா சிந்தித்துக் கொண்டிருத்தலால் சிந்தையை விட்டுப் பிரியாமையையும், இடைவிடாமல் அவன் பெயரைச் சொல்லிக்கொண்டிருத்தலால் வாயைவிட்டுப் பிரியாமையையும், ஓயாது அவன் காதல் கூர்தலால் மன்மதன் அம்பு செய்த புண்ணைவிட்டுப் பிரியாமையையும் உடையாள் என்பது உள்ளுறைப் பொருள். இதற்கு முன், காணக்கூடாத குணங்கள் காணப்பட்டனவாகக் கூறியது அதிசயமானது. அந்த அதிசயத்திற்குமேல் அதிசயமானது இங்கு ராமனைப் பிரிந்த சீதையைப் பிரியாதவளென்றது. மேற்கொண்டும் அதிசயமானது,பிரிந்த ஸ்தூல ராமன் ஒருவனுயிருக்க, வாயில் உள்ள ராமன், மனத்திலுள்ள ராமன், கண்ணில் உள்ள ராமன், புண்ணில் உள்ள ராமனுகச் சூட்சும ராமர் பலராயிருப்பதாகக் கூறியது."

—[கம்பராமாயண சாரம், வெ. ப, சுப்பிரமணிய முதலியார் சுந்தரகாண்டம் பாடல்142]

ராமனுக்காகச் சீதை ஆற்றும் தவத்தின் இயல்பை ராமனிடம் விளக்குவதற்கு இதை விடச் சிறந்த முறை வேறெதுவும் இருக்க முடியாது.

சீதையைப்பற்றி ராமனிடம் கூறியது போன்றே, சீதையை நினைந்து உருகும் ராமனின் நிலைபற்றிச் சீதையிடம் அனுமன் கூறியதை இங்கு நினைவு கூர்வது பயனுள்ளதாகும். சீதையின் நினைவால் ராமன் தன்மேனி

யையே மறந்துவிட்டான்; இன்னுயிர் இன்றி வைகும் இயந்திரப் படிவம் போன்றவனானான்; அவனுடைய உயிராகிய சீதை அசோக வனத்திலிருக்கும்போது அவனிடம் எந்த உயிர் இருக்கின்றது விடுவதற்கு? என்று சீதையிடம் கேட்பதன் மூலம் சீதையைப் பற்றிய சிந்தனையில் ராமன் ஆழ்ந்திருந்ததை அறிவுறுத்துவான் அனுமன்.

அனுமன் சுக்ரீவனைத் தன் மன்னனாக ஏற்றுக்கொண்டவன். ராமனைச் சந்தித்த பின்னர் ராமனையே தன் தெய்வமாக வணங்க ஆரம்பித்தவன். தற்போது சீதையைக் கண்டதும் அவளைத் தன் 'பெருந்தெய்வம்' என்று ஏற்று அவளிடம் பக்திகொள்கின்றான். கற்புடைப் பெண்டிரைத் தெய்வமாகக் கருதுவது நம் மரபு. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள்,

"கற்புக்கடம் பூண்ட இத் தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"
— சிலப்பதிகாரம் 15: 143-4.

என்று கண்ணகியைச் சிறப்பித்த செய்தியை இங்கு நினைவுகூறலாம்.

சீதை, தன் குலத்திற்கும், கணவனுக்கும், கணவன் குலத்திற்கும், பெண்குலத்திற்கும் வானவர் குலத்திற்கும் கொடுத்த பெருமைகளுடன் அனுமனுக்கும், அவன் குலத்திற்கும் அளித்த பெருமையையும் ஏற்றத்தையும் அனுமன் நன்றிப் பெருக்குடன் ராமனிடம் குறிப்பிட்டுப் பேசுகின்றான். சீதையைப் பற்றி அவன் கூறும் மொழிகள் அவன் உள்ளத்தை நமக்குத்தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

"என் பெருந் தெய்வம்', — சுந்தர திருவடி 26.
"என் குலம் எனக்குத் தந்தாள்" ,, ,, 28.
"என் அலது இல்லை என்னை ஒப்பு என எனக்கும் ஈந்தாள்" — Ibid 27.
"என்னுடைய இறைவி" — யுத்த வீடணன் அடைக்கலப் படலம் 98.
"புனித மாதவத்து அணங்கு" — சுந்தர காட்சிப் படலம் 140.
"என்னை ஆளுடை நாயகன் தேவி" ,, ,, 158.

என்றெல்லாம் பேசுகின்றான் அனுமன். 'தவம் செய்த தவமாம் தையல்' என்று சீதைபற்றிய தன்னுடைய கணிப்பை ராமனிடம் அனுமன் எடுத்துக் கூறும்போது அவனுடைய பக்திப் பெருக்கினையும் நாம் கண்டுகொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது.

சுவாமி விவேகானந்தர் திட்டமிட்டு அமைத்த சமூகசேவை மிகப் பெரிய காரியமாகும். காசியில் அமைந்துள்ள சேவாச்ரமம் நோயாளிகளுக்குச் சேவை செய்து வருகிறது. அந்தச் சேவாச்ரமப் பணியைச் செய்வது தெய்வப் பணியைச் செய்வதற்கு நிகராகும். சுவாமி விவேகானந்தரைக் காணும் பொழுதெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிவ தரிசனம் பெற்றார். எனவே ஸ்ரீ விவேகானந்தர் அமைத்த சேவாச்ரமத்துக்குச் செய்யும் பணிவிடை சிவனுக்குச் செய்யும் பணிவிடையாகும். சேவாச்ரமப் பணியைத் தெய்வப் பணியாகச் செய்கின்றவர்களுடைய பூர்வ ஜன்ம வினைப்பயன்களெல்லாம் அழிகின்றன. சித்தம் சுத்தி அடைகின்றது. பின்பு அது முக்திக்கும் தகுதியுடையதாகின்றது. தெய்வப்பணி என்ற உணர்வுடன் சமுதாயப்பணி செய்வதுதான் தற்காலத்துக்குரிய ஆத்ம சாதனையாகும்.

தெய்வப்பணி என்ற உணர்வுடன் சுயநலமற்றுப் பேருணர்வுடன் மூன்று நாள் பணிவிடை செய்தாலே தெய்வக்காட்சி பெற்று விடலாம். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற உணர்வுடன் சமுதாயப் பணியைத் தெய்வப் பணியாகச் செய்கின்றவர்களுக்கு மெய்ப்பொருள் விளக்கம் உண்டாகின்றது. எடுத்துக் கொண்ட பணிவிடையை முழுக்கவனத்துடனும் பொறுப்புடனும் செய்யும் பொழுது அது சிறந்த ஆத்ம சாதனையாகிறது. முழு மனதையும் ஈடுபடுத்திப் பொறுப்புடன் செய்யும் பணிவிடை பிரார்த்தனை செய்வதற்கும், தியானம் செய்வதற்கும் சமமாகும். நரசேவையை நாராயண சேவையாகச் செய்யவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார்.

—சுவாமி துரியானந்தர்

பொருளாதாரக் கொள்கைகள்

(சுவாமி ஸதானந்தர்)

பாரமார்த்திக வாழ்வு என்பது லௌகிக வாழ்க்கையோடு சம்பந்தமற்ற, தனியான வாழ்வு அன்று. நாம் லௌகிக வாழ்க்கையில், நித்திய வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நீதி, நேர்மை, தர்மமே பாரமார்த்திக வாழ்வாக வடிவெடுக்கிறது. வேர் இன்றி மரம் வளர முடியாது. அதேபோன்று அறநெறிகளுக்கு உட்பட்ட வாழ்வுதான் பாரமார்த்திக வாழ்வுக்கு வேராகும். பாரமார்த்திகத்தில் ஒருவன் வளர வளர அவன் சீலம் தெய்வீகமானது ஆகிறது'. ஆகையால் முதலில் அறநெறி அனுஷ்டானம், ஒழுக்கமான வாழ்வு அவசியம். நம் சமூகத்தில் அறநெறி அனுஷ்டானம் எந்த நிலையில் இருக்கிறது என்று ஆராய்வோம். அறநெறியை எல்லாத்துறைகளிலும் அனுஷ்டிக்கத் தூண்டுவது அவசியமாகிறது. நீதி, நேர்மை, தர்மம், சத்தியம், பக்தி, ஒற்றுமை, பிறன்மனை விழையாமை, பொறுமைப்படாது இருத்தல், நன்றி மறவாமை ஆகிய அறநெறிகளைப் பற்றியே மக்கள் மறந்துவிட்டார்கள் போன்று தோன்றுகிறது. இவைகளைக் கடைப்பிடிக்காத சமுதாயம் விலங்குக் கூட்டம்போலாகிவிடும். ஒழுக்கமான வாழ்வினால்தான் மக்கள் மேலோர் ஆனார்கள். வாழ்வில் அறநெறி கடைப்பிடிக்கப்படாவிட்டால் தனி மனிதனின் வாழ்விலும் சமூகவாழ்விலும் முன்னேற்றமில்லை.

வியாசர் கண்ணீர் மல்க, இருகைகளையும் கூப்பி நின்று மனித இனத்தை நோக்கி வேண்டுகின்றார்: "என் அன்பான குழந்தைகளே! தர்மானுஷ்டானத்தின் மூலமாக அர்த்தமும் காமமும் (அதாவது பொருளும் எல்லா இன்பங்களும்) வேண்டியவாறு கிடைக்கின்றன. அவைகளைப் பெற ஏன் அதர்மமான முறைகளில் வீணே முயலுகிறீர்கள்?" 'பால் காசு பாலோடு, தண்ணீர்க் காசு தண்ணீரோடு போய் விட்டது' என்பது பழமொழி. தவறான சம்பாத்தியம் விஷம் கலந்த உணவு போன்றது. விஷ உணவு உடலைப் பாதிக்கிறது. தீய, அதர்ம சம்பாத்தியம் நம் வாழ்வையே பாதிக்கிறது. உடல், மனம், உற்றார், உறவினர், உடன் வாழும் ஏனைய மக்கள் இவர்களுடன் உள்ள இணக்கம் ஆகிய யாவற்றையுமே சங்கிலி போல் பாதிக்கிறது. நோய் வருகிறது, விபத்து வருகிறது, குடும்பச் சண்டை வருகிறது, ஊர்ப்பகை வருகிறது—இவைகள் இந்த ஜன்மத்தோடு முடியாமல் சங்கிலிபோல் மறு பிறவிகளிலும் தொடருகின்றன. தினையளவு சுகத்திற்கு ஈடு பனை அளவு துன்பம். பிறர் இங்ஙனம் துன்புறுவதைப் பார்க்கிறோம், நாமும் அனுபவிக்கிறோம். அப்படியிருந்தும் அறிவு வரவில்லையே! எனவே லஞ்சம் வாங்க வேண்டாம், கலப்படம் பண்ணிச் சம்பாதிக்க வேண்டாம், பிறரை ஏமாற்றித் துரோகம் செய்யவேண்டாம், நயவஞ்சகர்களாகிய அரசியல் வாதிகளிடம் கைக்கூலி வாங்கவேண்டாம், பொய்ச்சாட்சி சொல்லிப் பணம் வாங்க வேண்டாம். மாணவர்களை வைத்தியக் கல்லூரியிலோ, இன்ஜினீயரிங் கல்லூரியிலோ சேர்க்கப் பணம் வாங்கவேண்டாம், பொதுப் பணங்களைக் கையாடல் செய்யவேண்டாம், மாணவர்களைத் தேற வைக்கப் பணம் வாங்க வேண்டாம். பொய் வழக்குகளை ஜயிக்கவைக்கப் பணம் வாங்கவேண்டாம். இவைகள் எல்லாம் மிகவும் பாபமானவை; தேசத்தை, சமூகத்தைப் பாழ்படுத்தக்கூடியவை. இந்தப் பாபம் துன்பமாக நமக்குத் திரும்பி வந்து சேரும். துன்பத்தை விலைகொடுத்து வாங்குவாருண்டோ? பாப சம்பாத்தியம் ஒருநாளும் வேண்டாம். அபரிமிதமான பொருளாசை நம்மை எப்படியெல்லாம் பண்ணச்செய்கிறது! கீழ்மைப்படுத்துகிறது! பொருளாசை பணக்காரனிடம்மட்டும் இல்லை; ஏழை, கூலிக்காரன் ஆகியவர்களிடமும் அது இன்று இருக்கிறது. பேராசைக்காரன் பெருநஷ்டமடைவான். பேராசைக்காரன் பிச்சைக்காரனிலும் கடைப்பட்டவன்-A man of Passion is a beggar of beggars-என்பது ஆங்கிலப் பழமொழி.

ஏழை ஒருவன் இருக்கிறான். அவன் கூலி வேலை செய்துதான் பிழைக்கவேண்டும். கூலி எவ்வளவுதான் கூட்டிக்கொடுப்பார்கள்? அது ஜீவனத்திற்குப் போதவில்லை. எனவே அவன்

மனைவியும் வேலை செய்கிறாள். இப்போது சிறிது சமாளிக்க இயல்கிறது. அவன் தாய் சில வீடுகளில் பாத்திரம் தேய்த்து, வாசல் கூட்டிச் சம்பாதிக்கின்றாள். அவன் தந்தையும் கால் நடைகளை மேய்த்துக் கூலி பெறுகிறான். இங்ஙனம் அவர்கள் உழைத்துத் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள். செலவையும் சுருக்கி வாழ்கிறார்கள். அக்குடும்பம் முன்னேறுகிறது. உழைப்புத்தான் சம்பாத்தியம், வருமானம் ஆகும். உழைப்புக் குறைவாக இருக்கவேண்டும், கூலிமட்டும் அதிகம் வேண்டும் என்பது தலைகீழான பாடம். இவ்வெண்ணம் சமுதாயத்தின் சாபக்கேடு ஆகும். அரசியல்வாதிகள் இப்புதிய கொள்கைகளைப் பரப்புகிறார்கள். தனி மனிதனின் வளர்ச்சி, முன்னேற்றம் போலவேதான் தேச வளர்ச்சியும் அமையும். ஒருகுடும்பத்தில் யாரும் உழைக்காமல் பிதுரார்ஜித சொத்தைக் கரைத்து வந்தால் அக்குடும்பம் வறுமை வாய்ப்படும். நம் தேசமும் அந்நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

இப்படி உழைப்பு, சம்பாத்தியம் தருவது போன்று நமது சேமிப்பும் சம்பாதித்துத்தரும். பணம், பணம் சம்பாதிக்கும். இப்போது ஒவ்வொரு பாங்குகளிலும் புதிய புதிய சேமிப்புத் திட்டங்களை உருவாக்கி வெளியிட்டுக் கொண்டுள்ளார்கள். மாதா மாதம் சிறிய தொகை கட்டினால் சில வருஷங்களில் அது பெரிய தொகை ஆகிவிடும். அது இத்தனை விகித வட்டி ஆகிறது, அது இன்னின்ன காரியங்களுக்கு உங்களுக்குக் கை கொடுக்கும் என்றெல்லாம் விளம்பரம செய்கிறார்கள் அல்லவா? சேமிக்காமல், உழைக்காமல் சம்பாதிப்பது எப்படி என்கிற சிந்தனைகளை வளர்க்கவேண்டாம். கயவர்களாகிய அரசியல் வாதிகளின் சுலோகங்களைக் கேட்கவேண்டாம். நீங்கள் நன்கு உழையுங்கள். எளிமையாக வாழுங்கள். செலவுகளைக் குறையுங்கள், சேமிப்புச் செய்யுங்கள். உங்கள் வருமானம் பெருகும். உங்கள் வருமானங்களை உங்களுக்கெனச் செலவிட வேண்டாம். அதை நல்ல, பொதுக்காரியங்களுக்கும் பயன்படுத்துங்கள். அது யக்ஞம் ஆகிறது. உலகிலிருந்து ஏற்றுக் கொள்வது குறைவாகவும், உலகுக்கு வழங்குவது அதிகமாகவும் இருந்தால் அது யக்ஞம் எனப்படுகிறது. விருக்ஷங்களில் தென்னையும், வாழையும் யக்ஞ சொரூபங்கள். அவை கற்பக விருக்ஷங்கள் எனப்படுகின்றன. நம் கழிவுகளையும் சாக்கடை நீரையும் ஏற்றுக்கொண்டு தென்னை தன் எல்லா உறுப்புக்களாலும் உலகுக்குப் பயன்படுகிறது. விலங்குகளில் பசு யக்ஞ சொரூபம். அது குறைவாக ஏற்று உலகுக்குப் பயன்படுகிறது. அதன் சாணமும் மூத்திரமும் உயர்தரமான உரமாகின்றன. அது லக்ஷ்மி என்றும் காமதேனு என்றும் போற்றப்படுகிறது. இந்த ஸ்தாவரம் ஜங்கமத்தை விட மனிதன் மேலானவன் அல்லவா? அவன் யக்ஞ மூர்த்தியாக, யக்ஞ ராமனாக வாழவேண்டும். இப்படி வாழ்ந்தால் இவ்வுலகில் கஷ்டங்கள், கண்ணீர் எல்லாம் துடைக்கப்படும். இவ்வுலகமே சொர்க்கம் ஆகி அதற்கும் மேற்பட்ட கைலாசம், வைகுண்டம் ஆகிவிடும். மானுட வாழ்வு தெய்வ நிலைக்கு உயர்ந்து விடும்.

இது ஒரு சூக்ஷ்மமான தத்துவம். இதைப் பற்றிப் பொருளாதார நிபுணர்கள் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள். நம் நல்வினைப் பயன் நம் வருமானங்களை, சௌபாக்கியங்களை விருத்தி செய்யும். இவ்வுலகம் ஸ்தூலமாகக் கண்ணுக்குத் தெரிவதைவிட, சூக்ஷ்மமான ஜடசக்திகளால் இயக்கப்படுவதைவிட, அதி சூக்ஷ்மமான அத்யாத்மிக தத்துவங்களால் அதிகம் இயக்கப்படுகிறது. 'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்' என்பது ஔவையார் வாக்கு. 'வினைப்பயனை முறையாக வழங்குபவன் நானே' என்று பகவான் பகர்கிறார். 'கொடுக்கிற கடவுள் கூரையைப் பொத்துக் கொண்டுவந்து கொடுக்கும்' என்பார்கள். சிலருக்கு எடுத்த காரியங்களில் எல்லாம் தோல்வி, நஷ்டம் ஏற்படுகின்றன. சிலருக்கு எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றியும் ஆக்கமும் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் வினைப்பயனின் விளைவே. தன்வினை தன்னைச் சுடும், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்றெல்லாம் நாம் படிக்கவில்லையா? வாழ்க்கையைப் பற்றிய அனுபவபூர்வமான உண்மைகள் இவை. நல்

வினை நல்ல பயனையும், தீவினை தீய பயனையும் உண்டாக்கும். பொருளாதார நிபுணர்களின் மனதிற்கு எட்டாத சமய உண்மைகள் இவை. சமயச் சார்பில்லாத, சன்மார்க்கமில்லாத, ஒழுக்கமில்லாத எந்தத் தனிமனிதன் ஆனாலும் சரி, அரசாங்கம் ஆனாலும் சரி பாழாகிவிடும். இன்று நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிற உண்மை இது. நம் மக்கள் சமயத்தின்பால், அறநெறியின்பால் தங்கள் முழுமனதையும் செலுத்துவார்களாக!

அரசு பஸ் கம்பனி ஒன்றில் ஆண்டு முடிவில் இரண்டரைக் கோடி ரூபாய் லாபம் கிடைத்தது என்று பெருமையுடன் அக்கம்பெனியின் டிரைவர் ஒருவர் பிரயாணி ஒருவரிடம் சொன்னார். அந்த வார்த்தை மனதுக்குத்திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. ஊதாரித்தனமான, பொறுப்பற்ற அரசு நிர்வாகத்தில் இவ்வளவு லாபம் வந்தது, உண்மையில் மகிழ்ச்சி தருகிற விஷயமே ஆகும்; பெருமைப்பட வேண்டியதுதான். அந்தப் பிரயாணி 'உங்களுக்கு என்ன தந்தார்கள்?' என்று கேட்டார். அந்த டிரைவர் முகத்தைச் சுழித்துக் கொண்டு 'நாங்கள் உழைத்துக் கொட்டினோம், எங்களுக்குக் கிடைத்தது நாமம்தான்' என்றார்.

தொழில் செய்வதில் லாபம் வருகிறது என்றால் அதில் சிந்திக்கவேண்டிய விஷயங்கள் மூன்று உள்ளன: (1) வியாபாரம் செய்து அரசாங்க வருமானங்களைப் பெருக்கி அவற்றைத் தேச நலனுக்குப் பயன்படுத்தலாம் என்பது அரசாங்க நோக்கமாக இருக்கலாம். அதைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் அந்த நோக்கம் நிறைவேறாது. பிளாக்மார்க்கட், பதுக்கல், விலை ஏற்றம் இவைகளைத் தடுக்கும் நோக்கத்துடனும் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அரசாங்க ஊழியர்களோ சாதாரண பொது மக்களைக்காட்டிலும் தைரியம் மிகுந்தவர்கள். அதிகாரம் அவர்கள் கையில் இருக்கிறது. நடைமுறைச் சட்டதிட்டங்கள், நுணுக்கங்கள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு ஆசையும் குறைவாய் இல்லை. மூட்டையின் பேரில் இவ்வளவு அதிகப்படி அனுமத்துப் பணம் தரவேண்டும் என்று நிர்ப்பந்திப்பது, ஊசி குத்திச் சாமானைத் திருடுவது போன்ற செயல்களால் விலை ஏதும் குறையவில்லை, எதிர்பார்த்த பலன் இல்லை. (2) இரண்டரைக் கோடி ரூபாய் வருமானம் வர எத்தனைகோடி பேர் எவ்வளவுகோடி ரூபாய் கட்டணமாகச் செலுத்திப் பிரயாணம் செய்திருக்கவேண்டும்? அதில் அவர்களுக்கு ஏதும் பங்கு இல்லையா? (3) இரண்டரைக்கோடி ரூபாய் வருமானம் வந்தது அந்த டிரைவரால் மட்டுமன்று. எத்தனை ஆயிரம் பேர் கூடி வேலை செய்துள்ளார்கள். போட்ட முதலுக்கு வட்டி போன்றுதான் இந்த லாபம் வந்துள்ளது. அதைப் பங்கு போட்டால் முதல் குறைந்துவிடும், வளராது. அபிவிருத்திக் காரியம் ஏதும் செய்ய முடியாது. தொழிலில் போட்ட முதல் நாளடைவில் தேயும், பெறுமானத்தில் குறையும், பணம் தன் மதிப்பில் குறையும். கிடைக்கும் வருமானமும் ஓர் ஆண்டைப் போன்று எல்லா ஆண்டுகளிலும் ஒரேமாதிரி வராது. நஷ்டமும் வந்துவிடும். தீ, வெள்ளம் விபத்துக்கள் மூலம் பெருநஷ்டங்கள் நேரலாம். ஆகையால் லாபம் முழுவதையும் செலவழித்து விடக்கூடாது. சேமித்தல் நலம். நல்ல ஆக்க காரியங்களில் செலவிட்டால் திருப்திப்படலாம். பிரித்துப் பங்குபோட்டு வாணவேடிக்கை போன்று எரித்துச் செலவழித்துத் தீர்த்தால் அது தேசத்தின் பெருநஷ்டமாகும்.

ஒவ்வொருவரும் தாங்கள் செய்கிற வியாபாரம், விவசாயம், தொழில், மற்ற எல்லா விவகாரங்களிலும் தங்களுக்கு அதிகம் வரவேண்டும், தாங்கள் செய்கிற செலவுகள் குறைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கூலிக்காரன் தனக்குக் கூலி அதிகம் வேண்டும் என்கிறான். தான் வாங்கும் பொருள்கள் எல்லாம் மலிவாகக் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். விவசாயி தன் விளைபொருள்கள் எவ்வளவு அதிக விலைக்குப் போகும் என்று எதிர்பார்க்கிறான். தான் வாங்கும் பொருளும், கூலியும் குறைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இதில் சிந்திக்க வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. ஒரு பொருளின் விலை அல்லது பெறுமானம் என்பது அதைத் தயார் செய்ய உண்டான செலவின் மொத்தத் தொகை ஆகும். செலவு கூடக்கூட விலை ஏற்றம் தானாக வந்துவிடுகிறது. இது

புரியாத புதிர் அன்று. இன்று மக்கள் அழுத்தமான சுயநலத்தில் ஊறியவர்களாகவும், சுய காரியப் புலிகளாகவும் இருக்கிறார்கள் என்பதற்கு இது சான்று. மற்ற பொது அம்சங்களையும், தேசநலன்களையும் புறக்கணித்துவிட்டுச் சுயநலனிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவன், போராடுகிறவன், அசுரன். இத்தகைய மனப்பான்மை தனி மனிதனையும் அழித்துவிடும்,தேசத்தையும் பாழ்படுத்திவிடும். தனக்கு வருவதெல்லாம் நிறைய இருக்கவேண்டும், தான் செலவிடுவதெல்லாம் குறைவாக இருக்க வேண்டும். சம்பளம் கூடவேண்டும், வேலை அதிகம் செய்யக்கூடாது என்கிற மனப்பான்மைகள் எவ்வளவு அநியாயம், அறிவீனம். இந்த மனப்பான்மை குடும்பத்தையும் அழித்துவிடும், தேசத்தையும் அழித்துவிடும். உற்பத்தித்திறன் என்று ஒன்றைப்பற்றிப் பேசுகிறார்கள்.புள்ளிவிவரம் அழகானதுதான். அது மனிதனுடைய திறமையை மட்டும் பொறுத்த விஷயமன்று. அது மனிதனின் பொறுப்பு உணர்ச்சியையும்,நல்ல மனப்பான்மையையும் பொறுத்தவை. சாமான்களின் தரம், காலநிலை, தளவாடங்கள் ஆகியவைகளையும் பொறுத்தவை. தொழில் லாபகரமாக நடைபெறுவது தக்க ஆட்கள் வந்து அமைவது என்பதெல்லாம் வெறுமனே பொருளாதார சம்பந்தமில்லாத அந்தந்த மனிதனின் நல்வினைப் பயனையும் பொறுத்தது. வினைப்பயனின் விளைவை நம்மால் தவிர்க்க முடியாது. ஆனால் அதை மனதில் வாங்காது நாம் புதிய நல்வினைகளில் ஈடுபடும்பொழுது அதன் வேகம், சுமை குறைகிறது. நல்வினைகள் ஆற்றிப் பழைய தீவினைப் பயன்களைத் தீர்த்து விடலாம், பயனற்றதாக்கிவிடலாம். இப்படிப் பல அம்சங்களையும் இணைத்துச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். சென்ற இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனி படுதோல்வி அடைந்தது. தேசம் முழுவதும் இடிந்து பாழாகி வாழ்வே சிரமமான நிலை எய்தியது. எப்படியோ ஒரு முறையில்சமாதானம் ஏற்பட்டுக் காரியங்களைப் பார்க்க ஆரம்பித்ததும் அவர்கள் ஒன்றுகூடி ஒரு தீர்மானம் செய்தார்கள். எல்லாரும் தங்கள் சொந்த ஜீவனத்தின் பொருட்டு எட்டு மணிநேரம் பாடுபடுவது, நான்கு மணி நேரம் சம்பளம் இல்லாமல், பிரதிபலன் ஏதும் இல்லாமல் நாட்டைச் செம்மைப்படுத்தப் பொதுக்காரியங்களுக்காகப் பாடுபடுவது என்று திட்டமிட்டுச் செய்தார்கள். விரைவில் அவர்கள் முன்னேற்றமடைந்து விட்டனர். பத்து லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு கட்டடத்தைக் கட்ட சுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் கூலியாகச் செலவிட வேண்டி வரலாம். மீதி ஐந்து லக்ஷம் ரூபாய் செங்கல், சிமெண்ட், இரும்பு ஆகிய சாமான்களின் கிரயம் ஆகும். இந்தச் சாமான்களைத் தயாரிக்க ஆன கூலியின் மொத்தம் ஐந்துலக்ஷம் என்றுபொருள். செங்கல் தயாரிக்க, சிமெண்ட் தயாரிக்க, இரும்பு சாமான் செய்ய, மரச்சாமான் செய்ய என்று எல்லாக்கூலியின் மொத்தத் தொகை தான் சாமான் கிரயம் ஐந்து லக்ஷம் எனப்படுகிறது. இப்போது பாருங்கள்! சாமான் கிரயம் என்பதுகூட கூலி, உழைப்பின் கிரயம்தான் என்பதைப் புரிந்துகொள்வீர்கள். இந்த உலகம், பிரபஞ்சம், பிரகிருதி கர்ம சொரூபம். அது இடையறாது வினையாற்றிக் கொண்டே இருக்கிறது. இந்த வினையின் விளைவாகத்தான் ஜீவர்களின் உயிர் வாழ்க்கை சாத்தியமாகிறது. பொருளாதாரத் தத்துவத்தின்படியும் இவ்வுலகம், வாழ்வு உழைப்பு மயமாக இருக்கிறது. ஜீவன் உழைத்தால்தான் உயரலாம், மேன்மையடையலாம். தேசமும் உயர்வடையும். பொருளாதாரத்தில் மட்டுமன்று, பண்பிலும், ஆத்மீகத்திலும் முன்னேற்றமடையும். அறநெறியான வாழ்வுதான் பண்பாக, ஆத்மீக வாழ்வாகப் பரிணமிக்கிறது. மானுட முயற்சிகள் யாவும், பொருளீட்டுதல், இன்பமாக வாழ முயலுதல் யாவும் தர்மத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும். உழைப்பு, சேமிப்பு, நல்வினைப்பயன் ஆகியவைகளே நமக்கு மேலான செல்வங்கள் ஆகின்றன. மானுட வாழ்வு இடையறாத பூஜையாக, யக்ஞமாக ஆகவேண்டும். சுயநலத்தை வளர்க்கப் போராடவேண்டாம். தேசச் செல்வங்கள் தேச நன்மைக்கே பயன்படட்டும். அவற்றில் நமக்குப் பங்கு வேண்டாம். பொது நன்மையில் தனி நன்மை அடங்கி இருக்கிறது. இதனையுணர்ந்து நம் நாட்டு மக்கள் நேர்மையான தெய்வீக வாழ்வு வாழ்வார்களாக.

குறிப்புகள்

அறச்செயல்கள்

உலகத்துக்கு இயற்கை என்பது ஒரு பெயர். இயங்குவதால் அதற்கு இயற்கை என்று பெயர் வந்தது. இயங்குவதன் மூலம் செயல்கள் நிகழ்கின்றன. அறச்செயல்கள், மறச்செயல்கள் எனச் செயல்கள் இருவகைப்படும். அறச்செயல்கள் அமைதியாக நிகழ்ந்து உயிர்களை உயர்த்தி வருகின்றன. மறச்செயல்கள் அடிதடிக் குழப்பத்தோடு நிகழ்ந்து உயிர்களுக்கு அழிவைத் தந்து வருகின்றன. மறச்செயல்கள் மதத்தின் பெயராலும் நிகழ்வதுண்டு. இன்றைக்குக் கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் மதமாற்றத்துக்காகச் செய்து வரும் செயல்கள் மதத்தின் பெயரால் நிகழும் மறச்செயல்களாகின்றன. புறத்தோற்றத்தில் அறச்செயல்கள் போன்று தென்படுபவைகளெல்லாம் அறச்செயல்கள் ஆகமாட்டா. அச்செயல்களின் அடிப்படை நோக்கம் என்ன என்பதை அறிந்தால்தான் அவைகள் அறச்செயல்களா, மறச்செயல்களா என்பதைத் தீர்மானிக்க முடியும். கிறிஸ்தவர்கள் பள்ளிக்கூடங்கள் நடாத்தி வருகிறார்கள். ஏழைகளுக்கு உணவு, உடை வழங்கியும், பொருளுதவி செய்தும் வருகிறார்கள். வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கிறார்கள். ஆனால் இத்தனை செயல்களையும் மதமாற்றம் என்னும் நோக்கத்தின் அடிப்படையில்தான் செய்துவருகிறார்கள். அது பொருந்தாத செயல். இந்தப் போக்கிலேயே அவர்கள் போவார்களானால் இந்தியாவைக் கிறிஸ்தவமயம் ஆக்கி விடுவார்கள். இந்தியாவுக்கு நல்லது செய்வது போன்று செய்து இந்தியாவுக்குத் துரோகம் செய்வது அக்கிரமச் செயலாகும். துரியோதனன் பாண்டவர்களுக்கு மாளிகையொன்று அமைத்தான். வெளித்தோற்றத்துக்கு அது மாளிகை போன்றிருந்தாலும் அது பாண்டவர்களை அழிப்பதற்காக அமைந்த திட்டமாகும். துரியோதனன் செயல் போன்றதுதான் கிறிஸ்தவர்களுடைய செயல். பாண்டவர்கள் விழிப்புடன் இருந்து அரக்கு மாளிகையிலிருந்து தப்பியது போன்று இந்தியர்கள் விழிப்புடனிருந்து கிறிஸ்தவர்களின் சதித்திட்டத்திலிருந்து தப்பவேண்டும். இந்தியர்கள் ஏமாளிகள் அல்லர் என்பதை அவர்களுக்குத் தெளிவுபட விளக்கிக் காட்ட வேண்டும்.

இந்தியப் பண்பாட்டையும், இந்தியக் கலையுணர்வையும் வளர்ப்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இச்செயலை அமைதியான முறையில் நாம் செய்து வர வேண்டும். பொதுவாக இந்துக்களுக்கு நாட்டுணர்ச்சியும் இல்லை; மத உணர்ச்சியும் இல்லை. ஆசையால் நாட்டுக்கும், மதத்துக்கும் ஆபத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்துக்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள் என்று மற்றவர்கள் அறிந்து கொள்வார்களானால் நம் நாட்டுக்கும், மதத்துக்கும் ஓர் ஆபத்தும் வராது. இன்றைக்கு நம் நாட்டைக் காப்பதும், மதத்தைக் காப்பதும் நம்முடைய அறச்செயல்களாகும். நம் எதிரி நம்மைத் தாக்குவதாக வைத்துக்கொள்வோம். நாம் எதிர்த்துத்தாக்க வலிவற்றவர்களாக இருந்துகொண்டு 'தாக்கிவிட்டுப் போகிறான்' என்று அஹிம்சா தர்மம் பேசுவது அறச்செயலாகாது. நாம் பலவீனர்களாக இருந்துகொண்டு இரக்கம் காட்டுவது மற்றவர்களுக்கோ, நமக்கோ ஒரு பலனையும் அளிக்காது. மத உணர்ச்சியில்லாது மதச்சார்பற்ற நாடு என்று சொல்லிக்கொண்டிருப்தில் நாம் முன்னேற்றம் அடைய முடியாது. நமக்கு மத உணர்ச்சி இல்லாவிட்டால் மத உணர்ச்சி பெற்ற மற்றவர்கள் நம்முடைய பலவீனத்தைப் பயன்படுத்தி நம்மை அழித்துவிடுவார்கள். மத உணர்ச்சி இல்லாத நாம், மதச்சார்பற்ற நாடு என்று சொல்லிக்கொண்டு நமக்கு அழிவைத் தேடிக்கொள்வது அறச்செயலாகாது. மத உணர்வு வேண்டும். மதத்திலுள்ள உண்மைகளை உள்ளபடி அறியவேண்டும். 'ந அயம் ஆத்மா பலஹீனேன லப்ய:'— 'இந்த ஆத்மா பலஹீனனால் அடையப்படுவது அன்று' என்ற கோட்பாட்டை நாம் அறிந்து நம்மைப் பலப்படுத்திக் கொள்ளுதல்வேண்டும். மத உணர்வு பெற்று நம்மைப் பலப்படுத்திக்கொண்டு நம்மிடத்தில் ஐக்கிய உணர்வை வளர்த்துக்கொண்டு மதச்சார்பற்ற நாடு என்று சொல்லிக்கொள்வோம். அப்பொழுது நாம்

சொல்லுவதில் அர்த்தம் உண்டு. நாம் சொல்வதைப் பிறரும் கேட்பார்கள். இப்பொழுது நாம் இருக்கின்ற நிலையில் மதச் சார்பற்ற நாடு என்று சொல்லிக்கொள்வது பரிகாசத்துக்கு உரியதாகும். அப்படிச் சொல்லிக் கொள்வதன் மூலம் நம்மை மேலும் பலஹீனர்களாகவும், உணர்ச்சியற்றவர்களாகவும், ஏமாளிகளாகவும் நாம் ஆக்கிக் கொண்டிருக்கிறோம். இது அறச்செயலாகாது.

நம் நாட்டின் உயிர்நாடி ஆன்மீகத்தில்தான் இருக்கிறது. ஆன்மீகம் நம் நாட்டுக்கு முதுகெலும்பு போன்று இருக்கிறது. ஆன்மீகம் குன்றினால் நம்நாடு அழிந்துபோகும். ஆன்மீகத் துறையில் நாம் ஐக்கிய உணர்வுபெற்று நம்மை உறுதி வாய்ந்தவர்களாக்கிக்கொண்டு, மதச் சார்பற்ற நாடு என்று நாம் சொல்லிக்கொள்வோமாக. மதத்துக்காகக் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் உயிர்கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். இந்துக்களில் நாஸ்திகர்களாக உள்ளவர்கள் மதத்தை அழிக்க முயல்கிறார்கள். இந்துக்களில் ஆஸ்திகர்களாக உள்ளவர்கள் மதத்தைத் தங்களுடைய சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளும் சுயநலக்காரர்களாக இருக்கிறார்கள். சுவாசிக்கின்ற காற்று அனைவருக்கும் சொந்தமாக இருப்பது போன்று மதம் அனைவருக்கும் சொந்தமாகும். மதத்திலுள்ள உயர்ந்த கோட்பாடுகளை அனைவருக்கும் சொந்தமாக்குதல் வேண்டும். மதம் கூறும் உண்மைகளை அறிந்தவர்கள் பிராமணர்கள். அவ்வுண்மைகளை மற்றவர்கள் அறிந்துகொண்டால் தாங்கள் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த முடியாது என்று எண்ணிக் காயத்ரீ போன்ற மந்திரத்தை எல்லாரும் உச்சரிப்பதற்குத் தடை போடுகிறார்கள். இது அறச்செயலாகாது. ஜாதி வேற்றுமை பாராட்டாது, பால் வேற்றுமை பாராட்டாது காயத்ரீ ஜபத்தில் ஆர்வம் உடையவர்கள் எல்லாரும் காயத்ரீ ஜபம் சொல்லலாம். எல்லாரையும் காயத்ரீ ஜபம் சொல்ல வைத்துப் பிராமணர்களாக்கவேண்டும். இது பிராமணர்களுடைய கடமையாகும். இதைச் செய்யாது பிராமணர்கள்தாம் காயத்ரீ ஜபம் செய்யவேண்டும் என்று சொல்வது அறச்செயலாகாது. எல்லாரையும் உயர்த்தவேண்டும். கீழ் நிலையிலுள்ளவர்கள் மேல் நிலைக்கு வந்துவிடக் கூடாது என்ற கீழான மனப்பான்மை உடையவர்கள் தங்களைத் தாங்களே கீழ்மைப்படுத்திக் கொள்பவர்களாகிறார்கள்.

இந்துக்கள் தங்கள் குடும்பத்தைக் காக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். தங்கள் ஜாதியை வளர்க்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். தங்கள் நாட்டைக் காக்கவேண்டுமென்றோ, தங்கள் மதத்தைக் காக்கவேண்டுமென்றோ நினைக்க மறந்துவிட்டார்கள். இந்த மெத்தனமான நிலைதான் மற்ற மதத்தினர்கள் இந்துக்களைக் கொடுமைப்படுத்தும் நிலையை உருவாக்கி இருக்கிறது. இந்துக்கள் ஒவ்வொருவரும் இன்றைக்கு நமக்கு ஏற்பட்டுள்ள நிலையை நன்கு சிந்திக்கவேண்டும். மேலும் நாம் மெத்தனமாக இருக்கக்கூடாது. நம் நாட்டுக்கும், மதத்துக்கும், உலகுக்கும் உரிய அறச்செயல்களில் இந்துக்கள் தீவிரமாக ஈடுபடவேண்டும். இல்லாவிட்டால் உலகெங்கும் அமளி புரளியாகத்தான் இருக்கும். சாந்தத்தையோ அமைதியையோ உலகில் நாம் காண முடியாது.

இந்துக்கள் செய்யவேண்டிய அறச்செயல்கள் யாவை என்பதை ஆராய்வோம். மனிதனைத் தெய்வமாக்கும் வழிபாட்டு முறைகளை நாம் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். தெய்வத்தின் பெயரால் மனிதனுடைய உள்ளத்தில் சுயநலம் புகுந்துவிடக் கூடாது. மனிதன் உள்ளத்தில் சுயநலம் புகுந்துவிட்டால் அவன் தெய்வத்தன்மையைப் பெறமுடியாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத்தில் பூஜைவேலையை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அதற்குரிய சம்பளத்தைப் பெற மறுத்துவிட்டார். பூஜை என்பது தெய்வத்தன்மையை வளர்ப்பதே ஒழிய ஜீவனத்துக்காக அமைந்தது அன்று. ராமகிருஷ்ணர் ஆலயத்தில் பூஜைசெய்யும் காலத்து, வழிபாட்டுக்கு வருபவர்களுடைய உள்ளத்தில் தெய்வத்தன்மையை வளர்த்தார். ஆலயத்தின்கண் அருளை வளர்க்கின்ற முறையில் நம் வழிபாடுகள் அமையவேண்டும். ஆலயத்தில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்களாக இருந்து தெய்வத்தை முற்றும் சார்ந்திருக்கவேண்டும். வழிபாட்டுக்கு வருகின்றவர்களிடம் காணிக்கையை

எதிர்பார்க்காது வழிபாட்டுக்கு வருபவர்களு டைய உள்ளத்தில் பக்தியை வளர்க்கும் பக்த சிகாமணிகளாக அர்ச்சகர்கள் இருக்கவேண் டும். ஆலய வழிபாட்டுக்குச் செல்கின்றவர் கள் ஒழுங்குப்பாட்டையும், அடக்கத்தையும் முற்றும் கடைப்பிடிக்கவேண்டும். கோயிலுக் குள் கூச்சல் போடாது அமைதியான முறை யில் இருந்து வழிபாடு செய்யும் முறையைப் புகுத்தவேண்டும. பக்தியுடன் பஜனை பண்ணு வதும், இறைவனுடைய நாமத்தைச் சொல்லு வதும், தியானம் செய்வதும் முறையாகக் கோயிலில் நிகழ்ந்துவரவேண்டும். விசேஷநாட் களிலும், வாரததில் ஒருநாளிலும் மூலவர் சந்நி தியின் முன் ஓர் ஐக்கிய வணக்கம் நிகழவேண் டும். இத்தகைய வழிபாட்டு முறைகளை ஆல யங்களில் நிகழ்த்த ஆலய நிர்வாகிகள் கருத் துச் செலுத்த வேண்டும். பள்ளி மாணவர்கள் வாரத்துககு ஒரு முறை ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்துவரும் திட்டத்தை ஒவ்வொரு பள்ளியிலும் கட்டாயமாக்க வேண் டும். ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’ என்ற கோட்பாட்டைப் பள்ளி மாணவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

ஆலயத்தில் நிர்வாகம் செய்கின்றவர்கள் தியாகபுத்தி படைத்தவர்களாக இருக்கவேண் டும். தங்களுக்குரிய சொத்துக்களை ஆலயத் திருப்பணிக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற தியாக மனப்பான்மை உடையவர்களாக இருக்கவேண்டும். கோயில் சொத்தை அப கரிக்கும் நோக்க முடையவர்கள் ஆலய நிர்வா கத்தில் இருக்கக் கூடாது. ஆலயச் சொத்தை ஆலயத் திருப்பணிக்காகப் பயன்படுத்தவேண் டுமேயன்றித் தனிப்பட்டவர்களுக்கு உரிமை யாக்கக் கூடாது. தங்களுடைய சொத்தை அருள் நோக்கம் படைத்தவர்கள் அருளை வளர்க்கும் பணிக்காக ஆலயத்துக்கு உரியது ஆக்கினர்கள். இன்றைக்குச் சுயநலக்காரர்கள் சுயநலத்தை வளர்ப்பதற்காகவே அவ் அருட் செல்வத்தைப் பாழ்படுத்தி வருகிறார்கள்.

சமயமும், கல்வியும் தியாகிகளிடம் ஒப் படைக்கப்படவேண்டும். சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் அரசாங்கம் தலையிடுதல் கூடாது. அரசாங்கத்தலையீடு அரசியலை அவற்றில் புகுத்திவிடும். அரசியலுக்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இருக்கக்கூடாது. அறச்செயல்கள் வளர்வதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் பொருளுதவி செய்வதோடு தங்களுடைய அதிகாரத்தையும் ஆக்கரீதியான முறையில் உபயோகப்படுத்த வேண்டும். மதச்சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு மத உணர்ச்சி அற்றவர் களாக இந்துக்களை ஆக்கிப் பிறமதத்தினர்கள் மதவெறி பிடித்தவர்களாக ஆவதற்கு ஆட்சியி லுள்ளவர்கள் துணை செய்யக்கூடாது.

கிறிஸ்தவர்களுக்குள் மதத்துக்காகவென்று தங்களை ஒப்படைப்பவர்கள் குடும்பத் துக்கு ஒருவராவது இருக்கிறார்கள். அந்த நிலை இந்துக்களிடத்தில் இல்லை. மக்களுக் குத் தொண்டு செய்வதில் ஆர்வமும், தியாக உணர்வும் படைத்தவர்கள் நம்மிடையே பெருகி வரவேண்டும். இந்துக்களாகிய நாம் வீட்டுக்கொரு குழந்தை என்றும், சமயத்துக்கு ஒரு குழந்தையென்றும் வளர்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தங்களுடைய வாரிசுக்கு ஒரு குழந்தை இல்லையே என்று வருந்துகின்ற நிலைமாறி, சமயப்பணிக்கு ஒரு குழந்தை இல் லையே என்ற மனநிலை இந்துக்களிடையே வளரவேண்டும்.

தியாகிகளைக்கொண்ட இந்து நிறுவனங்கள் ஏராளமாகத் தோன்றவேண்டும். அவைகள் கல்விப்பணியையும், சமயப்பணியையும சிறந்த முறையில் செய்யவேண்டும். இந்துச் சிறுவர் களும், சிறுமியர்களும் இந்துக் கலாச்சாரத்தில் நன்கு ஊறிவருவதற்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். பெண்கள் கற்பிலும், தியாகத் திலும் நன்கு ஊறி வளரவேண்டும். பெண் களைப் பராசக்தி நிலையில் வைத்து நாம் பெருமைப் படுத்தவேண்டும்.

உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற வேறு பாடு ஒழியவேண்டும். இந்துக்களிடையே பிரா மணர்கள், பிராமணர்களல்லாதார்கள் என்ற வேறுபாட்டுணர்ச்சி உள்ளத்தை விட்டு அகல வேண்டும். பிராமணர்கள் தங்களை உயர்ந்தவர் களென்று எண்ணிக்கொண்டிருக்கின்ற எண் ணத்தை ஒழிக்கவேண்டும். பறையனாக இருந் தாலும், சக்கிலியனாக இருந்தாலும் அவர்கள் நம் சகோதரர்கள் ஆவார்கள் என்ற எண்ணம் பிராமணர்களுக்கு ஏற்படவேண்டும். ‘ஒன்றே

குலமும் ஒருவனே தேவனும்' என்ற கோட்பாட்டை இந்துக்கள் நிருபித்தாக வேண்டும். மத உணர்வு படைத்தவர்களுக்குத்தான் இந்தக் கோட்பாட்டின் உண்மை விளங்கும். மத உணர்வோடு பரந்த மனப்பான்மையும், அஹங்காரமற்ற நிலையும் இருக்கவேண்டும். நம் நாட்டுக்குத் தேவையான கல்வியும், தொழிலும் எது என்பதை அறிந்து அதை வளர்க்க வேண்டும். ஆன்மீகக் கல்வியும், நவீன விஞ்ஞானக் கல்வியும் கலந்தே நம் கல்வித்திட்டத்தில் இடம் பெறவேண்டும். கிராம வாழ்க்கையைப் புறக்கணிக்கக் கூடாது. கிராம மக்களுக்கு உலகியல் அறிவையும், உண்மையான மத வழிபாட்டையும் வழங்குவதற்கு நாம் முற்படவேண்டும்.

இந்து மதத் தலைவர்கள் மக்களுடைய உள்ளத்தில் சகோதர மனப்பான்மையையும், சமரச மனப்பான்மையையும் வளர்க்கப் பாடுபட வேண்டும். இந்து மதத் தலைவர்கள் யாவரும் ஒன்றுபடவேண்டும். இந்து மதக்கொள்கைகளைப் பரப்புவதற்கும் அவற்றின்படி மக்களை நடாத்துவதற்கும் அவர்கள் செயல் திட்டங்களை வகுக்கவேண்டும். மக்கள் தங்களைப் பூஜிக்கவேண்டுமென்று எண்ணாது மக்களைத் தெய்வங்களாகப் பாவித்து அவர்களுக்குத் தொண்டு செய்யவேண்டும். சமுதாயப்பணியைச் சமயப்பணியாகக் கருதி சமுதாயப் பணிசெய்வதில் தீவிரமாக ஈடுபடவேண்டும். இது வரையிலும் பொதுமக்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தது பெருங் குற்றமாகும். அக் குற்றத்தை உடனடியாகப் போக்க மதத் தலைவர்கள் செயல்பட வேண்டும். பொது மக்களோடு அவர்கள் தாராளமாகப் பழக வேண்டும். அவர்கள் தங்களை எதற்கும் அடிமைப்படுத்திக் கொள்ளக்கூடாது. தங்கள் மீது யாரும் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக் கூடாது. பட்டம் பதவியிலோ, சுக போக வாழ்விலோ அவர்களுக்கு நாட்டம் இருக்கக்கூடாது. மக்களுக்குப் பணிவிடை செய்வதில் ஆர்வம் மிக உடையவர்களாக இருக்க வேண்டும். வீண் பேச்சுக்கோ, சோம்பலுக்கோ இடம் தராது தவ வாழ்வில் அவர்கள் தீவிரமாகச் சென்று கொண்டிருக்க வேண்டும். பிரம்மச்சரியமும், தெய்வ நம்பிக்கையும் அவர்களிடத்து ஜ்வலித்துக்கொண்டு இருக்க வேண்டும். நான் மடாதிபதி என்ற ஆணவம் உள்ளத்தில் புகுந்துவிட இடம் தரலாகாது. 'நான் கடவுளின் தொண்டன். கடவுளின் சொருபங்களாக இருக்கும் மக்களின் தொண்டன்' என்பதை அடிக்கடி அவர்கள் சிந்தித்து வர வேண்டும். சிந்தையைத் தெய்வத்துக்குரிய தாக்கி, சொல்லை இனியதாக்கி, காயத்தை மக்கள் தொண்டுக்காக்கித் திரிகரணங்களைச் சேவைக்கே அர்ப்பணிக்கவேண்டும். தியாகிகளையும் தூய்மை படைத்தவர்களையும் உருவாக்கும் பணியில் இந்து மதத் தலைவர்கள் கவனம் செலுத்தவேண்டும். தியாகிகளும், தூய்மை உடையவர்களும் இந்துக்களிடையே பெருகி வருவார்களானல் அதுதான் இந்து மதத்துக்கு அழியாத பாதுகாப்பாகும். தியாகிகளும், தூயவர்களுமே நாட்டுக்கு அறச்செயல்கள் செய்ய முடியும். அறப்பணி ஓங்க, உலகுக்கு நலன் விளையத் தியாகிகளும், தூய்மையாளர்களும் பெருகி வருவார்களாக!

செய்திகள்

நிகழ்பவை

15-5-82 சனிக்கிழமை வடஆற்காடு ஜில்லா துரிஞ்சிபுரத்திலுள்ள புஷ்பகிரி ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி கோவிலிலும், 16-5-82 ஞாயிற்றுக்கிழமை வட ஆற்காடு ஜில்லா ஆம்பூரிலுள்ள அருள்மிகு நாகநாத சுவாமி ஆலயத்திலும், 17-5-82 திங்கட்கிழமை வடஆற்காடு ஜில்லா குடியாத்தம் வேதாந்த பாடசாலையிலும் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒருநாள் அந்தர்யோகங்கள் நடாத்துவார்கள்.

16-5-82 ஞாயிற்றுக்கிழமை மதுரை ஜில்லா திருமங்கலம் ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனத்தில் **ஸ்ரீமத் போதானந்த சுவாமிகள்** ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

திருப்பராய்த்துறை ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுலத்தில் மே மாதம் 30ஆம் தேதி புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய தேர்வு நடைபெறும். இது சம்பந்தமான விவரங்களை வைகாசி மாதத் தர்ம சக்கரம் அட்டை இரண்டாம் பக்கம் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

மஹாபாரதம்	பிரசார விலை ரூ.		7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,,	...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,,	...	5-50
இராமாயணம்	,,	...	5-00
தினசரி தியானம்	,,	...	4-00
கர்மயோக விளக்கம்		...	10-00
ஞானயோக விளக்கம்		...	8-00
ராஜயோக விளக்கம்		...	8-00
பரமஹம்சரின் பெருமை		...	6-00
விவேகானந்த விவரணம்		...	4-00
விவேகானந்த உபநிஷதம்		...	4-00
கடவுளின் வடிவங்கள்		...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		...	3-50
அனுஷ்டான வேதாந்தம்		...	3-00
எதிர்கால இந்தியா		...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்		...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை		...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்		...	2-00
தாயுமானவர் இயற்றிய			
கருணாகரக் கடவுள்	விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம்	ஷை	...	3-00
சின்மயானந்த குரு	ஷை	...	3-00
ஆனந்தமானபரம்	ஷை	...	3-00
சுகவாரி	ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	...	3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை	...	2-50
பரசிவ வணக்கம்	ஷை	...	1-00
பஜனைப் பாடல்கள்		...	2-50
கண்ணன் என்னும் கடவுள்		...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்)	...	2-00
விரதவீரர் பீஷ்மர்	ஷை	...	1-50
விபீஷணன் சரணகதி	ஷை	...	1-50
பரமஹம்சர் பாமாலை		...	1-50
அமரநாத யாத்திரை		...	1-25
சந்நியாசி		...	1-25
இறைவணக்கம்		...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்		...	1-00
சகோதரி நிவேதிதை		...	1-00
இராவண தத்துவம்		...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	...	1-00
தவப்புதல்வர்கள்	,,	...	1-00
ஏகலைவனின் குருபக்தி	,,	...	1-00
தானவீரன் கர்ணன்	,,	...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		...	1-00

மார்க்கண்டேயன்	(நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன்	நாடகம்	ரூ.	1-00
தபோபலன்	,,	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்		...	1-00
நோய்க்கு இடம் கொடேல்		...	1-00
ஆத்ம சக்தி		...	1-00
*ஆலய வழிபாடு		...	0-75
*சக்தி தத்துவம்		...	0-70
*சிவதத்துவம்		...	0-70
*மனிதனது நிஜசொருபம்		...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு		...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்		...	0-60
சைவன் யார்?		...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?			0-50
*கணபதி		...	0-40
வர்ணாச்ரம தர்மம்		...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		...	0-30
கந்தர் அநுபூதி		...	0-25
The Bhagavad Gita (11th Imp.)		...	24-00
Tirukkural (with plastic cover)		...	8-00
The Indian National Education		...	8-00
Ramakrishna Lives Vedanta		...	8-00
Facets of Brahman or The Hindu Gods		...	5-00
Daily Divine Digest (DELUXE)		...	4-50
Daily Divine Digest (Ordinary)		...	2-50
Mahabharata	(with plastic cover)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity	,,	...	6-00
Ramayana	,,	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram		...	4-00
The Bhagavad Gita (Small Size)		...	4-00
Siva Sahasranama Stotram		...	3-50
Bheeshma The Superman		...	3-50
Hinduism Hosts Christianity		...	3-00
Holy Bible—In the Light of Vedanta		...	1-50
Reminiscences of Master Mahashaya		...	1-50
*Introducing the Gita		...	1-50
The Garland of Paraaparam		...	1-50
The Student		...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami		...	1-00
The Nursery School		...	1-00
The School		...	1-00
The Teacher		...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 4-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

DHARMA CHAKRAM Regd. No. M. 6022

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.